விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 01 புதன்கிழமை (15.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

## மேலதிக முகாம் அகற்றப்பட வேண்டும்



(கொழும்பு)

வடமாகாணத்தில் இருந்து படைத்தரப்பினரை முற்றாக அக

24ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் நிதியத்திற்கு ஏகமனதாக அங்கீகாரம்

### ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய வரைபு மீண்டும் சபையில் அங்கீகரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரின் நிதியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், புதிய அரசு அங்கீகாரம் வழங்குமா? என்பது முதலமைச்சர் நிதிய சட்டத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து நான்காவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது. இதன் போதே

24ஆம் பக்கம் பார்க்க....

## வலம்புரி பிரதம ஆசிரியருக்கு விளக்க கடிதம் அனுப்ப முடிபு

### வடக்கு அமர்வில் நேற்று தீர்மானிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பில் பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு விளக்கம் அளித்து கடிதம் அனுப்புவது என வடக்கு மாகாண சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து நான்காவது அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது.

இதன்போது கடந்த மாகாண சபை அமர்வில் வலம்புரி பத்திரிகையில் 25.05.2016 அன்று வெளி

24ஆம் பக்கம் பார்க்க....

## 30 நிமிட சபை அனுமதிக்கு 15 நிமிட விவாத இழுபறி!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின், போக்குவரத்து அதிகார சபை நியதி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு 30 நிமிடங்கள் வழங்குவதா இல்லையா என்பதை 15 நிமிடங்கள் வரை விவாதித்து அந்த முப்பது நிமி டத்தை அமைச்சருக்கு வழங்கியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்

24ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கு என்றால் பாராமுகம் ஏன்?

## பிரிவினை காண்பிப்பதாக சிவாஜி சாடல்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் அழிவு நடைபெறும் போதெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு அதிக உதவித்திட்டங்களை மேற்கொள்ளும் அரசாங்கம் வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட போதிலும் எந்தவொரு உதவித்திட்டத்தினையும் முழுமையாக வழங்கவில்லை என சாடிய வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இந்த வேற்றுமையே மத்தியிலிருந்து வடக்கு மாகாணம் தனியாக பிரித்து வைக்கப்பட்டுள்ளதை காட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும்

### இலங்கை மீதான அமெரிக்காவின் நிலைப்பாட்டை தெரிவித்தார் நிஷா

(வாசிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீற

23ஆம் பக்கம் பார்க்க....



## தற்கொலை அங்கி; மேலுமொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் மறவன்புலவு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் முன்பு கடமையாற்றிய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கடந்த 11ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மறவன்புலவு பகு

23ஆம் பக்கம் பார்க்க....

## 127.5 கோடி ரூபா பெறுமதியான

### 91 கிலோ கிராம் கொக்கேன் மீட்பு

### ஜனாதிபதி மைத்திரி நேரில் பார்வையிட்டார்



24ஆம் பக்கம் பார்க்க....

## காட்டிக்கொடுத்த கைத்தொலைபேசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் உள்ள வீட்டுக்குள் கடந்த திங்கட்கிழமை இரவு நுழைந்து திருட முற்பட்ட திருடனை அவனது கைத்தொலைபேசி காட்டிக் கொடுத்துள்ளது.

அதனையடுத்து, குறித்த சந்தேக நபரை நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சந்தேகநபர் வீட்டின் ஜன்னல் வழியாக தனது கைத்தொலைபேசியில இருந்த விளக்கின் ஊடாக (லைட்) வீட்டிலிருந்த பொருட்களை

23ஆம் பக்கம் பார்க்க....




## 46 கிலோ கஞ்சாவுடன் கைதான இருவரின் பிணை மனு நிராகரிப்பு

### நீதிபதி இளஞ்செழியன் இறுக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலையில் வைத்து கடந்த 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி 46 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களின் பிணை விண்ணப்பத்தை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நிராகரித்து தீர்ப்பளித்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த காலித்தீன் மொகமட் சப்ராத் மற்றும் சுபைர முகமட் ரியாஸ் ஆகிய இருவருமே பெருமளவு கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் முன்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயா-மோடி நேற்று சந்திப்பு



தமிழக சட்ட சபைக்கு கடந்த மாதம் நடந்த தேர்தலில் அ.தி.மு.க

23ஆம் பக்கம் பார்க்க....

## அளுத்கம கலவரங்களின் போது முஸ்லிம் நபரை தாக்கியதற்கு மன்னிப்பு கோரியது பொலிஸ்

(கொழும்பு)

கடந்த 2014 ஆம் ஆண்டு அளுத்க பகுதியில் சிங்கள-முஸ்லிம் மக் களுக்கு இடையே ஏற்பட்ட கலவரங்களின்போது முஸ்லிம் நபர் ஒருவரை புத்த விகாரை யொன்றுக்கு கொண்டு சென்று தாக்கிய சம்பவம் குறித்து பொலிஸாரினால் நேற்று உச்ச நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரப்பட்டது.

பொது பல சேனா அமைப்பின் தலையீட்டுடன் முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட போது தன்னை அளுத்கம பகுதியில் அமைந்துள்ள புத்த விகாரையொன்றுக்கு கொண்டு சென்று கடுமையாக தாக்கியதாக மனுவை

24ஆம் பக்கம் பார்க்க....

# பேராசிரியர் அழகையா துரைராஜா

## அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு வைபவம்



2016 (11.06.2016 ற்குரியது)

காலம் : 17.06.2016 வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

**பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவு மண்டபம்**

தலைவர் : பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா
நினைவுப் பேருரை : கதிர்காமநாதன் கணேசநாதன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி நிரல்

01. மங்கல விளக்கேற்றல்
02. இறைவணக்கம்
03. பேராசிரியரின் நிழற்படத்திற்கு மலர்மாலை அணிதல்
04. தலைவர் உரை
05. அதிபர் உரை
06. பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவுப் பரிசில் வழங்கல்

அ. 2015 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன் செல்வன் கலாமணி மதனாகரன் ( யா/ நெல்லியடி மத்திய கல்லூரி ) அவுஸ்திரேலியாவிலுள்ள பொறியியலாளர் திரு பாலசிங்கம் மாணிக்கவாசகர் அவர்களின் நிதியத்தில் இருந்து வழங்கப்படுகின்றது )

ஆ. 2015 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதத்துறையில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன் செல்வன் பாஸ்கரன் நிசாந் (அவுஸ்திரேலியாவிலுள்ள பொறியியலாளர் திரு முருகுப்பிள்ளை ஞானானந்தன் அவர்களின் நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்றது.)

07. நினைவுப் பேருரை (தலைமைத்துவம்)
08. நன்றியுரை
09. கல்லூரிக் கீதம்


*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பொ. குகதாஸ் (செயலாளர்)
பழைய மாணவர் சங்கம்
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(சி-4885)

# மரண அறிவித்தல்

## ஸ்ரீபதி திலகராஜசிங்கம்



இளைப்பாறிய இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தரும், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் புளியங்கண்டு பிள்ளையார் கோவில், முருகமூர்த்தி ஆலய உரிமையாளரும் ஆகிய பாலா என்று அழைக்கப்படும் திலகராஜசிங்கம் அவர்கள் 14.06.2016 அன்று அன்னாரின் வல்வெட்டி இல்லத்தில் வன்னிச்சியம்மன் தாள் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமசேது - ரோஜா தம்பதிகளின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீபதி (சிவகொழுந்து) - மகேஸ்வரி தம்பதிக்ளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சோதிரட்னத்தின் அன்புக்கணவரும், புஸ்பராணி (போனிக்கா - கனடா), செல்வராணி (பேபி - இந்தியா), இந்திராணி (பவா-கனடா), ஜெயராணி (ஜெயா - கனடா), தர்மராணி (சாந்தி - கனடா), திருச்செந்துரன் (ஸ்ரீ - கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற சின்னத்தம்பி (கிராமசேவகர்), சோதிலிங்கம் (கனடா), அமுதலிங்கம் (லண்டன்), யோகேஸ்வரசர்மா (கனடா), சிவசுப்பிரமணியம் (இந்தியா), சண்முகரட்னம் (கனடா), விசித்திரமூர்த்தி (கனடா), உதயரட்னம் (கனடா), குணரட்னம் (கொழும்பு), இன்பராஜா (வல்வெட்டி), சின்னத்தம்பி (கனடா) கிருஸ்ணகோபால் (சுவிஸ்), ரேவதி (கனடா), சரஸ்வதி (கனடா), மகேஸ்வரி (இலங்கை), ஜெயராணி (கனடா), ருக்மணி (சுவிஸ்), மாலினி (கனடா), குலமாலதி (கனடா), பூங்கோதையம்மா (வல்வெட்டி), சிவகலை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவசக்தி (கனடா), பிரகதீஸ்வரன் (கனடா), கௌரீஸ்வரி (கனடா), நிரஞ்சன் (ஜேர்மனி), பிரதீபன் (ஜேர்மனி), பிரியா (கனடா), நிசாந்தன் (கனடா), மதுரா (கனடா), சுகேஷினி (கனடா), சுரேமினி (கனடா), நிசோத் (கனடா), சுபாசினி (கனடா), நிஷாந் (கனடா), Joy (கனடா), ஜோதிரவி (கனடா), கிருபா (கனடா), சேகர் (நியூசிலாந்து), சுதா (கனடா), மதிவதனா (லண்டன்), அனுசன் (லண்டன்), யதுஷன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், வசந்தரூபி (கனடா), சசிகுமார் (டுபாய்), ராஜ்குமார் (கனடா), பிரதீப்குமார் (கனடா), பிரசாந்தி (இலங்கை), பிரியா (கனடா), லலித் (கனடா), சுபா (கனடா), ருகினா (சுவிஸ்), ஷாருகா (கனடா), ஸ்ரீபிரகாஸ் (கனடா), செந்துரி (கனடா) ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும், பாலிகா, விக்னேஷ், ஸ்ரீஜா, ஸ்ரீகரன், சஞ்சய், ரிஷி, ஜிவானி, லக்ஷிகா, சாஜகி, லவன், வைஷ்ணவி, வசிகரன், இனியா, பிந்து, சுருதி, அரண்யா, மிதுன், மாதுரி, அஸ்வின், அபிலாஷ், நிலா, கிஷானா, மாயா, அக்ஷயன், அபிஷா, அபினாஷ், சோதியா, விதுஷா, யனுன், நயோமி, அவந்திகா, லாவண்யா ஆகியோரின் அருமைப்பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று 14.06.2016 செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்

021 205 5164

(C-4889)

# ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தப் பெருமானின் மகோற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் "இந்துவாக வாழ்வோம்" செயற்றிட்டத்தின் ஒரு பகுதியான பாடசாலை மாணவர்களுக்கான பஜனை நிகழ்வு சம்பந்தமாக யாழ்.மாவட்ட பாடசாலைகளில் சங்கீதம், சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் மதியம் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை இடம்பெறும்.

இந் நிகழ்வானது வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வுக்கு குறித்த ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (செ)

# சட்டவிரோத சிறுநீரக வியாபாரம்; ராஜ்குமாரிடம் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாக இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள ராஜ்குமார் ராவ் எனும் பிரதான சந்தேக நபர் இலங்கையில் நடைபெற்ற சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இதனை ஆராய்வதற்கு சிறப்பு பொலிஸ் குழுவொன்று விரைவில் இந்தியா செல்லவுள்ளதாக கொழும்பு குற்ற புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்தது.

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாக கொழும்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு இந்திய பிரஜைகள், நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பொலிஸார் இதனை அறிவித்தனர்.

இதன்போது மேலும் கருத்துக்களை தெரிவித்த பொலிஸார், கடநத சில ஆண்டுகளாக இலங்கையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களுக்கு சிறுநீரக அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவித்தனர்.

கொழும்பில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைகளில் இவை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவித்த பொலிஸார், இந்த அறுவை சிகிச்சைகளுடன் தொடர்ப்புடைய ஆவணங்கள் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அறிவித்தனர்.

இதன்படி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஏழு இந்திய பிரஜைகளை, வரும் 22-ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். அன்றையதினமே அவர்களின் பிணை மனுக்கள் ஆராயப்படுமென்றும் நீதிபதி அறிவித்தார். (செ-12)

# ஹெகலியவிடம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் வாக்கு மூலம் ஒன்றை அளிப்பதற்காக நேற்று ஆஜராகியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 200 மில்லியன் ரூபாய் மருத்துவ செலவுகளுக்காக பெற்றுக் கொண்டமை குறித்து இதன்போது விசாரணை நடத்தப் பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து முன்னாள் ஜனாதிபதியின் செயலாளராக கடமையாற்றிய லலித் வீரதுங்கவிடம் கடந்த மாதம் விசாரணை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

**பகிரங்க ஏல விற்பனை**

இடம் :- யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை
நேரம் :- மு.ப 9.30 மணி

**பொருட்கள்**

- Wheel Barrow - 01
- Computer Chair - 03
- ஒரு தொகுதி புத்தகங்கள்

- அதிபர்

(4948)

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

**ஏல விற்பனை**

இடம் :- பாடசாலை அலுவலகம் முன்புறம்
காலம் :- 2016.06.24 பி.ப 01.30 மணிக்கு

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்.

| | | |
|---|---|---|
| 01. மாணவர் மேசைமரம் | - | 05 |
| 02. பாலர் மேசை இரும்பு | - | 05 |
| 03. அலுவலக மேசை | - | 01 |
| 04. ஆசிரியமேசை | - | 01 |

அதிபர்

(4947)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**பரிசு 10,00,000/= உட்பட பல பரிசுகள்**

யாழ் மாவட்ட முகவர் S.K திலகவதி ஊடாக பத்து லட்சம் உட்பட பல பரிசில்கள்.

- கொவி செத 11.06.2016 ல் 10,00,000/= யாழ் முகவர் கனகலிங்கம்.
- டெலக்சபதி 10.06.2016 ல் 2,00,000/= நெல்லியடி முகவர் சசிகரன்.
- சம்பத் ரேகா 05.06.2016 ல் 1,00,000/= சுன்னாகம் முகவர் சண்முகதாஸ்.
- யாதிகசம்பத் 28.05.2016 ல் 1,00,000/= மருதனார்மடம் முகவர் திருவருட்செல்வன்.
- மகாஜனசம்பத் 26.05.2016 ல் 1,00,000/= அச்சுவேலி முகவர் கிருஷாந்.

ஆகிய முகவர்களின் விற்பனை மூலம் வெல்லப்பட்டு உள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
S.K. திலகவதி, முகவர்

(4949)

## அஸ்மா - பீனசம் - சுவாசக் கோளாறுகளுக்குச் சிறப்புச் சிகிச்சை

உணவு, காலநிலை மற்றும் ஒவ்வாமை போன்ற காரணங்களால் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வளர்ந்தோர்களுக்கு அடிக்கடியும் நீண்ட காலமாகவும் மூக்கு, நாசி, தொண்டை, சுவாசப் பாதைகளில் சளிப்பிடித்தல் (Chronic Cough and Chest cold), மூக்கடைப்பு, மூக்கில் நீர் அல்லது சளிவருதல், சுவாசக்கஷ்டம், வறட்டு இருமல், இரவில் இருமலுடன் இழுப்பு ஆரம்பித்தல் (Astatic Wheezing) இளைப்பு, களைப்பு மற்றும் பீனசப் பாதிப்புக்களான (Sinus Allergy) கண், காது, நாசி, தொண்டைப் பகுதியில் அரிப்பு, அடுக்குத்தும்மல், மூக்கில் சதை அடைப்பு (Nasal Polyp), மூக்கில் மண உணர்வின்மை, சுவையின்மை, தலைப் பாரம், கண்குத்து, தலை வலி (Migraine), பலவீனம், உற்சாகமின்மை போன்ற கோளாறுகளுக்கு நீண்ட காலமாக ஆங்கில மருந்துகள் மூலம் சிகிச்சை பெற்றும் சுகம் பெற முடியாதவர்களுக்கும் சித்த ஆயுள்வேத சிகிச்சைகள் முறைகள் மூலம் நிரந்தர நிவாரணம் பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


### அரச ஊழியர்கள் சம்பளத்தை அதிகரிக்கத்திட்டம்

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை இரு மடங்காக அதிகரிப்பதற்கு அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் அரச சேவைத் துறையினரின் அடிப்படைச் சம்பளம் 11.730 ரூபாவிலிருந்து 24.230 ரூபா வரை அதிகரிக்கும் என அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (இ-10)




# சரணடைந்தோர் விபரங்களை வழங்க அமைச்சு அக்கறை கொள்ளவில்லை

## பாதுகாப்பு தரப்பு மீது பரணகம பரபரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் பெயர், விபரங்களை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரியிருந்த போதிலும் இதுவரை அதனை வழங்க அமைச்சு அக்கறை கொள்ளவில்லை என்று காணாமல் போனோர் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.**

இந்தப் பெயர் பட்டியல் கிடைக்கப்பெற்றிருந்தால் காணாமல்போனோர்ஆணைக் குழுவின் விசாரணைகள் ஓரளவிற்கு முற்றுப் பெற்றிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அடுத்தமாதம் கலைக்கப்படவிருக்கும் நிலையில் அதன் தலைவர் மக்ஸ்வல் பரணகமவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று நடத்திய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிடம் இந்தப் பட்டியலை வழங்குமாறு நாங்கள் கேட்டிருந்த போதிலும் அவை இதுவரை கிடைக்கவில்லை. எனினும் முறைப்பாட்டாளர்களின் விபரங்களை விசாரணை செய்த பின்னர் இரண்டாம் தரப்பினரை விசாரணை செய்யும் போது எப்படியாவது அந்தப் பட்டியலை பெற்றுக்கொள்வதற்கே எதிர்பார்த்திருந்தோம்.



அதேபோல இந்தியா, ஐரோப்பா உள்ளிட்ட வெளிநாடுகளிலுள்ள அகதி முகாம்களில் வாழும் இலங்கையர்கள் தொடர்பான விபரங்களையும் அந்தந்த நாடுகளிடம் இருந்து கோரியிருந்தோம். எனினும் பாதுகாப்பு மற்றும் சட்டதிட்டங்களை சுட்டிக்காட்டி அவர்கள் அதனைத் தருவதற்கு மறுத்துவிட்டனர்.

நிச்சயமாக அந்தப் பட்டியல் கிடைத்திருந்தால் விசாரணைகளுக்கு பேருதவியாக அமைந்திருக்கும். அத்தோடு சிறைச்சாலைகள் திணைக்களம், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலும் அவ்வாறான பட்டியலைக் கோரியிருந்தோம். அவற்றில் வைத்தியசாலைகளில் இருந்து பட்டியல் கிடைக்கப்பெற்றது. அதில் 15 ஆயிரம் பெயர்கள் காணப்படுகின்றன. சிலரது பெயர்கள் புனை பெயர்களாக காணப்படுவதால் தேடிக்கண்டுபிடிப்பதற்கு சிரமமாக இருக்கின்றன.

அதேவேளை ஒரேயொரு விசாரணைக் குழுவே எங்களுக்கு அரசாங்கம் வழங்கியிருந்தது. அதில் நால்வரே உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த காலத்திலிருந்து விசாரணைக் குழுவொன்றை அமைக்கும்படி கோரிக்கை விடுத்திருந்த போதிலும். அக்கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கமே நிறைவேற்றியது.

எவ்வாறாயினும் முறைப்பாட்டாளர்களின் சாட்சியங்களை விசாரணை செய்வதில் எமது விசாரணைக் குழு பாரிய சிரமங்களை எதிர்கொண்டது. குறித்த சாட்சியாளர் ஒருவர் முறைப்பாடு செய்தால் அதனுடன் தொடர்புபட்ட மற்றைய முறைப்பாட்டாளர்கள் பிறிதொரு பகுதியில் இருப்பார். எனவேதான் விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டது என அவர் மேலும் விளக்கமளித்தார். (இ-10)

## நான் நாட்டுக்குத் தேவையானவற்றை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் உள்ளேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு

மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காக அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவன்றி நாட்டுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் சர்வதேச தொடர்புகளை பிழையாக சித்தரித்து வரும் அரசியல் எதிர்த்தரப்பினர், உலக வல்லரச நாடுகள் நாட்டை ஆக்கிரமிப்பதற்கு அரசாங்கம் இடமளித்துவருவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பூகோள செயற்பாடுகளில் இலங்கை - 2015 ஜனவரி முதல் கடந்து வந்த பாதை என்ற கருப்பொருளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற புலமைத்துவ கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

## துறைமுக நகரம்;ஐரோ.பாராளுமன்றில் முறைப்பாடு

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் துறைமுக அபிவிருத்தி திட்டம் தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மத்திய நிலையத்தின் சார்பாக இன்று இந்த முறைப்பாடானது ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இதன் ஒருங்கிணைப்பாளர் வேக் கந்தவெல ராகுல தேரர் தெரிவித்தார். (இ-10)

## குழந்தைகள் தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் 2 இலட்சம் சிறுவர்கள் உயரம் குறைந்தவர்களாக உள்ளதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் 3 இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் மெல்லிய தோற்றத்துடன் காணப்படுவதாகவும் யுனிசெப் நிறுவனத்தின் ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 4 மில்லியனுக்கு அதிகமான இலங்கை சிறுவர்கள் இரத்த சோகை நோயிற்கு உள்ளாகியிருப்பதாகவும் யுனிசெப் நிறுவனத்தின் வைத்தியர் காமினி ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை சிறுவர்களின் விளையாட்டு நடவடிக்கைகள் குறைந்துள்ளமையால் அவர்கள் சிறுவயதிலே பல்வேறு நோய்களுக்கு உள்ளாவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

### அறிமுகமாகிறது எஸ்.எல்.எஸ். தலைக்கவசம்

மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்களுக்கு எஸ். எல். எஸ். தரமொன்றை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.

குறித்த எஸ். எல். எஸ் தரத்தினை செப்டெம்பர் மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளது.

இறக்குமதி செய்யப்படும்மற்றும்இங்கு உற்பத்தி செய்யப்படும் தலைக் கவசங்கள்எஸ் எல் எஸ் 517 தரத்தை உடைய தாக இருக்க வேண் டும் என அமைச்சு அறிவித்துள்ளது. (இ-10)


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

## Special Treatment for Gastric Ulcer


சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

சொதப்பலான களத்தடுப்பு, சாமுவேல்ஸின் அபார இன்னிங்ஸால்

# மேற்கிந்தியத் தீவுகளிடம் வீழ்ந்தது ஆஸி



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் நேற்று நடந்த 5ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்ய அழைக்கப்பட்ட அவுஸ்திரேலிய அணி 40 ஓவர்களில் 196/2 என்று இருந்த நிலையில் எளிதில் 300 ஓட்டங்களை எடுத்திருக்க வேண்டும். ஆனால் பின்னால் பவுண்டரிகள் வரத்து வறண்டு போனதால் 50 ஓவர்களில் 265/7 என்று மட்டுப்படுத்தப்பட்டது.

வெற்றியிலக்கைத் துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிளெட்சர் (27), சார்ள்ஸ் (48) ஆகியோர் 9.5 ஓவர்களில் 76 ஓட்டங்கள் என்ற அதிரடி தொடக்கம் கொடுத்தனர். குறிப்பாக முதல் 4 ஓவர்களில் 40 ஓட்டங்கள். பிறகு மார்லன் சாமுவேல்ஸ் 87 பந்துகளில் 8 பவுண்டரிகள் 4 சிக்சர்களுடன் 92 ஓட்டங்கள் விளாசி ஓட்ட எண்ணிக்கை 240 ஆக இருந்த போது ரன் அவுட் ஆனார். அடம் ஷாம்பாவின் பந்தில் தொடர்ச்சியாக 3 சிக்ஸர்கள் விளாசியிருந்தார் சாமுவேல்ஸ்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் 45.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 266 ஓட்டங்கள் எடுத்து அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் அடம் ஷாம்பா 7 ஓவர்களில் 3 பவுண்டரிகள் 6 சிக்ஸர்களைக் கொடுத்து 60 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**கவாஜா நழுவவிட்ட இரண்டு பிடிகள்**

ஆந்த்ரே பிளெட்சர் 4 ஓட்டங்களில் இருந்தபோது மிட் ஓனில் அடிக்க அங்கு தாழ்வாக வந்த பிடியை பிடிக்கத் தவறினார் கவாஜா. பிறகு சார்ள்ஸ் 36 ஓட்டங்களில் இருந்த போது டீப்பில் மீண்டும் கவாஜா ஒரு வாய்ப்பை நழுவவிட்டார்.

முன்னதாக அவுஸ்திரேலியாவை துடுப்பாட்டம் செய்ய அழைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் ஹோல்டர் அருமையான எழும்பிய பந்தின் மூலம் முதல் ஓவரில் ஆரோன் பின்ச்சை காலி செய்தார். அதன் பிறகு ஸ்மித், கவாஜா இணைந்து 34 ஓவர்களில் ஓட்ட எண்ணிக்கையை 171 ஓட்டங்களுக்கு கொண்டு சென்றனர்.

ஸ்மித் 74 ஓட்டங்களுடன் பிராத்வெய்ட்டிடம் பிடி கொடுத்து வெளியேறினார். முழுதும் கட்டுப்பாட்டுடன் ஸ்மித் ஆடினார் என்று கூறமுடியாது.

கவாஜா 123 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 98 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆகி வெளியேறினார். கடைசியில் ஜோர்ஜ் பெய்லியின் நிதானத்துடன் கூடிய 55 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா 265 ஓட்டங்களை எட்டியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஜேசன் ஹோல்டர் அருமையாக வீசி 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பிராத்வெய்ட் 60 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பொலார்ட் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சுனில் நரைன் 10 ஓவர்களில் 44 ஓட்டங்களைக்களை கொடுத்தாலும் அதில் 2 பவுண்டரிகள் ஒரு சிக்சரை மட்டுமே கொடுத்தார். ஆஸி அணியின பவுண்டரி வறட்சிக்கு இவரும் ஒருகாரணம்.

ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் சாமுவேல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத்தொடரின் 6ஆவது போட்டி மேற்கிந்தியத் தீவுகள் - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் சென். கிட்ஸில் இன்று நடைபெறுகிறது. (க)

# வீழ்ந்தது ஐரோப்பாவின் போர்க்களம்



யூரோ கிண்ண கால்பந்து தொடரை இத்தாலி அணி வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது.

பிரான்ஸில் ஐரோப்பிய அணிகள் பங்கேற்கும் 15ஆவது 'யூரோ' கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

லியான் நகரில் நடந்த 'ஈ' பிரிவு லீக் போட்டியில் உலக தரவரிசைப் பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ள பெல்ஜியம், இத்தாலி (12ஆவது இடம்) அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே இத்தாலியின் அனுபவ கோல் காப்பாளர் புபான் அரணாக விளங்கினார். போட்டியின் 11ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் ராட்ஜா உதைத்த பந்தை, புபான் அருமையாக தடுத்தார். 32ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் லியானர்டோ தந்த 'பாசை' பெற்ற ஜியாசெரினி கோலாக்கினார். இதனால், இத்தாலி அணி முதல் பாதியில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

**வீணான வாய்ப்பு**

பெல்ஜியத்துக்கு 53 ஆவது நிமிடத்தில் சிறப்பான கோல் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ருமேலு லூகாகு அடித்த பந்து, கோல் போஸ்ட்டுக்கு வெளியே செல்ல வாய்ப்பு வீணானது. போட்டியின் 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் (90+2) கிராசியானோ பெல்லே ஒரு சுப்பர் கோல் அடிக்க, இத்தாலி ரசிகர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். பந்தை அதிக நேரம் வசப்படுத்தியிருந்த பெல்ஜிய வீரர்களால் கடைசி வரை ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில் இத்தாலி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

**பழி தீர்த்தது**

கடந்த ஆண்டு நவம்பரில் பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில் நடந்த நட்பு போட்டியில் இத்தாலி 1:3 என்ற கணக்கில் பெல்ஜியத்திடம் வீழ்ந்தது. இதற்கு தற்போதைய வெற்றியின் மூலம இத்தாலி பழி தீர்த்தது.

**முதல் வீரர்**

யூரோ கிண்ண தொடரில் இத்தாலி அணிக்காக களமிறங்கிய மூத்த வீரர் (38 வயது, 136 நாள்) என்ற பெருமை பெற்றார் கோல்காப்பாளர் புபான். (க)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பாலசிங்கம்

**சமாதான நீதவான்**

**(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்)**

**தண்ணீரூற்று, முள்ளியவளை.**

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் தண்ணீரூற்றை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வித்தியானந்தக் கல்லூரி அதிபரும் முல்லை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய வேலுப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் 2016.06.14ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் திருமதி மிதுனா சுரேஷ் (லண்டன்), அபராஜிதன் (லண்டன்), ஜெகஜீவன் (அரச கால்நடை வைத்திய அதிகாரி- ஒட்டுசுட்டான்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 2016.06.16 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தண்ணீரூற்றில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தண்ணீரூற்று முள்ளியவளை** (C-4890) **தகவல் குடும்பத்தினர்**

# வெள்ளையடிக்குமா இந்தியா?

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. இதில், அசத்தும் பட்சத்தில் இந்தியா ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்யலாம்.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்திய அணி ஏற்கெனவே தொடரை கைப்பற்றிய நிலையில், 3ஆவது ஒரு நாள் போட்டி இன்று ஹராரேயில் நடக்கிறது.

**மாற்றம் வருமா**

இந்திய அணிக்கு ராகுல் (100, 33) பலமான அடித்தளம் அமைக்கிறார். கருண நாயர், ராயுடு தங்கள் பணியை கச்சிதமாக செய்கின்றனர். இத்தொடர் இளம் வீரர்களுக்கானது என்பதால், இன்று பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். ராகுலுக்கு இன்று ஓய்வு கொடுத்தால், கருண் நாயருடன் அறிமுக வீரர் பைஜ் பைசல் ஆரம்பம் கொடுக்கலாம். தோனியின் தலைமைத்துவம் சிறப்பாகவே உள்ளது.

**பரிதாப நிலை**

சிம்பாப்வே அணி பரிதாபமான நிலையில் இருக்கிறது. பீட்டர் மூர், மசகட்சா, சிபாபா என அனைவரும் சொதப்புகின்றனர். ஆரம்பமே மோசமாக இருப்பதால் தான், பின்வரிசை வீரர்களும் தடுமாறுகின்றனர். சிபாண்டா மட்டும்தான் பொறுப்புடன் செயல்படுகிறார்.

அணித் தலைவர் கிரீமர் பந்துவீச்சில் ஏமாற்றுகிறார். தங்கள் பங்குக்கு சிக்கந்தர், சட்டாராவும் ஜொலிக்க மறுக்கின்றனர்.

இதையெல்லாம் தகர்த்தெறிந்து இன்று எழுச்சி பெற்றால்தான் ஆறுதல் வெற்றியையாவது பெறலாம். (க)

# கலால் திணைக்கள ஊழியர்களால் அரசாங்கத்திற்கு சிவப்பு சமிக்ஞை

ஒரு வருடத்தில் சுமார் 100 பில்லியனுக் கும் அதிகமான இலாபத்தை அரசாங்கத்திற்கு ஈட்டித் தரும் இலங்கை கலால் திணைக்கள த்தின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு பெற்றுத் தராவிடின் அதிகபட்ச தொழிற்ச ங்க நடவடிக்கையொ ன்றுக்குச் செல்லவுள் ளதாக திணைக் கள த்தின் கூட்டு தொழிற்சங் கங்களின் ஒன்றியம் அரசாங்கத்திற்கு சிவப்புச் சமிக்ஞை விடுத்து ள்ளது. தற்பொழுது இத் திணைக் க ளத் தில் மனித வளம், பௌதீக வளம் உட்ப ட பல்வேறு குறை பாடுகள் நிலவுவதாக வும் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

அரசாங்கத்திற்கு இலாபம் தேடிக் கொடு க்கும் ஏனைய அரச நிறுவனங்களைக் கவ னிப்பது போன்று இத்திணைக்களத்தையும் கருத்தில் கொள்ளுமாறு ஒன்றியம் அரசாங் கத்தைக் கோரியுள்ளது. (இ-10)


## வல்வை ந. அனந்தராஜ் அவர்களின் உருவாக்கத்தில்

விலை 300/-





விலை 275/-

"பாடசாலை நூலக முகாமைத்துவம்"
மற்றும்
"கல்வி நிர்வாக முறைமைகள்"

ஆகிய இரு கல்வியியல் நூல்களின்

**வெளியீடும் நயவுரையும்**

இடம்:- யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, பேராசிரியர் துரைராஜா மண்டபம்
காலம்:- 16.06.2016 (வியாழக்கிழமை) பிற்பகல் 4 மணி
தலைவர்:-திரு.சி.நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்)
முதன்மை விருந்தினர்:- திரு.இ.இரவீந்திரன் (செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர், விவகார அமைச்சு, வடமாகாணம்.)

பாடசாலை நூலக முகாமைத்துவம்!
மற்றும் கல்வி நிர்வாக முறைமைகள்

நூல் வெளியீட்டுரை:- திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள் (பிரதம நிறைவேற்று அதிகாரி, ஆறுதல் நிறுவனம்)

நூல் நயவுரைகள்:
1. திரு. சி.உதயகுமார் அவர்கள் (பாடசாலை நூலக முகாமைத்துவம்)
2. பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் (கல்வியியல் முறைமைகள்)

ஏற்புரை:- திரு.ந.அனந்தராஜ், நூல்களின் ஆசிரியர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஏற்பாட்டுக்குழு.



## நன்றி நவில்கின்றோம்

### அமரர் சண்முகராசா சந்திரேஸ்வரி

கனடாவில் 06.06.2016 இல் காலமாகிய சண்முகராசா சந்திரேஸ்வரி அவர்களின் மரணச்செய்தி அறிந்து அன்னாரின் பெறாமகளாகிய உருத்திரபுரம், D10 இலக்கம் 2 வீட்டிற்கு வந்து ஆறுதல் வார்த் தைகள், அனுதாபங்கள் தெரிவித்த நல்லுள்ளங் கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 02, D 10
உருத்திரபுரம்
077 132 0244

தகவல்:
அன்ரன், ராணி
குடும்பத்தினர்.

(சி-4886)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை கலைப்பீடம்

**நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்), மொழிபெயர்ப்பு கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2015/2016**

**தகுதிகாண் பரீட்சை**

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை செய்முறை | 15.06.2016<br>16.06.2016<br>17.06.2016<br>20.06.2016<br>21.06.2016<br>22.06.2016<br>23.06.2016<br>24.06.2016<br>27.06.2016<br>28.06.2016<br>29.06.2016<br>30.06.2016 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| நடனம் செய்முறை | 15.06.2016<br>16.06.2016<br>17.06.2016<br>20.06.2016<br>21.06.2016<br>22.06.2016<br>23.06.2016<br>24.06.2016<br>27.06.2016<br>28.06.2016 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் | செய்முறைப் பரீட்சை<br>28.06.2016<br>29.06.2016<br>30.06.2016<br>01.07.2016 | சித்திரமும் வடிவமைப்பும் அலகு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| | எழுத்துப் பரீட்சை<br>02.07.2016 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | மு.ப. 9.30 மணி |
| மொழி பெயர்ப்புக் கற்கை நெறி | எழுத்துப் பரீட்சை<br>03.07.2016 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்<br>சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகம், கல்லடி, மட்டக்களப்பு<br>கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி, மட்டக்களப்பு | பி.ப. 2.00 - பி.ப. 5.00 மணி |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/ அனுமதிகள் கிளையுடன் 021 222 6714 என்ற தொலைபேசி எண் வழியாக தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
15.06.2016

(சி-4883)

## இராசி பலன்

15.06.2016
(ஆனி 01, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
தசமி முற்பகல் 9.11 மணிவரை
சித்திரை முன்னிரவு 9.54 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சுக் |
| கேது | சந்திராஷ்டமம் உத்தரட்டாதி, ரேவதி காலை 8.54 இற்கு துலாம்-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

வளவன்

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்க ளில் கூடுதல் கவனம் தேவை, சேமிப்பில் சிறிது கரையலாம்.

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோ சங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேர லாம், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டு பேசுவீர்கள், நன்மை கள் நாடி வரும் நாள், பொரு ளாதார நிலையில் முன்னேற் றம் காண்பீர்கள்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முய ற்சி எடுக்கும் நாள், அலுவல கப் பணிகள் துரிதமாக நடை பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறி முகம் கிடைக்கும், பெற் றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** வழிபாடுகளில் ஆர்வம் காட்டு வீர்கள், செயற்பாடுகளில் தீவி ரம் காட்டுவீர்கள், சான்றோர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் ஒற்று மையாக இருக்கும் நாள், ஊக் கத்தோடு பணிபுரிவீர்கள், சிந்தி க்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் கிடைக்கும்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியா தையும் உயரும் நாள், வீட்டுக் குத் தேவையான பொருட் களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக் களை யோசித்து ஏற்பது நல் லது, சுப செலவுகள் அதிக ரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தான வருடாந்த உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் வழமை போல் ஆலயத்திற்கு வரும் அடியவர்களுக்கான அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே ஆலயத்திற்கு செல்லவுள்ள அனைத்து அடியவர்களும் அன்றைய தினம் காலை 7 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மக்களுக்கான போக்குவரத்து வசதிகளும் பருத்தித்துறையில் இருந்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆலயத்திற்கு செல்வோர் தொலைபேசிகள், புகைப்படக்கருவிகள் என்பனவற்றை எடுத்துச் செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 078-914 3019, 077 172 7818, 077 656 9940 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (இ-5)

# இன ஒற்றுமைக்கு சீனா என்றும் உதவும்

## அந்நாட்டு தூதுவர் யாழில் வாக்குறுதி




(யாழ்ப்பாணம்)

**இலங்கையிலுள்ள சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தவும் மற்றும் பொருளாதார ரீதியில் இலங்கையை கட்டியெழுப்புவதற்கான உதவிகளை வழங்கவும் தாம் எப்போதும் தயாராக இருப்போம் என சீனநாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜி ஸியாங்லியாங் தெரிவித்துள்ளார்.**

முதற்தடவையாக யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சீன நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜி ஸியாங்லியாங் அடங்கிய 4 பேர் கொண்ட குழுவினர் நேற்றையதினம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் மத்திய அரசாங்கத்தினால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பிலும் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பிலும் மத்திய அரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்ட சீனத் தூதுவர் இலங்கை தொடர்பான தமது நாட்டின் கொள்கையில் எவ்விதமாற்றமும் இல்லை என்றும் சகல விடயத்திலும் தொடர்ந்தும் தாம் உதவிகளை வழங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெகு விமரிசையாக இடம்பெற்ற போது... (படங்கள்:-ஐங்கரன்)

## கலை கலாசார வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பிரதேச செயலக கலாசார அதிகாரசபையானது கலை கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் நடத்தும் "மனிதநேயப் பண்புகளால் மேம்பட்ட ஒழுக்கமான கலாசார மனிதனை உருவாக்கல்'' என்ற கருத்துரை நிகழ்வானது நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துரையினை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் வழங்கவுள்ளார்.

மேற்படி கருத்துரை நிகழ்வில் இளைஞர் சேவை மன்றம், சிறுவர் கழகங்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கலை மன்றங்கள், மதநிறுவனங்கள், விளையாட்டுக்கழகங்கள், கிராமமட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் மற்றும் அனைத்து ஆர்வலர்களும் கலந்து கொள்ள முடியும். (இ-5)

## மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டத்திற்குட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-5-136)

## மக்கள் கருத்தறியும் குழுவின் இறுதி அறிக்கை கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவின் இறுதி அறிக்கையை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஆகியோரிடம் மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான சி.தவராசா நேற்று முன்தினம் கையளித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதன் பின்னர் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பாக மக்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக மக்கள் கருத்தறியும் குழு உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த குழு தமது பணிகளை நிறைவு செய்து தமது இறுதி அறிக்கையை அரசியலமைப்பு பேரவையிடம் சமர்ப்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## முதியோர்களுக்கான ஆன்மீகச் சுற்றுலா

முதியோர்களுக்கான ஆன்மீக சுற்றுலா ஒன்று நாளை வியாழக்கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து 20 முதியவர்களும் யாழ்.மாவட்டத்தில் இருந்து 10 முதியவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 20 முதியவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இவ் ஆன்மீக சுற்றுலா புதூர் நாக தம்பிரான் கோயிலுக்கும் அதைத் தொடர்ந்து அங்கு உள்ள கிறிஸ்தவதேவாலயத்திற்கும் சென்ற பின்னர் கைதடி முதியோர் இல்லத்தில் முடிவுறும். கைதடி முதியோர் இல்ல பொறுப்பதிகாரிகளும் இச் சுற்றுலாவில் கலந்து கொள்ளவுள்ளனர். இச்சுற்றுலா மாலை 6 மணிக்கு நிறைவடையும். (இ-7)

யாழ்.செய்திகள்

## இரு நூல்களின் வெளியீட்டுவிழா

ந.அனந்தராஜ் எழுதிய கல்வியியல் தொடர்பான பாடசாலை நூலக முகாமைத்துவம் மற்றும் கல்வி நிர்வாக முறைமைகள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி பேராசிரியர் துரைராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ

## முனி கோவில் அலங்கார உற்சவம்

யாழ்.இருபாலை கிழக்கு கந்தசுவாமி (முனி கோவில்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

27.06.2016 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெற்று மாலை முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரவுள்ளார். (இ-5)

## நன்மாணாக்கருக்கான விருது வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்த ஆண்டு நன்மாணாக்கருக்கான விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 12 ஆசிரிய மாணவர்கள் நன்மாணாக்கருக்கான விருதினை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை லயன்ஸ் கழக ஆளுநரும் கல்லூரியின் சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினருமாகிய லயன்.வை.தியாகராசா கலந்து கொண்டு நன்மாணாக்கருக்கான விருதினை வழங்கினார். (இ-9)

# 2016 இல் 5 மாதங்களில் மட்டும் 1144 பேர் வாகன விபத்தில் பலி

(கொழும்பு)

**இந்த வருடத்தில் கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் வாகன விபத்தில் ஆயிரத்து 144 பேர் உயிரிழந்துள்ளனர்.**

போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு பிரதி பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வருடத்தினை விட இந்த வருடத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ராஜபக்ஷ அவசியம் இல்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கையாள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முழுமையான ஆளுமை இருக்கிறது.

எனவே கோத்தபாய ராஜபக்ஷவை இரண்டாம் நிலை தலைவராக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவசியம் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து ள்ளது.

கிராமியத்துறை பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன் இதனை தெரிவித்துள்ளார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செய லாளராக செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால, பலதேர்தல்களில் வெற்றிகளையும் பெற்றுக்கொடுத் துள்ளார்.

அத்துடன் அவர் 40 வருட அரசியல் அனுபவத்தையும் கொண்டுள்ளார். எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கட்டியெழுப்ப இன்னும் ஒரு ராஜபக்ஷ அவசியம் இல்லை என்று ஹரிசன் தெரிவித் துள்ளார்.

செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அர்ஜுன் மகேந்திரனுக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவி வழங்கப்படாவிட்டால் சர்வதேச மட்டத்தில் வேறு ஒரு பதவி கிடைக்கும்.

எனவே, ஆளுநர் பதவி இல்லையென்பதால் அவரைப் பொறுத்தவரை அது பாரிய பிரச்சினையில்லை என்றும் ஹரிசன் தெரிவித்துள்ளார். (இ-10)

## இணுவில் கந்த சுவாமி கோவில்



**இன்று ஆறாம் திருவிழா (15.06.2016)**

கந்தனை நம்பியோர்– என்றுமே கைவிடப்பட்டார்.
சீதனங்கள் பேசி– கோடி சொத்துக்களை மதிப்பிட்டு
ஆதன டாப்புப் பார்த்து– அவை அத்தனையும் ஆய்ந்து பார்த்து
பொருத்தமும் பார்த்து– பலா பலன்களெல்லாம்
சரிபார்த்து விருப்பமும் கேட்டு...
வடிவழகெல்லாம் ஸ்கைப்பிலே பார்த்து தேதியும் குறிச்சு...
திருமண நாள் நிச்சயித்த
சேதி ஒன்று வருது– அங்க அவர்
சிற்றிசன் தானாம்... ஆனா...!
அங்க அவருக்கொரு லிங்காம்...!
எப்பவுமே என்னை கைவிடான்
என்– இணுவைக் கந்தனுக்கே
இப்பவே அவனுக்கு நேத்தி வைக்கிறேன்
தப்பினாள் என்ர பிள்ளை– பார்த்த
தோட்டக்கார தம்பியே கட்டட்டும் தாலிய...

சண் ஜெகன்

அனுசரணை: ஆறாம் திருவிழா உபயகாரர்கள்

# வாகன விபத்தில் இளைஞன் படுகாயம்

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்துடன் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் ஒருவன்படுகாயமடைந்த நிலையில்யாழ்போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் இமையாணன் கலைமகள் சனசமூக பகுதியைச் சேர்ந்த இராசையா கேசவந்தன் (வயது-24)என்பவரே படுகாயமடைந்தவராவார். இச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் வல்லைச் சந்திக்கு அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு இடைப்பட்ட வயல்வெளி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-60)

# ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு; 6 இலட்சம் தபால்கள் முடக்கம்

(கொழும்பு)

தபால் சேவை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் 6 இலட்சத்திற்கும் அதிகமான தபால்கள் கொழும்பு மத்திய பரிமாற்று நிலையத்தில் முடக்கியுள்ளதாக தபால் சேவைகளின் ஒன்றிணைந்த தொழிற் சங்க சம்மேளனம் கூறியுள்ளது.

தபால் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். மேலதிக நேர கொடுப்பனவை மீள வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவை ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சிந்திக்க பண்டார கூறியுள்ளார்.

குறிப்பாக தபால் சேவைக்கு ஊழியர்களை உள்ளீர்ப்பு செய்வது மற்றும் ஊழியர்களுக்கான பதவி உயர்வு என்பன பல வருடங்களாக உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனவும் சிந்திக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் முகாமைத்துவ பிரிவில் காணப்படும் குளறுபடிகள் காரணமாகவே இந்த நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் தபால் ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தபால். தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் கலீம் மொஹமட் ஹசீம் நேற்று முன்தினம் கூறியிருந்தார். (இ-10)

# பரிசளிப்பு நிகழ்வும் ஸ்தாபக தின விழாவும்

யாழ்.சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் ஸ்தாபகர் தின விழாவும் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்த ராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் யாழ். சின்மய பாரதி வித்தியாலய பழைய மாணவி திருமதி பவானி ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# காவலாளி வேண்டும்

(கரணவாய்)

திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் நெல்லியடி பழைய சந்தையின் கட்டடத் தொகுதிக்கு நிரந்தர இரவுக் காவலாளி ஒருவரை நியமிக்குமாறு நெல்லியடி வர்த்தக சங்கம் கரவெட்டி பிரதேச சபைச் செயலாளரை கோரியுள்ளது. (இ-60)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:29<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5930 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5981 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 65 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, M Eng/ பொறியியளாளர் நியூசிலாந்து<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5931 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 36 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5982 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15 செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5933 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 55<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:chatered, ACCA, HNDA/ கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5986 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 3 சூரிசெவ் 6 இல்<br>உயரம்:- 180cm<br>தகைமை/தொழில்:A/Lகட்டார்<br>தொ.இ: B/5934 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 68 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/5987 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



முல்லைத்தீவு அளம்பில் கிராமத்தில் உள்ள புனித அந்தோனியார் தேவாலய திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. இதன் போது திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெற்று ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இதன் போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மீள்குடியேறிய குடும்பங்களுக்கு 15 ஆயிரத்து 439 வீடுகள் தேவை

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள 15 ஆயிரத்து 439 கும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த யுத்தம் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறியதை தொடர்ந்து அவர்களுக்கான வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், கடந்த 2009ஆம் ஆண்டு முதல் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதாவது 41 ஆயிரத்து 631 வீடுகள் தேவையாக காணப்பட்டன. இதில் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் 26 ஆயிரத்து 192 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 15 ஆயிரத்து 439 வீடுகள் அமைக்கப்பட வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

2016ஆம் ஆண்டில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக ஆயிரத்து 35 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அவற்றுக்கான நிதி யொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் 750 வீடுகள் கட்டித்தருவதற்கு உறுதி மொழிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இன்னும் சில வெளிநாட்டு உதவிகளுடன் மேலும் சில வீடுகள் கிடைப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன எனவும் தெரிவித்த மாவட்ட அரச அதிபர் மீள் குடியேறியுள்ள 63 வீதமான மக்களின் வீட்டுத்தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இன்னும் 37 வீதமான மக்களின் வீட்டுத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

மாகாண மட்ட

## கராத்தே போட்டியில் இரண்டாம் இடம்



(புதுமுறிப்பு)

மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த போட்டியில் கிளி.இந்து கல்லூரி மாணவன் அ.நிரோஜன் இரண்டாம் இடத்தைப்பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

யாழ்.சென ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ரெனுஜன் என்ற மாணவன் இப்போட்டியில் முதலாமிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-307)

# 67 மாணவர்கள் பாடசாலை கல்வியைவிட்டு இடைவிலகல்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்குப்பகுதியில் 67 மாணவர்கள் பாடசாலை கல்வியை விட்டு இடை விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின்நகர்ப்புறப் பாடசாலைகள் தவிர்ந்த பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்கள் பாடசாலைக்கல்வியை விட்டு இடை விலகும் நிலை காணப்படுகின்றது.

குடும்பங்களில் நிலவும் வறுமை, தொழிலின்மை, குடும்ப வன்முறைகள், பொருளாதார பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் இவற்றுக்கு காரணமாக அமைவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கிளிநொச்சி இராம நாதபுரம் கிழக்குப்பகுதியில் 67 மாணவர்கள் பாடசாலைக்கல்வியைவிட்டு இடைவிலகியுள்ளதாகவும் இவர்களை மீள இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கிளிநொச்சி வலயக்கல்வித் திணைக்கள நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (2-281)

# இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் குறித்து தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்

## கிளி.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

பளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பல காலமாக இருப்பதாகவும் அதனை உரிய அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருப்பதாகவும் அப்பகுதி மக்களால் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது.




இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் ஈ.தயாரூபனைதொடர்பு கொண்டு வினவிய போது,

பயன்பாட்டிற்கு உதவாத நிலையில் காணப்படும் இரு சக்கர உழவு இயந்திரங்கள் தொடர்பில் எம்முடன் தொடர்பு கொள்வதன் ஊடாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக பளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 21 கமக்கார அமைப்புகளுக்கும் தலா ஒரு இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலதிகமாக கமநல சேவை அமைப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு மானிய அடிப்படை ல் 10 இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இரண்டு சக்கர உழவு இயந்திரங்களுக்குரிய பணத்தை தவணை முறையில் அவர்கள் செலுத்தி வருகின்றனர்.

எம்மால் வழங்கப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரங்களின் பாவனை முறையை நாம் அவதானித்துவருகின்றோம்.

இருப்பினும் அது தொடர்பான முறைப்பாடுகள் எவையும் எமக்குதெரியப்படுத்தினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (2-9)

# வவுனியாவில் பாரம்பரிய உணவு விற்பனை நிலையம் ஒன்று திறப்பு

வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிமனையின் ஏற்பாட்டில் ஐரோப்பிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) மாவட்ட அபிவிருத்திக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி (EU-SDDP) அனுசரணையுடன்பாரம்பரிய உணவு விற்பனை நிலைய மொன்று கடந்த 6ஆம்திகதி A9 வீதியில் வவுனியா புதிய பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையத்தில் மாகாண விவசாய பணிமனையினால் உருவாக்கப்பட்ட பண்ணை பெண்கள் விவசாய அமைப்பை சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள்.

அவற்றில் கூடுதலானோர் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது முற்றுமுழுதாக உள்நாட்டு உற்பத்தி பொருட்களை பயன் படுத்தி உடனடியாக உணவை தயாரித்து விற்பனை செய்யும் நிலையமாக இயங்கி வருகின்றது. இங்கு தயாரிக்கப்படும் உணவுகளில் சுவையூட்டிகள், நிறமூட்டிகள். பழுதுபடாமல் இருப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் என்பன தடைசெய்யப்பட்டவையாகும். நம்மிடமிருந்து அகன்று செல்லும் நம் மூதாதையரின் உணவுகளான ஒடியல் கூழுடன் தற்கால அவசர உலகில் மலிந்து வரும் நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றுக்கான உணவுகளான குரக்கன்பிட்டு, இலைக் கஞ்சி, குரக்கன் கஞ்சி, அறுகம்புல்பானம், வல்லாரை பானம் போன்றவை இதன் சில சிறப்புணவுகளாகும். வவுனியா மாவட்டத்தில் பெண்கள் முன்னேற்றத்தில் இது ஒரு மைல் கல்லாக அமையும் என்பதும் வவுனியா மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# போக்குவரத்து பொலிஸார் முன்னெடுக்கும் செயற்பாட்டினால் விபத்துக்கள் ஏற்படலாம்

## சாரதிகள் கவலை

வவுனியாவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொள்ளும் சில செயற்பாட்டினால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயநிலை காணப்படுவதாக சாரதிகள் பலரும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வாகன சாரதிகள் சிலர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் அதிகரித்து வரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த போக்குவரத்து பொலிஸாரின் தேவையும் கடமையும் அவசியமானது. ஆனால் வவுனியாவில் இரவு மற்றும் மாலை வேளைகளில் உள் வீதிகளில் காணப்படும் அபாயம் மிக்க வளைவுகள் மற்றும் வாகனம் நிறுத்த முடியாத குறியீடுகள் போடப்பட்டுள்ள இடங்களில் மறைந்திருக்கும் போக்குவரத்து பொலிஸார் திடீரென பாய்ந்து வாகனங்களை மறிப்பதுடன் சாரதிகளுடன் கடும் போக்கிலும் செயற்பட முற்படுகின்றனர். இதனால் பின்னால் வரும் வாகனங்கள் அபாயமிக்க பகுதிகளில் திடீரென நிறுத்தப்படும் வாகனத்துடன் மோதி விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இது தவிர, சாரதிகள் மது போதையில் வருகிறார்களா என்பதை அறிய வாய்ப்பகுதியை மணந்து பார்ப்பதற்காக மேற்கொள்ளும் சில செயற்பாடுகள் கூட அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக சாரதிகள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் ஆட்டோ சாரதி ஒருவரின் வாயைப் போக்குவரத்து பொலிஸார் மணந்தபோது ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து ஆட்டோவில் பயணித்த இளைஞன் ஒருவன் மீது போக்குவரத்து பொலிஸார் தாக்குதல் நடத்தியமையும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)








சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு வாரம் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை கவனயீர்ப்பு பேரணி புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமான பேரணி புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வரை சென்று விழிப்புணர்வு கூட்டமொன்றும் இடம்பெற்றது. இதில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் மாணவர்கள் மற்றும் மக்கள் என பலர் கலந்து கொண்டு புகைத்தல் மற்றும் மதுவுக்கெதிரான கண்டனங்களை முன்வைத்திருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம், மல்லாவி செய்தியாளர்)

# பராமரிப்பின்றி காணப்படும் காணியினுள் கொட்டப்படும் கழிவுப்பொருட்களால் துர்நாற்றம்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா சிறுவர் இல்லத்திற்கு அருகிலுள்ள பராமரிப்பின்றி காணப்படும் காணி ஒன்றினுள் மாம்பழங்களின் கழிவுகள், விளாம்பழங்களின் கோதுகள், உணவுப்பொருட்கள், மரக்கறி கழிவுகள் என்பன கறுப்பு பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டு நாளாந்தம் வாகனங்கள் மூலம் குறித்த காணியினுள் பரந்தளவில் கொட்டப்பட்டு வருவதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு நாளாந்தம் கொட்டப்படும் கழிவுப் பொருட்களினால் ஈக்கள், புழுக்கள் அவ்விடத்தில் பெருக்கெடுப்பதால் துர்நாற்றம் வீசுவதாக அவ்வழியாக பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

இவ் வளாகத்திற்கு அருகில் மகாதேவா சிறுவர் இல்லம், கிளி/இந்துக்கல்லூரி, குருகுல ஆச்சிரமம் என்பன இருப்பதனால் இக் கழிவுப் பொருட்களிலிருந்து ஈக்கள் பெருக்கெடுத்து அருகிலுள்ள பாடசாலை சிறுவர் இல்லத்தின் சமையல் அறைகளுக்குள் உள்ள உணவுகளில் இவை இக் கிருமி தொற்றுக்களை கொண்டு சென்று சிறுவர்கள் உண்ணுகிற உணவுகளில்அமர்ந்து பாரியளவிலான தொற்று நோய்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையினால் கிளிநொச்சி மாவட்ட சுகாதார பரிசோதகர்கள் அவ்விடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டு இக்கழிவு பொருட்களை அவ்விடத்தில் இருந்து எடுக்கப்படவில்லையென்றால் பாரியளவிலான தொற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-27)




# ராணுவ ட்ரக் வாகனம் மோதி இருவர் படுகாயம்



வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, ஏ9 வீதி, தாண்டிக்குளத்தில் இராணுவ ட்ரக் வாகனம் மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும் யுவதியும் படுகாயமடைந்த நிலையில் நேற்றுக் காலை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து ஏ-9 வீதி ஊடாக யாழ்.நோக்கிச் சென்ற இராணுவ ட்ரக் வண்டி தாண்டிக்குளம் பகுதியில் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து யாழில் இருந்து வவுனியா நோக்கி வந்த மோட்டார்சைக்கிளுடன்மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் வவுனியா இரணை இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த தஹிரா (வயது -24), கபூர் பசூர் (வயது -24) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த விபத்து இடம்பெற்றமை தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவ்விடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப கோரிக்கை

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிளிலும் இடம்பெற்று வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளை கட்டுப்படுத்தி ஒரு இளைய தலைமுறையினை பாதுகாப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்துக் காணப்பட்ட சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் குறைவடைந்து காணப்பட்ட போதும் தற்போது இச்செயற்பாடுகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக தர்மபுரம். புளியம்பொக்கணை, பெரியகுளம், உருத்திரபுரம், பன்னங்கண்டி, வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் காணப்படுகின்றன.

இதனால்திண்ம வயதுடையவர்கள் மதுபாவனைக்கு அடிமையாவதுடன் அவர்கள் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனைவிட கூடுதலான குடும்ப பிணக்குகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளை தடுத்து எதிர்காலத்தில் சிறந்த சமுகம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஏற்ற வழிவகைகளை செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# கிளி. மாவட்டத்தில் மலேரியா பரிசோதனை தொடரும்

## வைத்திய கலாநிதி ம.ஜெயராசா தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு 49838 பேருக்கு மலேரியா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி பிராந்திய மலேரியா கட்டுப்பாட்டு இயக்கத்தின் மருத்துவ பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ம.ஜெயராசா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "கிளிநொச்சி மாவட்டத்தில் 2013க்கு பின்னர் மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வைத்தியசாலைக்கு காய்ச்சல், சாதாரண சிகிச்சைகளுக்காக வருகின்ற நோயாளிகளிடமிருந்து குருதிப் படலங்கள் பெறப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் கடந்த 2015ஆம் ஆண்டு 49 ஆயிரத்து 838 பேரிடம் இவ்வாறு இரத்தப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட யாரும் கண்டறியப்படவில்லை. எனினும் தொடர்ச்சியாக மலேரியா தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும என அவர் மேலும் தெரிவித்தார்.

# மலேசியாவில் முதன்முறையாக மாவட்ட ஆணையாளர்களுக்கான பயிற்சி நெறிகள்

இலங்கையை சேர்ந்த சாரண மாவட்ட ஆணையாளர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி மற்றும் நிர்வாகம் தொடர்பான பயிற்சிகள் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இன்று முதல் எதிர்வரும் 20 வரை உலக சாரணர் சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை சாரணிய சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இச்செயலமர்வில் இலங்கை சாரணர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மாவட்டங்களைச் சேர்ந்த 29 மாவட்ட ஆணையாளர்கள், 7 உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் இருந்து மாவட்ட ஆணையாளர், கிளிநொச்சி இந்துக்கல்லூரி அதிபர், உதவி மாவட்ட ஆணையாளர் ந. மதுராகன், கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆசிரியர் க.துற்ஜெயந்தன், கிளிநொச்சி முக்கொம்பன் அ.த.க ஆசிரியர்ஆகியோர்பங்கேற்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(2-15)






யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்: கு.கஜரூபன்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## உப்பிலாங்கொடி



**Botanical Name-** Mimosa paniculata
**Family-** Leguminosae

இது வெப்பமுள்ள பிரதேசங்களில் பரம்பல் அதிகமாக காணப்படுகிறது. இது ஓர் ஏறு கொடித் தாவரமாகும். இதன் தண்டு மெல்லியதாகவும் இலை அரை அங்குலம் நீளமாகவும் முட்டை வடிவாகவும் சிறிது தடிப்பாகவும் உடைத்தால் உடைபடுவதாகவும் இருக்கும். இது யாழ். மாவட்டத்தில் நாவற்குழி, மட்டுவில் ஆகிய இடங்களில் பரம்பல் அதிகம். வேறு முட் தாவரங்களில் படர்ந்து ஏறு கொடியாக காணப்படும்.

இதனுடைய இலை, கொடி, வேர் அனைத்தும் மருத்துவக் குணங்கள் நிறைந்தவை.

இம்மூலிகையில் சிறிது கார்ப்பு சுவை காணப்படும்.

பெரும்பாலும் குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம், பால்பாலாக் கழிதல், காய்ச்சல் இவைகள் நீங்கும்.

*பிள்ளையின் மந்தபேதி பேராத*
*ரூட்சையும் போம்*
*வெள்ளை செயுந் தங்கத்தை*
*மென்மலராற் றொள்ளைபுரி*
*வேளூ நடுங்குவடி வேலை நிகர்*
*கூர்விழியாய்*
*நாளுமுப்பி லாங் கொடியி னால்*

மாந்தத்தினால் வயிறு உப்பிக் காணப்படும். குழந்தைகட்கு அரையில் இக்கொடியைக் கட்ட மாந்தம் குணமாகும்.

இதன் இலைகளை சேகரித்து நன்கு கழுவி இடித்து சாறு பிழிந்து 30 துளியிலிருந்து 3 மில்லி வரை வயதிற்கேற்ப குழந்தைகட்கு கொடுத்துவர மந்தக் கழிச்சல் தீரும்.

வயது வந்தவர்கட்கு செரியாமை, வயிறு உப்பிசத்திற்கு உப்பிலாங் கொடி இலை, சுக்கு சம அளவு அரைத்து 5 கிராம் அளவு கொடுத்துவர தீரும்.

உப்பிலாங்கொடியை அரைத்தும் வயிறு உப்பிசத்திற்கு வயிற்றின் மேல் பற்றிடலாம்.

மந்தக் கழிச்சலுடன் காய்ச்சலும் குழந்தைகட்கு இருப்பின் இலைகளை வதக்கி சாறு எடுத்து 2.5 மில்லி அளவு காலை, மாலை கொடுக்கலாம்.

இதன் இலைகளை ஊறல் குடிநீர் செய்து 30-60 மில்லிவரை மூல ரோகத்திற்கும் கொடுக்கலாம். அதாவது 5 கிராம் இலைகளை 100 மில்லி நீரில் 6 மணிநேரம் மூடி ஊறவைத்து தயாரித்துக்கொள்ளலாம்.

சமிபாடின்மையால் ஏற்படும் வாந்திக்கு நோயாளி வாந்தி எடுத்த பின்பு, மேற்படி கொடியின் வேரைச் சுத்தப்படுத்தி நிழலில் உலர்த்தி பொடித்த சூரணம் 1-2 கிராம் இனை வெந்நீரில் கொடுக்கலாம்.

குழந்தைகட்கு ஏற்படும் செரியாமை, மாந்தம் இவைகட்கு,

நுணாஈர்க்கு, மாவிலை ஈர்க்கு, நொச்சி ஈர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, உப்பிலாங்கொடி இலை ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 பங்காக வற்றக் காய்ச்சி 10-15 மில்லி வரை கொடுக்கலாம்.

உப்பிலாங்கொடியானது கடற்கரையை அண்டிய பிரதேசம், கண்டல் சார்ந்த இடங்களில் பரம்பல் அதிகமாக இருக்கும்.

பண்டைக்காலத்து மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கட்கு வேண்டிய மூலப் பொருட்களை சேகரிக்கும் விடயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தினர். பசுமையான மூலிகைகளை சேகரிக்குமிடத்து அவைகள் முளைத்துள்ள இடத்தின் மண் வளம், வேருடன் அவைகளை சேகரிக்கு முறை, சேகரிக்கத் தகுந்த பருவ நிலை முதலியவற்றை மனதில் கொண்டு செயற்பட்டனர். மூலிகைகளை சேகரிக்க இளவேனிற்காலம் (சித்திரை, வைகாசி) மிக உகந்த பருவமாகக் காணப்பட்டது. மூலிகைகளின் வேர்களைக் கொய்யுமிடத்து மரத்தாலான ஆயுதங்களே அவற்றிற்கான சிறந்த கருவிகளாகக் கருதப்பட்டன.

இவ்விதம்மூலிகைகளைக்கொய்ய அவற்றை அணுகுமுன் அவற்றில் குடிகொண்டுள்ள தேவதைகளை வேண்டிக்கொள்வதும் பிணியாளர்களுக்கு உதவவே அவற்றைக் கொய்வது காரணமாக அவைகள் சினங் கொள்ளவேண்டாம் என்று மூலிகைகளை வேண்டிக்கொள்வதும் முக்கிய சடங்குகளாகக் கொள்ளப்பட்டன. இது தாவரங்களுக்கு உணர்ச்சியும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு செயற்படும் தன்மையும் உண்டு என இன்றைய உலகிற்கு ஜே.ஸி. போஸ் என்ற விஞ்ஞானி எடுத்துணர்த்திய விஞ்ஞானக் கருத்தை நம் சித்தர்கள் முன்பே அறிந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனவே மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் எமது தலையாய கடமையாகும். இதனைப் பின் வரும் பாடல் இயம்பி நிற்கின்றது.

*சித்தியாம் மூலிகையை பறிக்கும் முன்னே*
*சிறப்பாகச் செடிமுன்னே நின்று கொண்டு*
*பக்தியுடன் ஓம் மூலி சர்வமூலி உயிர்மூலி*
*பரிவாயுன்னுயிர் உடலில் நிற்கச் சுவாகாவென்று*
*நத்தியே பதினைந்து உருவே போட*
*நலமான சாபவிமோட்சனைந்தானாகும்*
(அகத்தியர் பன்னிரு காண்டம்-200)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(All the siddhars constant that the herbs should be relieve of their latest impurities ritually before use)

இப்பாடலின்படி பண்டைய தமிழர்கள் தெய்வத்திற்கு இணையாக மூலிகைகளை நினைத்துப் பேணினர் என்பது புலனாகின்றது.

ஆனால் தற்காலத்தில் அசுத்தமான இடங்களிலும் சன நெருக்கமான இடங்களிலும் சுடுகாடுகளிலும் தொழிற்சாலைக் கழிவு வாய்க்கால்களுக்கு அருகிலும் தெருவோரங்களிலும் மூலிகைகள் பரம்பிக் காணப்படுகின்றன. இவை பண்டைக்கால மூலிகைகளின் மருத்துவப் பண்புகளைக் கொண்டிருக்கும் என்பது கேள்விக்குறியே.

ஆனாலும் தற்காலத்தில் காடுகள், கோவில்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் மூலிகைகளின் பரம்பல் காணப்படுவது மறுப்பதற்கில்லை. எனவே அவற்றை பேணிப் பாதுகாத்தல் அவசியமே.





யாழ்.பண்டத்தரிப்பு வடலியடைப்பு அறிவகம் கணனிக்கல்வி நிலையமும் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்திய கணனி கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அறிவகம் கணனிக் கல்வி நிலைய பொறுப்பாளர் இரா. சரவணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட (காணி) மேலதிக அரசாங்க அதிபர் சு.முரளிதரன், வடமாகாண ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## அர்ஜுன் மகேந்திரனை பணி நீக்குமாறு கோரி

# போராட்டம் நடத்தப்படும்



## முன்னாள் அமைச்சர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**அர்ஜுன் மகேந்திரனை அந்த பதவியிலிருந்து நீக்குமாறு கோரி வீதியில் இறங்கி போராட்டம் நடத்தப்போவதாக முன்னாள் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் இலங்கையில் பதவி வகித்த மத்திய வங்கியின் ஆளுநர்கள் அனைவரும் உள்நாட்டில் கல்வி கற்ற பொருளியல் நிபுணர்களாவர். தற்போது சிங்கப்பூர் பொருளியல் நிபுணர் ஒருவர் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து செயற்படுகின்றது.இந்த நாட்டின் நாணய நோட்டில் சிங்கப்பூர் பிரஜை ஒருவரே கையொப்பமிடுகின்றார்.

இது ஓர் பெரும் துர்ப்பாக்கிய நிலைமையாகும். எனவே மத்திய வங்கியின் ஆளுநரை நீக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

## திரைமறைவில் உருவாகும் மாற்றுச்சக்தியால் ஆபத்து

பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியை பிளவுபடுத்த திரைமறைவில் சூழ்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் அதிருப்தியாளர்கள் ஒன்றிணைந்து, இந்த சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட வேறு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய முக்கியஸ்தர்கள், ரணில் எதிர்ப்பு சஜித் தரப்பு ஆதரவாளர்கள், தற்போது ஜனாதிபதி செயலகத்தில் உயர்பதவியில் செயற்படுகின்ற நபர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் குழு ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து வேறு அரசியல் குழுவாக நாடாளுமன்றத்தினுள் செயற்படுவதற்காக சூழ்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த குழுவை வோட்ஸ் எட்ஜ் டீம் என அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரத்தை செயலிழக்க செய்து, நாடாளுமன்றத்தினுள் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் தீர்மானமிக்க சக்தியாக அவர்களின் அதிகாரத்தை அதிகரித்து கொள்வதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைக்க தங்களுக்கு அவசியமான வேட்பாளரை களமிறக்குவதே ஆரம்பகட்ட திட்டமாகவுள்ளது.

தற்போது அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி அதிக நன்மைகளை கைப்பற்றி கொள்வதனை தடுத்து மக்கள் கோரும் மாற்று தலைமைத்துவத்தை அவர்களிடம் வைத்துக் கொள்வதன் மூலம் எதிர்வரும் அரசியல் வெற்றிகளை கைப்பற்றிக் கொள்ள முடியும் என்பது இந்த குழுவின் கருத்தாகும்.

தற்போது வரையில் மாவட்ட மட்டத்தில் அமைப்பு நடவடிக்கைகளை இந்த குழு ஆரம்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

வெகுவிரைவில் 'Make Sri lanka great' என்ற பெயரில் பிரசார திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஆரம்பகட்ட திட்டம் ஜனாதிபதி இணைப்பு செயலாளர் ஒருவரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (இ-10

## ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட இளைஞன் கைது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் தான் ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிவதாக அடையாளப்படுத்திக்கொண்டு கந்தளாய் பிரதேச இளைஞர், யுவதிகளிடம் தொழில் பெற்றுத் தருவதாக கூறி ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்களை மோசடி செய்துள்ளதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கந்தளாய் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய் யப்பட்ட குறித்த இளைஞர் சாவதிஸ்ஸபுரயை வசிப்பிடமாகக் கொண்ட 26 வயதுடையவர் என்றும் தெரிவித்துள்ளனர். (இ-10)

## வீதியோர வாழ்க்கையே வெள்ளப்பெருக்குக்கு காரணம்

கொழும்பு மற்றும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களில் வீதிகளுக்கு அருகில் சுமார் 2,500 குடும்பங்கள் சட்டவிரோதமாக வீடுகளை அமைத்து தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டவிரோத குடியிருப்பாளர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு காணி சீர்திருத்த அபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சட்டவிரோத குடியிருப்பாளர்களாலேயே கொழும்பில் வெள்ளப் பெருக்கு ஏற்பட பிரதான காரணம் என்று காணி சீர்திருத்த அபிவிருத்தி சபையின் தலைவர் எம்.ஏ.எஸ்.இத்தவல தெரிவித்துள்ளார். கடந்த வாரங்களில் கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலமே இது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நாவல, கோட்டே, கொத்தடுவ, புளுமென்டல் ஆகிய பிரதேசங்களில் உள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை குறித்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு மஞ்சத் திருவிழா



### மஞ்சம் ஏறி வருகிறாள்



கடல் மோதி கரை தொட்டு
கலையோடு இழையோடி
இதமான இளங்காற்று வந்து
இசைபாடி அசை போடும்
இளமஞ்சள் மாலையிலே
பட்டு உடுத்திப் பொட்டு வைத்து
பவள நகை அணிந்து
மணி மகுடம் சூடி
மலர்ப் பாதம் எடுத்து வைத்து
நாகம் குடை பிடிக்க
நர்த்தனங்கள் ஆடிக் கொண்டு
மஞ்சம் ஏறி வருகிறாள் அம்மா
மக்கள் குறை தீர்க்க வருகிறாள்

கோப்பாய் கௌதமி

### துன்பங்கள் தீர்த்திடும் அன்னையே

கடல் நடுவினிலே வீற்றிருக்கும் அம்மா நாகபூஷணி
நவநவ வடிவாக காட்சி தரும் நாகேஸ்வரித் தாயே
நாடிவரும் பக்தர்களுக்கு அருள் புரிதாயே
உன் திருக்காட்சி காண்பதற்காய் – அம்மா
கடல் கடந்து வந்து நின்றோம் – நாகேஸ்வரி
எங்கள் குறை தீர்த்திடுவாய் தாயே – நீ
கேட்ட வரம் தந்திடுவாய் தாயே அம்மா


மோ.அபிலாஜினி
சுன்னாகம்

### அருளும் நிதி

கலைஞானம் சொல்கின்ற நயினைப்பதி– இங்கு
கரையெங்கும் அலைவந்து சொல்லும் கவி
அலைகடல் தாண்டி வந்தாலோ அருளும் நிதி
அபிராமித்தாயே! நீயே கதி
பூக்கொண்டு நாகங்கள் வந்து – உனைப்
பூசித்த வரலாறு உண்டு
காக்கின்ற தெய்வமே என்று இந்த காசினி போற்றுதே இன்று
மணி பல்லவம் என்று கூறு–மனத்
துன்பங்கள் யாவுமே –நீறு
நயினைத் தாயே நாகம்மா
எம்மினத்துயரை தீர் அம்மா!

வேலணையூர் பாக்கியன்

### கடைக்கண் திறந்து பாரம்மா



கைலாய ஜோதியே
கைலைமலை தேவியே
கற்பூர நாயகியே
கருணை பொழியும் தாயம்மா
கரம் கூப்பி வேண்டுகிறோம் –தாயே எம் துயரை
கடைக்கண் திறந்து பாரம்மா!

சி.துஷியந்தன்


# சீனாவை சீர்குலைத்த பெரு வெள்ளம்




**தென் சீனாவின் குவாங்ஸி ஜுவாங் தன்னாட்சிப் பிராந்தியத்தின் Liuzhou நகரில் திடீரென பெருக்கெடுத்துள்ள வெள்ளம், கட்டுப்பாட்டை மீறி நேற்று செவ்வாய்க்கிழமை காலை பாரியளவில் சேதங்களை ஏற்படுத்தியது.**

குறித்த பகுதியில் பரவலாக வெள்ள நீர் பல இடங்களிலும் ஆறாக் பெருக்கெடுத்து ஓடுவதோடு, அதன் வேகமும் அதிகரித்துக் காணப்படுவதனால் வெள்ளத்தில் சிக்கிய வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-10)

# ஒபாமா பதவி விலக டிரம்ப் வலியுறுத்தல்





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஆர்லாண்டோ நகர இரவு விடுதியில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக, ஜனாதிபதி ஒபாமா பதவி விலக வேண்டும் என்று குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்டு டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் ஆர்லாண்டோ நகரில் இரவு நேர கேளிக்கை விடுதி உள்ளது.

இதில் நுழைந்த நபர் ஒருவர், அங்கிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டார். இந்த தாக்குதலில் சுமார் 49 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 53 பேர் படுகாயமடைந்தனர். தாக்குதல் நடத்திய நபர் அதிரடிக் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். (இ-10)

# புளோரிடா சம்பவம்; கொலையாளியின் வீட்டினை சோதனையிட்டதில் கிடைத்த அதிர்ச்சி தகவல்கள்

புளோரிடா மாகாணத்தில் உள்ள Pulse இரவு விடுதியில் ஜுன் 12 ஆம் திகதி 50 பேரை கொன்று வெறியாட்டம் நடத்திய நபரின் வீட்டினை சோதனையிட்டதில் பல்வேறு தகவல்கள் தெரியவந்துள்ளன.

புளோரிடா மாகாணத்தில் அமைந்துள்ள Fort Pierce நகரில் உள்ள 107 ஆம் இலக்க குடியிருப்பில் Omar Mateen வசித்து வந்துள்ளார்.

முதல் திருமணம் ஆனது முதலே அக்குடியிருப்பில் வசித்து வந்த இவர், முதல் மனைவி விட்டுச்சென்ற பின்னர், வேறொரு பெண்ணை மணம் முடித்துக்கொண்டு, அதே குடியிருப்பில்தனது வாழ்க்கையை தொடர்ந் துள்ளார்.

இவருக்கு 3 வயதில் Noor Zahi Salman என்ற மகன் உள்ளான். இரண்டு படுக்கையறை கொண்ட அந்த வீட்டில் குழந்தைகள் விளையாடும் பொம்மைகளான, Spider man bike, toy trucks மற்றும் Mickey Mouse posters போன்றவைகளே அதிகமாக இருந்துள்ளன.



இதன் முலம் இவர் குழந்தைகள் மீது அலாதி பிரியம் கொண்டவர் என தெரியவந்துள்ளது. மேலும் தனது மகன் மற்றும் மனைவியுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களும் அதிகமாக இருந்துள்ளன.

அதுமட்டுமன்றி இஸ்லாமியரான இவர் குரான் மீது அதிக நம்பிக்கை கொண்டவர்.

குரான் மற்றும் இஸ்லாம் தொடர்பான புத்தகங்களை படிப்பதில் அதிக ஈடுபாட்டுடன் இருந்துள்ளார். மதக் கோட்பாட்டின்படி அதிக நம்பிக்கை கொண்ட காரணத்தினாலே இவர் இச்செயலில் ஈடுபட்டுள்ளார் என தெரிய வந்துள்ளது.

மேலும், இவர் தனது கலண்டரில் 'D-Day, 10:30 pm - June 7 (முக்கியமான நாள்) என குறித்து வைத்துள்ளான். அதன் பின்னர் இந்த திகதியை மாற்றி June 6 என மாற்றியுள்ளான்.

ஆனால், திட்டமிட்டபடி இந்த 2 திகதிகளையும் புறக்கணித்துவிட்டு ஜுன் 12 ஆம் திகதி தனது வெறியாட்டத்தை நிகழ்த்தியுள்ளான் என தெரிய வந்துள்ளது.

மேலும், இந் நபர் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை சேர்ந்தவன் தான் என அந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர். (இ-10)

# இந்தியா-கானா இடையே 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்து



**இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தும் கானாவின் முதல் ஜனாதிபதி குவாமே நிக்ரூமாவும் டில்லியில் சந்தித்துக் கொண்ட புகைப்படத்தை கானா ஜனாதிபதி ஜான் டிரமானி மஹாமாவிடம் அளிக்கும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி.**

இந்தியா - கானா நாடுகள் இடையே மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையெழுத்தாகியுள்ளன.

ஆபிரிக்க நாடுகளுக்கு 6 நாள் பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்ற பிரணாப் முகர்ஜி; முதல் கட்டமாக கானா நாட்டுக்குச் சென்றார். அந்நாட்டுக்கு இந் தியக் குடியரசுத் தலைவர் ஒருவர் பயணம் செய்வது இதுவே முதல்முறையாகும்.

கானா தலைநகர் அக்ராவை சென்றடைந்த அவருக்கு, அந்நாட்டு ஜனாதிபதி ஜான் டிரமானி மஹாமா சிறப்பு விருந்தளித்தார். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இருநாட்டுத்தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, இந்தியாவுடன் அணுசக்தி ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி ஜான் டிரமானி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மேலும், இரு நாட்டு வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ளவும் தங்கள் நாட்டில் இந்தியா முதலீடு செய்யவும் ஜான் டிரமானி விருப்பம் தெரிவித்ததாக மத்திய அரசின் செயலாளர் (பொருளாதார விவகாரங்கள்) அமர் சின்ஹா கூறினார்.

**மூன்று ஒப்பந்தங்கள்**

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, இரு நாடுகளிடையே மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளைச் சேர்ந்த தூதர்கள், தூதரக அதிகாரிகள் ஆகியோர் பரஸ்பரம் எளிதாக அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும் வகையில், மேற்குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு விசா இல்லாமல் அனுமதி அளிக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுதவிர, இரு நாடுகள் இடையே பல்வேறு துறைகளில் உள்ள ஒத்துழைப்பை தொடர்ந்து கண்காணிக்கும் வகையில் கூட்டுக் குழுவை நியமிப்பதற்கான ஒப்பந்தம், கானா நாட்டின் அயல்நாட்டு சேவை அதிகாரிகளுக்கு இந்தியா பயிற்சி அளிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஆகியவையும் கையெழுத்தாகின.

இதன் பின்னர், அந்நாட்டுச் செய்தியாளர்களிடம் பிரணாப் முகர்ஜி பேசியதாவது,

பயங்கரவாதத்தால் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா பாதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பதில் கானாவின் முயற்சிக்கு இந்தியா ஆதரவு அளிக்கிறது.

இந்தியாவும், சர்வதேசப் பொருளாதார மையமாக விளங்கும் ஆபிரிக்காவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இன்னமும் இடம்பெறாமல் இருப்பது நெறியற்ற தன்மையாகும் என்றார் பிரணாப் முகர்ஜி.

பரிசளிப்பு நிகழ்ச்சியில், டில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தும், கானாவின் முதல் குடியரசுத் தலைவர் குவாமே நிக்ரூமாவும் சந்தித்துக் கொண்ட புகைப்படத்தை ஜனாதிபதி ஜான் டிரமானி மஹாமாவிடம் பிரணாப் முகர்ஜி அளித்தார்.

**கண்டனம்**

இதனிடையே, அமெரிக்காவில் இரவு விடுதியில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 50 பேர் பலியான சம்பவத்துக்கு பிரணாப் முகர்ஜி கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு அனுப்பிய செய்தியில், "பயங்கரவாதத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதத் தாக்குதல்களை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. இத்தகைய செயல்களை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது" என்று தெரிவித்தார். (இ-10)




# உளவு செயற்கைக்கோளுடன் அனுப்பப்பட்ட ரொக்கெட் விண்ணில் வெடித்துச் சிதறியது



(வோஷிங்டன்)

அமெரிக்க புலனாய்வு நிறுவனமான என்.ஆர்.ஓன். இன்மூலம் நேற்று முன்தினம் இரவு 1.51 இற்கு 3 அடுக்கு ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட உளவுச் செய்மதி சில நிமிடங்களிலேயே விண்ணில் வெடித்துச் சிதறி கடலில் விழுந்துள்ளது. டெல்டா - 4 என்று பெயரிடப்பட்ட குறித்த ரொக்கெட் அமெரிக்கா இதுவரை விண்ணுக்கு அனுப்பிய ரொக்கெட்டுக்களில் பெரியதாகும்.

இந்த உளவுச் செய்மதி புளோரிடா மாநிலத்தின் கேப் கெனவரல் என்ற இடத்தில் இருந்து ஏவப்பட்டிருந்தது. அண்மைக் காலமாக அடுத்தடுத்து ஏற்பட்டு வந்த ரொக்கெட் விபத்துக்கள் அமெரிக்காவின் விண்வெளித்துறைக்கு சற்றுப் பின்னடைவையே ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் தான் பூமிக்கு மேலே உள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு மையமான ISS விண்வெளி வீரர்களை அனுப்ப ரஷ்யாவின் சோயுஷ் விண் ஓடத்தை நாசா பயன்படுத்தி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தமிழர் வாழும் பகுதிகளிலிருந்து ராணுவத்தை விலக்க வேண்டும்

## கருணாநிதி வலியுறுத்து

(சென்னை)

**இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவத்தை விலக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.**

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் செய்தியாளர்களிடம் பேசிய வடக்கு மாகாண முதலமைச்சர், "இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கைப் பராமரித்து மக்களின் பாதுகாப்புப் பணிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் பொலிஸாரே மேற்கொள்ள வேண்டுமென்று தான் அங்கேயுள்ள தமிழர்கள் விரும்புகிறார்கள். எனவே இராணுவம் அவசியமில்லை என்று கூறியிருந்தார். ஆனால் முதலமைச்சரின் இந்தக் கோரிக்கையை அங்கேயுள்ள இராணுவம் முற்றிலுமாக நிராகரித்து, தமிழர் வாழும் பகுதிகளில் இருந்து இராணுவத்தைத் திரும்பப் பெற முடியாது என்று கூறியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் முக்கிய இராணுவ முகாமான சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக்கிடங்கு தீப்பிடித்து பெரிய சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வடக்கு இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. அது பற்றி இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க பத்திரிகையாளர்களிடம் கூறும போது, "சாலாவ இராணுவ வெடிமருந்துக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தால் அதிக அளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராணுவத்திற்கு 500 கோடி ரூபாய் வரை இழப்பு உண்டாகியுள்ளது. இந்த விபத்திற்குப் பிறகு, வடக்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உள்ள இராணுவம் மற்றும் இராணுவ ஆயுதக்கிடங்குகளை அகற்ற வேண்டுமென்ற கோரிக்கை அனைத்து தரப்பிலுமிருந்து எழுந்துள்ளது.

இதுகுறித்து கண்டியில் உள்ள புத்தமதத் தலைமைப் பீடத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அஸ்கிரி மாநாயக்கதேரரிடம் ஆலோசனைகள் பெற்றேன். அப்போது அவர் இராணுவ முகாமகளை அகற்றக்கூடாது என்று கூறினார். ஆகையால் வடக்கின் இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று புத்த மதத் தலைமைப் பீடத்தின் அறிவுரைகளைப் பெற்று இலங்கை அமைச்சர் தெரிவித்திருப்பது தமிழர்களின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போன்ற தீராத வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது.



கடந்த ஆண்டு இலங்கைத் தீவில் நடைபெற்ற தேர்தலில் ஈழத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கை எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக, அவர்களிடம் வாக்குகளை மட்டும் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு, இராணுவம் அங்கே தொடர்ந்து இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை புத்தமதத் தலைவரைக் கலந்து கொண்டா ஒரு அமைச்சர் அறிவிப்பது? அது ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நியாயமான செயலாகுமா?இலங்கை அரசு, ஈழத் தமிழர்களிடம் பாகுபாடு காட்டாமல் உள்ளது என்பதை நிரூபிக்க முதற்கட்டமாக தமிழர் பகுதிகளிலே இருந்து உடனடியாக இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொள்ள வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மைத்திரி அரசு நம்பத்தக்க வகையில் நேர்மையோடு எடுக்க வேண்டும்.

தேர்தலின் போது அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று. அதைக்காப்பாற்ற அவர்கள் வாய்மை உணர்வோடு முன்வருவதே ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் செயல். இதுவே உலகத் தமிழர்கள் ஒவ்வொருவரின் விருப்பம் வேண்டுகோள். இலங்கை அரசு அதை நிறைவேற்றுமா? இந்திய அரசு அதற்கு முன் நிற்குமா? என அவர் கேள்விகளுடன் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளார். (இ-10)

## இலங்கையில் முதன்முறையாக நடுக்கடலில் உயிரைப் பாதுகாக்கும் திட்டம் அறிமுகம்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் வழிக்காட்டல்களின் கீழ் இலங்கையில் முதன் முறையாக "நடுக்கடலில் உயிரை பாதுகாத்தல் (SOLAS) செயற்றிட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கப்பற்றுறையுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்த பின்னர் ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என வணிக கப்பற் சேவைகள் செயலகத்தின் அத்தியட்சகர் ஜெனரல் அஜித் செனவிரத்ன தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை சர்வதேச சமுத்திரவியல் நிறுவனத்தின் உறுப்பு நாடாகும். அதன் அடிப்படையில் சர்வதேச போக்குவரத்து தொடர்பாக கொள்கைகள் காணப்படுகின்றன. எனவே நாம் அக்கொள்கைகளை பின்பற்ற கடமைப்பட்டுள்ளோம்.

அதன் அடிப்படையில் உயிர்பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளிற்கேற்பவே நாம் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த புதிய சட்டம் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். இச்செயற்றிட்டம் ஒக்டோபர் மாதம் முதல் உத்தியோகப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை சர்வதேச சந்தை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொழுது ஏற்றுமதி செய்கின்ற ஒவ்வொரு பொருளினதும் நிறையை உறுதிப்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் நாம் ஒரு செயன்முறையினை உருவாக்கினோமென, அத்தியட்சகர் தெரிவித்தார்.

சர்வதேச சமுத்திரவியல் நிறுவனமானது (IMO) 1974 ஆம் ஆண்டு சர்வதேச வணிக கப்பற்றுறையில் பின்பற்றப்பட வேண்டிய பொது சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தின.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் சர்வதேச சமுத்திரவியல் நிறுவனத்தின் இலங்கை முகவராக வணிக கப்பற் சேவைகள் செயலகம் செயற்படுகின்றது. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனமாகவே வணிக கப்பற் சேவைகள் செயலகம் செயற்படுகின்றது.

சமுத்திரவியல் சந்தை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து ஏற்பாடுகள் அதனுடன் தொடர்புடைய சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இந்நிறுவனத்தின் செயற்பாடாகும்.

அதன் அடிப்படையிலேயே "நடுக்கடலில் உயிரை பாதுகாத்தல (SOLAS)" எனும்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கொள்கலன்களை கொண்டு செல்லும் கப்பல்களின் பாதுகாப்பை அதிகரித்தல், கப்பல்களின் ஸ்திரத்தன்மையினை மற்றும் நடுநிலைத்தன்மையினை பாதுகாத்தல்,கொள்கலன்களை உரிய முறையில் பாதுகாத்தல் மற்றும் சுற்றாடல் பாதிப்புக்களை குறைத்தல் ஆகியனவற்றை குறிக்கோளாகக் கொண்டு இக்கொள்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதன் அடிப்படையில் சான்றிதழ்களை வழங்குவதற்குரிய வழிக்காட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கிய செயன்முறையினை வணிக கப்பற்சேவைகள் செயலகம் பொது மக்களிற்கு அறிவித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது .(இ-10)

## 15 கோடி ஆண்டு பழைமையான டைனோசர் காலடி கண்டுபிடிப்பு

பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் வாழ்ந்த மிகப்பெரிய உயிரினம் டைனோசர். இயற்கை பேரழிவு மற்றும் பருவநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் டைனோசர் இனம் உலகில் அழிந்து விட்டது. ஆனால் அவை வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இன்னும் மறைந்து விடவில்லை. உலகில் வாழ்ந்து மடிந்த டைனோசரின் படிமங்கள் பல நாடுகளிலும் அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக ராஜஸ்தானில் 15 கோடி ஆண்டு பழைமை வாய்ந்த டைனோசரின் காலடி தடத்தை ஆய்வுக் குழுவினர் கண்டறிந்துள்ளனர். ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் வியாஸ் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை குழுவினர் ஜெய்சல்மார் மாவட்டத்தில் கடற்கரை சூழலில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது



டைனோசரின் படிமங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை டைனோசரின் கால் தடங்களாக இருக்கலாம் என ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இவை சுமார் 15 கோடி ஆண்டுகள் பழைமையானது. இந்த டைனோசர்கள் ஒன்று முதல் மூன்று மீற்றர் உயரம் கொண்டவையாக இருந்திருக்கலாம் என கூறப்படுகிறது. டைனோசரின் படிமங்கள் ஏற்கனவே பிரான்ஸ், போலந்து, சுலோவாகியா, இத்தாலி, ஸ்பெயின், சுவீடன், அவுஸதிரேலியா மற்றும் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியாவில் தற்போதுதான் முதல் முறையாக டைனோசரின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த படிமம் அடிப்படையில் டைனோசரின் கால்தடம் 30 செ.மீ. நீளம் கொண்டவையாக உள்ளது. இதன் மூலம் அவை வலிமையான கால்களை பெற்றிருந்து இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. இதன் உடல் சுமார் 1 முதல் 3 மீ.உயரம் மற்றும் 5 முதல் 7 மற்றர் நீளம் கொணடதாகவும் இருந்திருக்கலாம் எனவும் ஆய்வுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர். (இ-10)

### என்.எஸ்.ஜியில் இந்தியா உறுப்பினராவது குறித்து

## வியன்னா கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை

(சென்னை)

அணுசக்தி விநியோகக் கூட்டமைப்பில் (என்.எஸ்.ஜி) இந்தியாவை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது குறித்து வியன்னா கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

48 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அணு சக்தி விநியோகக் கூட்டமைப்பில் உறுப்பினராகச் சேர்வதற்கு தீவிரமாக முயன்று வரும் இந்தியா, பல்வேறு நாடுகளின் ஆதரவைத் திரட்டி வருகிறது. எனினும், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (என்பிடி) கையெழுத்திடாததால், இந்தியா போன்ற நாடுகளை உறுப்பினராகச் சேர்ப்பதற்கு சீனா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், அணு சக்தி விநியோகக் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம், அதன் தலைவர் ரஃபேல் மேரியானோ கிராஸி தலைமையில், ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் கடந்த 9,10 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், அணுசக்தி விநியோகக் கூட்டமைப்பில் இந்தியாவை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின.

ஆனால், அந்தக் கூட்டத்தில் இந்தியா உறுப்பினராவது குறித்து விவாதம் ஏதும் நடைபெறவில்லை என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஹுாங் லீ, கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். (இ-10)

# சிறுவர் அரங்கம்

1461

தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.


"ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், "இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு ரொட்டி கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து ரொட்டியை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்!" என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். "இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக்கொள். ஆளுக்கொரு ரொட்டி கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து ரொட்டிகளைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே இரு" என்றார்.

மறுநாள், வேலைக்காரன் ரொட்டிக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய ரொட்டியை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லாரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய துண்டை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.



## ரொட்டித்துண்டு!

இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர்.

ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய ரொட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி.

தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைக் கொடுத்தாள். அந்த ரொட்டியைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி.

"ஐயா! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றாள் அவள்.

"சிறுமியே! உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்" என்றார் செல்வர்.

துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.

## 06.2016 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 763 - மெசொப்பொத்தேமியாவின் வரலாற்றுக் காலக்கோட்டைக் கண்டறிய உதவிய சூரிய கிரகணம் ஒன்றை அசீரியர்கள் பதிந்தார்கள்.
- 923 - பிரான்சின் முதலாம் ரொபேர்ட் மன்னன் கொல்லப்பட்டான்.
- 1184 - நோர்வேயின் ஐந்தாம் மாக்னஸ் மன்னன் ஃபிம்ரெயிட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- 1389 - கொசோவோவில் இடம்பெற்ற சமரில் ஒட்டோமான் படைகள் செர்பியர்களையும், பொஸ்னியர்களையும் தோற்கடித்தனர்.
- 1667 - சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்ற பிரெஞ்ச் மருத்துவர் முதன் முதலில் மனித இரத்த மாற்றீட்டை செயற்படுத்தினார்.
- 1752 - மின்னல் ஒரு மின்சாரம் என்பதை பெஞ்சமின் பிராங்கிளின் நிறுவினார்.
- 1775: அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்கத் தரைப்படைத் தளபதியாக நியமனம் பெற்றார்.
- 1808 - ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னனாக முடி சூடினான்.
- 1836 - ஆர்கன்சா ஐக்கிய அமெரிக்காவின் 25வது மாநிலமானது.
- 1844 - இறப்பர் பதப்படுத்தும் முறை (vulcanization) சார்ல்ஸ் குடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1846 - இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சபை என்ற அமைப்பு தனது முதலாவது இதழை வெளியிட்டது.
- 1904 - நியூ யோர்க்கில் ஜெனரல் ஸ்லோகம் என்ற கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் 1021 பேர் கொல்லப்பட்டனர்.
- 1911 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1938 - பிரித்தானியாவில் லாஸ்லோ பைரோ குமிழ் முனைப் பேனாக்களைக் கண்டுபிடித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் சாய்ப்பான் தீவை கைப்பற்றினர்.
- 1954 - ஐரோப்பிய உதைப்பந்தாட்டக் கூட்டமைப்பு யூஎஃபா சுவிட்சர்லாந்தில் அமைக்கப்பட்டது.
- 1984 - யாழ்ப்பாணம் காரைநகரில் இலங்கையின் கடல் விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1996 - ஐக்கிய இராச்சியம், மான்செஸ்டரில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் 200 பேர் காயமடைந்தனர். நகரின் மத்திய பகுதி பெரும் சேதத்துக்குள்ளானது.
- 2007 - உலகின் மிகவும் நீளமான 34 கிமீ நீள தொடருந்து சுரங்கப் பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.
- 2009 - ரிச்மண்ட் ஹில் முருகன் கோவில் கொடியேற்றம்.
- 2009 - ஸ்காபோரோ பெரிய சிவன் கோவில் தீர்த்தம்.

### பிறப்புகள்

- 1914 - யூரி அந்திரோப்பொவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்.(இ.1984)
- 1950 - லக்ஸ்மி மிட்டால், லண்டனைச் சேர்ந்த உலகச் செல்வந்தர்களில் ஒருவர்.
- 1953 - உமர் தம்பி, தமிழ்க் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (இ. 2006)

### இறப்புகள்

- 1838 - ரோணியஸ், ஜெர்மனியத் தமிழறிஞர் (பி. 1790)
- 1849 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11வது ஜனாதிபதி. (பி. 1795)
- 1948 - ராஜா சர் அண்ணாமலை செட்டியார், (பி. 1881)
- 1971 - வெண்டல் ஸ்டான்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)
- 2008 - தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழத்தின் ஆன்மிகவாதி (பி. 1925)
- 2013 - மணிவண்ணன், பிரபல தமிழ் நடிகர் திரைப்பட இயக்குனர் (பி. 1953)

### சிறப்பு நாள

- டென்மார்க் - கொடி நாள்
- உலக காற்று தினம் (றுழசடன றுனைெ றுயல)

### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி



தங்கம்மா அப்பாக்குட்டி இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும் ஆவார். ஈழத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவர். ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்துச் சேவையாற்றி வந்தார். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்தார். "சிவத்தமிழ்செல்வி" என்று அழைக்கப்பட்டு வந்தார். ஜனவரி 7, 1925 இல் யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி-தையற்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த தங்கம்மா அப்பாக்குட்டி 1929 ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்தார். 1941 ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்ந்தார். 1946 மட்டக்களப்பு சென். சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து 1949 ஆம் ஆண்டு கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையில் ஆசிரியர் பதவி ஏற்றார். தமிழையும் சைவ சமயத்தையும் முறையாகக் கற்று 1952 ஆம் ஆண்டு பாலபண்டிதராகத் தேர்வடைந்த இவர், 1958 இல் தமிழகத்தில் சைவப்புலவர் பட்டத்தையும் பெற்றார். இவரது 31 ஆண்டுகள் ஆசிரியைப் பணியில் கடைசி 12 ஆண்டுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றி 1976 இல் ஓய்வு பெற்றார். யாழ் பகுதியில் இறைவழிபாட்டை மேம்படுத்தும் வழியில் யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு. "பண்டிதை" என அழைக்கப்பட்டுவந்த தங்கம்மா 1950-60களில் இலங்கை வானொலியின் மாதர் பகுதி உட்பட பல இடங்களில் சமயச் சொற்பொழிவுப் பணிமூலம் சமய வளர்ச்சிக்குத் தனது தொண்டு செய்யும் வகையில் தனது சமயப்பணியைத் தொடங்கினார். தமிழ் நாடு சிதம்பரத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 1965 ஆம் ஆண்டு உரையாற்றினார். 1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார். தங்கம்மா அப்பாக்குட்டியின் கந்தபுராண சொற்பொழிவு நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்ததுடன், இவரின் முயற்சியில் பல அறநெறி நூல்களும் வெளியிடப்பட்டன.

# பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக மூன்று புதிய சட்டங்கள்



(கொழும்பு)

இலங்கையில் தீவிரவாதம் மீண்டும் தலையெடுப்பதை தடுப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், மூன்று புதிய சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாகவே இந்த மூன்று சட்டங்களும் கொண்டு வரப்படவுள்ளன.

தேசிய பாதுகாப்புச் சட்டம், அமைப்பு ரீதியான குற்றங்களைத் தடுக்கும் சட்டம், புலனாய்வுச் சட்டம் ஆகியனவே புதிதாக கொண்டு வரப்படவுள்ளன.

இந்த மூன்று சட்டங்களும் இன்னமும் வரையப்படும் நிலையில் தான் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# வாகனத்தினை பெற்றுக் கொள்வதற்கான திட்டம் தற்காலிகமாகவே இடைநிறுத்தம்

(கொழும்பு)

அமைச்சர்கள் புதிதாக வாகனத்தினை பெற்றுக்கொள்வதற்கான திட்டம் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சர்கள் நாடளாவிய ரீதியில் தமது கருமங்களை முன்னெடுப்பதனால் அவர்களுக்கு உயர் ரக வாகனம் பெற்றுக்கொடுக்க வேணடும் என அமைச்சர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் எதிர்வரும் காலத்தில் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

22 அமைச்சுக்களும் 30 பிரதி அமைச்சர்களும் இவ்வாறு வாகனங்களை பெற்றுக்கொடுக்க 118 கோடி ரூபாவிற்கும் அதிகமான முதல் தேவைப்படுவதாக குறைநிரப்பு பிரேரணை ஒன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

எனினும் அவிசாவளை கொஸ்கம சாலாவ இராணுவ முகாமிலுள்ள ஆயுத களஞ்சியசாலை வெடிப்பினால் பொது மக்கள் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை அரசாங்கம் வழங்கி வருகின்றமையால் குறித்த தொகையினை ஒதுக்க முடியாத நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-10)

# மகிந்தவிற்கு ஜப்பானில் அமோக வரவேற்பு!





(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள வேளை, அவருக்கு அங்கு பலத்த வரவேற்பு கிடைப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் ஜப்பானில் உள்ள இலங்கையர்கள் அதிகம் கலந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் தனக்கு வரவேற்பளிக்கும் இலங்கையர்ளை கண்டு பெருமிதம் அடைவதாக மகிந்த குறிப்பிட்டுள்ளதாக அவரது தரப்பினர் கூறியுள்ளனர். (இ-10)

# 85,000 மெட்ரிக் தொன் நெல் சந்தைக்கு

(கொழும்பு)

நெற் களஞ்சிய சபையிலிருந்து பெருந்தொகையான நெல்லை சந்தைக்கு விநியோகிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 85 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல்லானது சந்தைக்கு வழங்கப்படவுள்ளதாக நெல் களஞ்சிய சபையின் தலைவர் எம்.பீ. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்கான டென்டர் அறிவிப்பு அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரை நெற் களஞ்சிய சபையில் உள்ள 2 இலட்சம் மெட்ரிக் தொன் நெல் சந்தைக்கு விநியோகிப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீண்டும் ஒரு தடவை மத்தள விமான நிலையத்தில் நெல்லை களஞ்சியப்படுத்தும் தேவை இல்லை என கிராமிய பொருளாதார அமைச்சர் பீ.ஹரிசன் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் மத்தள விமான நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நெற் தொகையும் அங்கிருந்து முற்றாக அகற்றப்பட்டுவிட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இலங்கைக்கான சுற்றுலாப்பயணிகளின் வருகை கடந்த மார்ச் மாதம் அதிகரித்துக் காணப்பட்டது

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 22.8 வீதமாக அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் முதலாவது காலாண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 22.1 ஆக காணப்பட்டதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அதிகரிப்புக்கு சீன, இந்திய பயணிகள் வருகை பெரியளவில் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும், முதலாவது காலாண்டு வருமானம் 969.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## எது நமக்கு சம்பந்தமில்லாத விடயம்?

சில விடயங்களை நம்மால் கண்டும் காணாமல் இருக்க முடிவதில்லை.

தலையிட்டே ஆக வேண்டியிருக்கிறது.

சில விடயங்களில் நமக்கேன் வம்பு என்று ஒதுங்க வேண்டியிருக்கிறது.

இவற்றைத் தவறாக முடிவு செய்யும் போது தான் நமக்கு நட்டமும் அவமானமும் அவப்பெயரும் உண்டாகின்றன. எனவே, இந்த விடயத்தில் நாம் ஓரளவு நம்மைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்கிற ஆசை அதிகமாக வருகிற போது நமக்குத் தேவையில்லாத விடயங்களில் தலையிடுகிற அவசியம் ஏற்படுகிறது.கண்ணுக்குத் தெரிந்து ஒரு தவறு நடக் கும் போது – அது நிறுத்தப்பட வேண்டும் என்கிற ஆசை எழுகிற போது அத்தகைய விடயங்களில் தலையிட நேரிடுகிறது.

சில விடயங்களில் கொழுப்பெடுத்துப் போய்த் தலையிட நேரிடுகிறது. இருவரிடையே கைகலப்பு. சமாதானம் செய்யப் போனவர் கொலை என்று நாம் பத்திரிகையில் படிக்கிறோம். இதைப் பார்த்துவிட்டு இனிக் கை கலப்பு எங்கு நடந்தாலும் நாம் அங்கு நிற்கக் கூடாது என முடிவுக்கு வருவது பொருத்தமாகாது.

இந்த மாதிரி விடயங்களில் சமாதானம் செய்யப் போகிறவர்கள் எவரேனும் ஒருவரை ஆதரிக்க, துணையாயும் ஒருவனுக்கு எதிராகிவிடுவதால் அவனுக்கு நம் தலையீடு தேவையற்றதாகப்பட ஆரம்பிக்கிறது.

எனவே,சண்டையடித்துக் கொள்கின்ற முன் பின் தெரியாத இருவர் நடுவே தலையிடுபவர்கள் யார் பக்கம் நியாயம் என்கிற விசாரணை யெல்லாம் அப்புறமாகத்தான் வைத்துக் கொள்ள வேண்டும்.அந்த நிமிடத்துக்கு வார்த் தைகள் முற்றிக் கைகலப்பு, அதிகமாகி விடாத படி பார்த்துக் கொள்ள வேண்டியதே முதல் கடமை. சரி சரி விடுங்க ! உணர்ச்சி வசப்படா தீங்க! வெரிசுபடுத்தாதீங்க! உங்களுக்குள் வச்சுக்குங்க! ஏன் நாலு பேருக்குத் தெரிகிற மாதிரி நடு ரோட்ல வச்சுக்கிறீங்க! என்பதாகப் பொதுவான சமாதான மொழிகளைக் கூற வேண்டுமே தவிர , நீ செய்தது தவறு, நீ செய்தது சரி என்று தராசைத் தூக்கக் கூடாது. தராசைக் கையில் தூக்கும் போதுதான் யோவ் இது உனக்குச் சம்பந்தமில்லாத விடயம். இதில் நீ தேவை இல்லாமல் தலையிடாதே என்று பாதிக்கப்பட்டவர் நம்மைக் குத்திக் காண்பிப்பார்.

இதே விடயத்தில்,நமக்குத் தெரிந்தவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய குணாதிசயங்களை வைத்துத்தான் இது உனக்குச் சம்பந்தமில்லாத விடயம் என்று கூறுவாரா மாட்டாரா என்பதை முடிவு செய்ய முடியும்.

இது எங்கள் குடும்ப விடயம். இதில் தலையிட நீ யார்?என்ற கேள்வி எப்போது எழும் தெரியுமா?

நாம் மிதமிஞ்சியும் உணர்ச்சிவயப்பட்டும் பேசும் போது ஏற்படலாம்! நம்மைப் பற்றிய அபிப்பிராயத்தில் அவர்களுக்கு ஏற்கனவே ஒரு கரும்புள்ளி ஏற்பட்டிருந்தால் ஏற்படலாம். நாமே அத்தகைய குறைகளை, குற்றங்களைச் செய்து விட்டு இன்று மட்டும் புத்தர் வேடம் புனைய முயன்றால் ஏற்படலாம். வாக்கு சாதுரியம் இல்லாமல் இதமாகச் சொல்லத் தெரியாமல், உணர்ச்சிக்ளுக்கு அடிமையாகிப் பேசினால் ஏற்படலாம்.பெரும்பாலோர் கருத்துடன் நம் கருத்து ஒத்துப் போகாத படி இருந்தால் ஏற்படலாம்.

இப்படியெல்லாம் நம் தலையீடு அமையுமானால் நீ யார் இதில் தலையிட என்று கேட்கமாட்டார்கள்.

நம் தலையீட்டினால் சுமுகமான சூழ் நிலை உருவாகும் என்ற நம்பிக்கை இருக்குமானால் அதற்கு ஏற்றாற் போல் நாம் சமயோசிதமாகச் செயற்படுவோமே யானால் நம் தலைக்குக் கிரீடமே சூட்டப்படும்.

**லேனா தமிழ்வாணன்**

# வெளிநாடு செல்ல டிலானுக்கு அனுமதி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் அலஸ் வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

சுனாமி வீடமைப்பு நிதி மோசடியில் ஈடுபட்டதாக அலஸ் உள்ளிட்டோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரடா என்னும் நிறுவனத்தின் ஊடாக சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதாக சுமார் 167 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்ததாக கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் சந்தேக நபரான டிலான் அலஸ் மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாட்டு பயணம் செய்ய கொழும்பு நீதவான் ஏ.ஏ.ஆர். ஹெய்யன்துடுவ அனுமதி வழங்கியுள்ளார்.

மருத்துவ சிகிச்சைகளுக்காக சிங்கப்பூர் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணி ஊடாக டிரான் அலஸ் முன்னதாக கோரியபோது அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அதன் பின்னர் மீளவும் சட்டத்தரணிகளின் ஊடாக அலஸ் இந்தக கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் அலகக்கோனினால் வழங்கப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் மூன்று மாத காலத்திற்குள் மூன்று வார காலத்திற்கு வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுக்கொள்ள நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணை ஆகியனவற்றை மேலதிக பிணைகளாக வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-14.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- | --- |
| அமெரிக்கா | டொலர் | 142.54 | 146.30 |
| பிரிட்டன் | பவுண்ட் | .201.56 | 208.81 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.97 | 166.40 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.97 | 153.18 |
| கனடா | டொலர் | 110.45 | 115.09 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.32 | 109.25 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.71 | 108.84 |
| இந்தியா | ரூபா | 2.1580 | ------- |
| சீனா | யுவான் | 21.9765 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
| --- | --- | --- |
| பகரெயின் | டினார் | 383.9250 |
| குவைத் | டினார் | 480.2980 |
| ஓமான் | ரியால் | 375.9429 |
| கட்டார் | ரியால் | 39.7658 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.5957 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.4074 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 600 | 800 |
| தக்காளி | 230 | 180 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 80 |
| கோவா | 220 | 130 | 180 | 200 | 180 |
| கரட் | 230 | 150 | 260 | 400 | 200 |
| பூசணி | 60 | 70 | 70 | 100 | 70 |
| புடோல் | 80 | 100 | 100 | 120 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 130 | 150 | 140 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 200 | 220 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 160 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 200 | 180 | 180 | 160 | 200 |
| லீக்ஸ் | 230 | 180 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 180 | 200 | 200 | 40 |
| கறிமிளகாய் | 300 | 260 | 260 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 240 | 150 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | 180 | 200 | — |
| கீரை - 1பிடி | 40 | 25 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 260 | 200 | 300 | 200 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-30 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 140 | 150 | 160 | 240 | 160 |
| வெங்காயப்பூ | 250 | — | 400 | — | 320 |
| முள்ளங்கி | 100 | — | — | 160 | 150 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | — | 80 | 80 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ராஜீவ்காந்தி கொலை குறித்து பிரபாகரன் பேட்டி 205

### தடையை நீக்க வேண்டும்

கேள்வி:- இந்தியாவில் விடுதலைப்புலிகள்மீதான தடை நீக்கபட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில்:- அதுபற்றி யோசிக்கத்தான் தாய்லாந்து செல்கிறோம். இந்தியாவில் எங்கள் மீதான தடை நீக்க பட வேண்டும் என்று விரும்புகிறோம். சந்தர்ப்பம் வரும் போது வலியுறுத்துவோம்.

### ராஜீவ் கொலை

கேள்வி:- உங்கள் மீது தடையை நீக்க ராஜீவ்காந்தி வழக்கு தடையாக இருக்கிறதா?

பதில்:- இந்த வழக்கு விசாரணையில் இருக்கும் வரை நாங்கள் கருத்து கூற இயலாதவர்களாய் இருக்கிறோம்.

கேள்வி:- நீங்கள் ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தபட்டு இருக்கிறீர்களா?

பதில்:- இது 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த துயர சம்பவம் இதுபற்றி கருத்து தெரிவிக்க விரும்பவில்லை.

கேள்வி:- இந்த பிரச்சினையில் தான் உங்களது சமரச பேச்சுக்கு இந்தியாவில் இடம் கிடைக்கவில்லை என்பதை அறிவீர்களா?

(இந்த நேரத்தில் ஆண்டன் பாலசிங்கம் தற்போது அமைதி ஏற்படும் சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் பழைய பிரச்சனைகளை தோண்டிக் கொண்டு இருக்க வேண்டாம். என்று ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான கேள்விகளுக்கு முற்று புள்ளி வைத்தார்)

### ஆயுதப் போராட்டம்

கேள்வி:- 25 வருடமாக ஆயுத போராட்டம் நடத்தி வருகிறீர்கள். இப்போது சமாதான பாதைக்கு வந்துள்ளீர்கள். அது ஏன்?

பதில்:- பொதுவாக எங்கள் போராட்டம் சமாதான வழியில் தான் ஆரம்பித்தது. எங்களது முன்னைய தலைவர்களும் அமைதி வழியில் போராடி உரிமைகளை பெற முயற்சி செய்து இருக்கிறார்கள். ஆனால் அந்த முயற்சி மறுக்கப்பட்டு இனவாதம் கட்டவுழ்த்து விட்டதால்தான் ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டோம். எனவே நிர்ப்பந்தத்தில் தான் ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளப் பட்டோம். ஆனால் சந்தர்ப்பம் வரும்போது சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

கேள்வி:- நீங்கள் சமாதானத்தை விரும்புகிறீர்கள் என்றால் ஆயுதங்களைக் கைவிடுவீர்களா?

பதில்:- மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்குமானால் அது பற்றி பரிசீலனை செய்வோம். எங்கள் இயக்கத்தின் மீதான பயங்கரவாதத் தாடைச்சட்டம் நீக்கப்பட வேண்டியது முக்கியமானது. இதைப் பேச்சு வார்த்தையின் போது வலியுறுத்துவோம். பாராளுமன்ற குழு தலைவர்களிடமும் வலியுறுத்துவோம் ஜெயிலில் இருக்கும் விடுதலைப்புலிகளையும் விடுதலை செய்ய முயற்சி மேற்கொண்டு வருகின்றோம்.

### தலைமறைவு

கேள்வி:- தலைமறைவு வாழ்க்கையைக் கைவிடுவீர்களா?

பதில்:- எங்களுடைய வாழ்க்கை தலைமறைவானது தான். கஷ்டங்கள் இருப்பதற்காக இதை விட முடியாது. உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம்.

கேள்வி:- கொரில்லா வாழ்க்கையை கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் சேர விரும்புவீர்களா?

பதில்:- கொரில்லா வாழ்க்கை, எங்கள் மக்களின் விடுதலைக்காகத்தான். எங்கள் நலனுக்காக அல்ல.

கேள்வி:- ஜனநாயக அமைப்பில் ஈடுபடுவீர்களா?

பதில்:- பேச்சு வார்த்தை வெற்றி பெறும் என்றால் விடுதலைப்புலிகள் ஜனநாயக அமைப்பில் ஈடுபடுவார்கள்.

### சந்திரிகா

கேள்வி:- சந்திரிகா பேச்சு வார்த்தையில் குழப்பம் ஏற்படுத்துவார் என்று கூறப் படுகிறதே?


பதில்:- நாங்கள் அப்படி நினைக்கவில்லை. அவர் அதற்கான முயற்சி செய்வார் என்றால் ரணில் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி:- பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய உதவி கோரப்படுமா?

பதில்:- இந்திய உதவி இல்லாமல் தமிழர் பிரச்சினையில் நிரந்தர தீர்வு ஏற்பட முடியாது. இந்தப் பிரச்சினை இந்தியா தலையிட்டு தீர்வு காணாமல் இருந்தால் அது தமிழர்களுக்குத் துயரமாகத்தான் இருக்கும் இந்தியா இல்லாமல் இந்தியாவின் உதவி மற்றும் அனுதாபம் இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட முடியாது. இந்தியா மிகப் பெரிய நாடு இந்தியாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் நாங்கள் கஷ்டங்களை அனுபவித்து விட்டோம். இந்தியா எங்கள் தந்தை நாடு. இந்தியாவுடன் புதிய நட்பு மற்றும் ஆழமான உறவு வேண்டும் என்று விடுதலைப்புலி இயக்கம் விரும்புகிறது.

கேள்வி:- இந்திய அமைதிப்படையினரின் அனுபவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்:- இந்திய அமை திப்படையினர் தமிழ் மக்களுக்கு பல கொடுமைகள் இழைத்து இருந்தாலும் கூட எங்கள் மக்கள் இந்தியாவை இன்னும் நேசிக்கின்றனர். மரியாதை செலுத்துகின்றனர்.

(தொடரும்)

# இந்தோனேசியாவுக்கே திரும்பியது இலங்கைத் தமிழ் அகதிகள் படகு

44 இலங்கைத் தமிழ் அகதிகளுடன், இந்தோனேசியக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த படகு, அவுஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டுச் சென்ற போதும், மீண்டும் ஆச்சே பகுதிக்குத் திரும்பி வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கர்ப்பிணி உள்ளிட்ட 15 பெண்கள், ஒன்பது சிறுவர்கள் உள்ளிட்ட 44 பேருடன் இந்தியாவில் இருந்து புறப்பட்ட அகதிகள் படகு, இயந்திரக் கோளாறினால், இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தின், லொஹொக்கா கடற்கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டது.

படகில் இருந்தவர்களிடம் எந்த ஆவணங்களும் இல்லாத நிலையில் அவர்களை தரையிறங்க அனுமதிக்க மறுத்த இந்தோனேசிய அதிகாரிகள், பழுதடைந்திருந்த இயந்திரத்தை திருத்தி, 1000 லீற்றர் டீசலையும் மற்றும் உணவுப் பொருட்களையும் கொடுத்து, தமது நாட்டுக் கடற்பரப்பை விட்டு வெளியேறுமாறு கூறினர்.

இதையடுத்து, நேற்று முன்தினம் அகதிகள் படகு அவுஸ்திரேலியா நோக்கி பயணமானது, ஆனால் நேற்று முன்தினம் மீண்டும் ஆச்சே மாகாணத்துக்கு அகதிகள் படகு திரும்பியது.

தமக்கு 1000 லீற்றர் டீசல் போதாது என்றும், மேலும், 6000 லீற்றர் டீசல் தருமாறும் படகில் இருந்தவர்கள் கோரியுள்ளனர்.


எனினும், மேலதிகமாக 6000 லீற்றர் டீசலை வழங்க முடியாது என்றும், அதன் பெறுமதி மிக அதிகமானது என்றும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1000 லீற்றர் டீசலை வழங்க முன்வந்த போது அவர்கள் மறுத்து விட்டதாக, ஆச்சே குடிவரவுப் பணியக அதிகாரி ஆச்மாட் சமடான் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி இந்தோனேசிய உள்துறை அமைச்சின் அதிகாரிகளுடன் தாம் கலந்துரையாடியதாகவும், எனினும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், இந்த விவகாரத்தை ஆளுநரிடம் கொண்டு செல்வதற்கு தாம் இணங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்தப் படகில் பயணம் மேற்கொள்ளும் அகதிகளில் சிலர், தமிழ்நாட்டின் பவானி சாகர் முகாமில் இருந்தவர்கள் என்று, அங்குள்ள சிலர் அடையாளம் கண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த முகாமில் இருந்த 23 பேர் கடந்த மாதம் காணாமற்போயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)








## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 752

Search for people, places and things — Nagendram Home

ரதி

"ஒரு பெண்ணிற்கு
தாலி கட்டிய கணவனாய்
இருப்பதை விட..!
நல்ல நண்பனாய்
இருந்து வாழ்வது தான்
உண்மையான
இல்லறவாழ்க்கை..!

புகழ்




மது





கஜரூபன்




டினோ

பாசமான தாயும்! மோசமான சேயும்!



பத்து மாதங்கள் தன் வயிற்றை
வீடாக வழங்கிய தாய்க்கு
இன்றைய பிள்ளைகள் வழங்கும்
வீடு முதியோர் இல்லம்!

அபி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் இலங்கை அரசினதும் ஐ.நாவினதும் கடப்பாடுகள்

1. மீள நிகழாதிருத்தலை உறுதிப்படுத்துதல்:

1948 இற்குப் பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அனைத்து சிங்கள பெரும்பான்மையின அரசாங்கங்களும் இனத்துவ அரசியல் கொள்கையையே கடைபிடித்து வந்தன. அரசியல், பொருளாதாரம், சிவில் நிர்வாகம், நீதித்துறை, அரச சேவைகள், பாதுகாப்புத்துறை ஆகிய கட்டமைப்புகள் அடங்கலாக அனைத்து சமூக அங்கங்களிலும் இன்றுவரை இனவாதம் வெளிப்பட்டு வருகிறது.

இனவாத அடக்குமுறைகளிலிருந்தும், தொடரும் அரச பயங்கரவாதத்திலிருந்தும் விடுதலை கிடைத்திடும், தம் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட யுத்த குற்றங்களுக்கு நீதி கிடைத்திடும், தமிழர் பிரச்சினைக்கு ஏற்புடைய அரசியல் தீர்வு எட்டப்படும் எனும் அவாவுடன் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சி அரசுக்கு வாக்களித்தனர். நல்லாட்சி அரசும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து இனப்பிரச்சினைத் தீர்விற்காக நிலைமாறுகால நீதி செயற்றிட்டத்தை முன்னெடுக்க நல்லெண்ண அறிகுறிகளை வெளிப்படுத்தியது.

எனினும், இன்றைய நல்லாட்சி அரசானது இனவாதசிந்தனைகளைக்கொண்டவர்களையும் கடந்த காலங்களில் நேரடியான இன அடக்கு முறைகளில் ஈடுபட்டவர்களையும் இணைத்துத்தான் உருவாகியுள்ளது. எனவே, அரசாங்கத்தின் முன்னணி அரசியல் தலைமைகளால் நிலைமாறு கால நீதிக்கான முன்னெடுப்புகளை ஜனநாயகமான முறையிலும், உரிமைசார் அணுகுமுறையிலும் முன்னெடுக்க முடியாத நிலையே காணப்படுகிறது. காரணம்:

அ) அரசைகொண்டு நடத்துவதற்கான பலமான ஆதரவு தற்போதைய நல்லாட்சி அரசுக்கு இல்லாதிருப்பதுடன் இனவாத சக்திகள் ஆட்சியை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளது.

ஆ) நிலைமாறுகால நீதியை முன்னெடுக்க உரிய சட்ட மற்றும் அரசியல் நிபுணத்துவமும் அனுபவமும் உடையவர்களும் நிலைமாறுகால நீதி செயல் வழியை (Process) அறிந்தவர்களும் இல்லாமை.

இந்நிலையில், 24 செப்டெம்பர் 2015 ஐ.நா. மனித உரிமைகள் பேராயத்தின் 30 அமர்வில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் ஏற்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்ற வேண்டிய கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே, இலங்கையின் ஆட்சியை நிர்ணயிக்கும் சிங்கள இனவாத தரப்பையும் சமாளித்துக்கொண்டு ஐ.நா.வையும் இலங்கையில் மனித உரிமை முன்னெடுப்புகளை ஆதரிக்கும் சர்வதேச நாடுகளையும் நம்பச்செய்யும் ஒருபோக்கையே தற்போதைய இலங்கை அரசு கடைப் பிடிக்கிறது. இதன் மூலம் ஐரோப்பிய பொருளாதாரத் தடையை இல்லாமல் செய்வது, குறிப்பாக மேற்குநாடுகளுடன் பொருளாதார உறவுகளை வளர்ப்பது ஆகியனவே அரசின் குறிக்கோளாகும். "நல்லிணக்கப் பொறிமுறைகள்" "நிலைமாறுகால நீதி" எனும் அரச முன்னெடுப்புகளுக்குள் நகரமயப்பட்ட பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து நகரமயமாக்கலுக்குட்பட்ட சிங்கள மக்களை திருப்திபடுத்துவதே அரசின் நோக்கமாகும். இனவாத அரச கட்டமைப்பை மாற்றுவதோ தமிழ் மக்களுக்கு ஏற்புடைய அரசியல் தீர்வை ஏற்படுத்தி நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதோ அரசிடம் தென்படவில்லை. காரணம்:

அ) ஐ.நா. மனித உரிமைப் பேராயத்தின் 30வது அமர்வின் இலங்கை மீதான தீர்மான அறிக்கையின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையின் "தேசிய கலந்துரைடல்" குறித்து வலியுறுத்துகின்றன. இதற்கமைய 29 ஒக்டோபர் 2015 அன்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் தலைமையில் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் "நிலை மாறுகால நீதிக்கான தேசிய கலந்துரையாடல்" குறித்து பிராரம்ப கூட்டம் ஒன்று நடைபெற்றது. தேசிய கலந்துரையாடலை முன்னெடுப் பதிலுள்ள பிரதான சவாலாக இராணுவ மயமாக்கம் இருப்பதுவும் இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் சுதந்திரமாக மக்கள் கூட்டங்களை நடத்தி கருத்துக்களை பகிர்ந்து கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதும் பங்குபற்றுனரால் அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

ஆ) இதன் பின்னர் அரசு திருமதி மனோகரி முத்தெட்டுவகமவை தலைவராகவும் பாக்கியசோதி சரவண முத்துவை செயலாளராகவும் கொண்டு 11 பேர் கொண்ட தேசிய கலந்துரையாடலுக்கான செயலணி ஒன்றை 26 ஜனவரி 2016 அன்று வெளிவிவகார அமைச்சரின் பொறுப்பில் உருவாக்கியது.

இ) இது இவ்வாறிருக்க அரசு பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை பெறுவதற்கான "கலந்துரையாடல்" நடைபெறுவதற்கு முன்பே பின்வரும் நான்கு கட்டமைப்புகளை முன்மொழிந்தது:

- விசேட சட்டத்தரணிகளுடனான நீதித்துறை பொறிமுறை
- உண்மை, நீதி, நல்லிணக்கம், மற்றும் மீள் நிகழாமை ஆணைக்குழு
- இழப்பீடுகளுக்கான அலுவலகம்
- காணாமற் போனோர் பற்றிய அலுவலகம்

ஈ) 16 மே 2016 அன்று வெளிவிவகார 'அமைச்சில் செயற்பணி உறுப்பினர்களுக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது. காணாமற் போனோர் அலுவலகம் குறித்து அரசால் வெளியிடப்பட்டிருந்த பிரசுரத்தில் கூறப்பட்டிருந்த சட்ட அம்சங்கள் மற்றும் இன்ன பிற விடயங்கள் குறித்து சிவில் பிரதிநிதிகளால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, "எமக்கு அறிவிக்காமல் அரசு பல 'விடயங்களை தானாக முடிவெடுத்து செய்கிறது. பின்னரேயே நாம் தெரிந்துகொள்கிறோம்" என செயற்பணி உறுப்பினர்கள் கூறினர். குறிப்பாக மேற்படி நான்கு கட்டமைப்புகளுக்கான சட்டங்கள் வரைவது குறித்து செயற்பணி உறுப்பினர்கள் அறிந்திருக்கவில்லை.

உ) பாதிக்கப்பட்ட மக்களும் சிவில் அமைப்பினரும் மேற்படி கட்டமைப்புகள் குறித்து அறிந்துகொள்வதற்கும், தேசிய கலந்துரையாடல் நடைபெறுவதற்கும் முன்பே "காணாமற் போனோர் பற்றிய அலுவலகத்தை" ஸ்தாபிக்க 19 மே 2016 அன்று பாராளுமன்றத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. 27 மே 2016 அன்று பிரதமரின் பணிப்புரைக்கமைய காணாமற் போனோர் அலுவலகம் தொடர்பான சட்ட வரைபு அரச வெளியீட்டலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் கரிசனைகளும் கோரிக்கைகளும் இதில் அடங்கவில்லை. இந்த வழிமுறைகள் எதனையும் அவர்கள் அறியவில்லை. இது நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு அடிப்படையில் முரணான அணுகு முறையாகும்.

ஊ) நல்லிணக்கத்திற்கான அறிகுறிகளோ நிலைமாறுகால நீதியை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளோ இதுவரையில் அரச தரப்பால் முன்னெடுக்கப்படவில்லை.

- போர் முடிந்து 7 வருடங்கள் பூர்த்தியாகி விட்டது. இன்று வரையில் இராணுவ மயமாக்கமும் சிங்கள பௌத்த விஸ்தரிப்புகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.
- சிவில் நிர்வாகத்திலும் பொருளாதாரத்திலும் இராணுவத்தின் தலையீடும் ஆதிக்கமும் இன்றுவரையிலும் தொடர்கிறது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகள் யாவும் ஐ.நா. மனித உரிமைகள் பேராயத்தின் 30ஆவது அமர்வின் தீர்மானத்துக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை மீதான் விசாரணை அறிக்கையின் பரிந்துகைளுக்கும் முரணாகவே உள்ளது. எனவே, இலங்கை அரசினால் நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி எனக்கூறப்படும் எந்த ஒரு நகர்வும் இலங்கையில் தமிழர்கள் எதிர்கொண்டு வரும் அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதில்லை என நாம் காண்கிறோம்.

அனைத்து மாவட்டங்களிலும் பங்குபற்றுனர்களின் ஏகோபித்த கருத்து இலங்கை அரசாங்கத்தின் முன்னெடுப்புகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்பதும் ஐ.நா.வின் நேரடிப் பங்குபற்றுதல் மூலமே தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைக் கோர முடியும் என்பதாக இருந்தது. தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுதல், வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கான அரசியல் அதிகாரம், திட்டமிட்ட இனப்படுகொலை சார்ந்து போர்க்குற்ற விசாரணை, காணாமல் ஆக்கப்டோர் நிலை குறித்து அரசு வெளிப்டையாக அறிவித்தல் போன்றன அனைத்துத் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டன. போர்க்கால பாலியல் குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்கக்கூடாது எனும் கருத்து பெண்களால் வலியுறுத்தப்பட்டது.

2. ஐ.நா.வின் கடப்பாடுகள்:

பாதிக்கப்பட்டோரின் மேற்படி கோரிக்கைகளுடன் ஒப்பிடுகையில், இலங்கைத் தமிழர்கள் குறித்த ஐ.நா.வின் நிலைப்பாடானது போர்க்குற்ற விசாரணை என்பதற்குள் மாத்திரம் மட்டுப்பட்டுள்ளது. இது ஐ.நா. தனது அனைத்துலக மனித உரிமைக் கோட்பாடுகளையும் மனித உரிமைச் சட்டங்களையும் முழுமையாக தனது அங்கத்துவ நாட்டு மக்கள் சார்ந்து முன்னேற்றுவதற்கு தடையாக உள்ளது. அவ் வகையில்:

அ) இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் ஐ.நா. "இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில்" நேரடி பங்குதாரராக வேண்டும்.

ஆ) நிலைமாறுகால நீதிக்கான முன்னெடுப்புகளை முன்னெடுக்க முடியாத அரசியல் தடுமாற்றமும் வெளிப்படைத்தன்மையும் அற்றதாக தற்போதைய இலங்கை அரசு உள்ளது. அதனால் நல்லிணக்கத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் அடித்தளமிட முடியாத சூழலே இலங்கையில் காணப்படுகிறது. இந்நிலையில், இந்த அரசின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் மீண்டும் சிங்கள கடும்போக்குவாதிகள் ஆட்சிப் பொறுப்பேற்றால் நல்லிணக்கம் உருவாவது இன்னும் பலவருடங்களுக்குத் தள்ளிப்போகும். தமிழர்கள் இன்னும் பல அடக்குமுறைகளை எதிர்கொள்ள நேரிடும். வெளிப்படைக்கு நல்லாட்சி அரசு நிலை மாறுகால நீதிக்காக பல திட்டங்களை முன்னெடுப்பது போல் தோன்றினாலும் அடிப்படையில் ஐ.நா.வினதும் மனித உரிமை ஆர்வமுள்ள சர்வதேச நாடுகளினதும் நேரடிப் பங்களிப்பின்றி அதனால் முன்னேற முடியாத நிலைமையே உள்ளது.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, வடக்கு கிழக்கு தமிழர் சார்ந்து ஒரு பிதிநிதித்துவ ஒத்துழைப்பாளராக இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் பங்கேற்க ஐ.நா. முன்வர வேண்டுமெனக்கோருகிறோம். ஐ.நா.வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை அரசுக்கு ஐ.நா. அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இ) "இலங்கையில் நிலை மாறுகால நீதிக்கான ஐ.நா. - இலங்கை கூட்டுப் பொறி முறையாக" இது அமைய வேண்டும். ஐ.நா.வினால் நியமிக்கப்படும் சட்ட-அரசியல் நிபுணர் குழுவின் தலைமைத்துவத்தில் இலங்கை நிபுணர்களும் அடங்கிய கட்டமைப்பாக இது அமைய வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது சட்ட ரீதியாக கட்டுப்படுத்தும அதிகாரத்தைக் கொண்டிருப்பதாலேயே நாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை வலியுறுத்துகிறோம்.

இத்தகைய ஒரு பொறிமுறையால் மாத்திரமே இலங்கையில் உண்மையான அர்த்தத்தில் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்கவும் நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தையும், தமிழர்களுக்கு உரிய அரசியல் தீர்வையும் ஏற்படுத்த ஒத்துழைக்கவும் முடியும் எனக் காண்கிறோம்.

ஈ) ஐ.நா. - இலங்கை கூட்டுப் பொறிமுறைக்கு உட்பட்டதாக பின்வரும் கட்டமைப்புகள் அடங்க வேண்டும். இவ் ஒவ்வொரு கட்டமைப்பும் ஐ.நா. பிரதிநிதிகளைத் தலைமைத்துவமாகக் கொண்டு இலங்கை நிபுணர்களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்:

1. வடக்கு கிழக்கு தமிழர் அரசியல் உரிமை மற்றும் அரசியல் அதிகாரம் குறித்து தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கும் குழு
2. போர்க்குற்ற விசாரணைக்கான கலப்பு நீதி மன்றம்
3. பயங்கரவாத தடைச் சட்டத்தின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விசேட அலுவலகம்
4. வடக்கு கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான கண்காணிப்பகம்:

- மீள்குடியேற்றமும் காணி உத்தரவாதமும்
- மக்கள் பாதுகாப்பு
- படை விலகல்
- ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளை முற்றாகத் தடுத்தல்
- சீரான பொலிஸ் மற்றும் சிவில் நிர்வாகம்
- சிங்கள பௌத்த விஸ்தரிப்பையும் அத்துமீறிய காணி சுவீகரிப்பையும் தடுத்தல்

**வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு**

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியுதவி

மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியானது இரண்டு மில்லியன்டொலரை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தமானது நேற்று முன்தினம் திறைசேரியின் செயலாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

இது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கிக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில்கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற கால நிலையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு அவசர வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்த வேண்டிய கட்டாய நிலைமையினை நாடு எதிர்நோக்கியுள்ளது.

அந்தவகையில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும் முகமாகவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய பசுபிக் நாடுகளுக்கிடையிலான அனர்த்த முகாமைத்துவ நிதியத்தினால் இரண்டு மில்லியன் டொலர் உதவித் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

# எட்கா தொடர்பில் தேசிய கொள்கை வலியுறுத்தி 10 லட்சம் கையொப்பம்

## அரச வைத்தியர்கள் சங்கம் நடவடிக்கை

இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் முன்னெடுக்கப்படவுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான (எட்கா) சர்வதேச வியாபார உடன்படிக்கைக்கு முன்னர் அது தொடர்பான தேசிய கொள்கையொன்றை அமைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி 10 இலட்சம் கையொப்பங்களை சேகரிக்கும் நடவடிக்கையை அரச வைத்தியர்கள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் பொறுப்பானவர்கள் முறையான உடன்படிக்கையொன்றைத் தயாரிக்க வேண்டும் எனவும் அச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-10)

# வடமாகாணத்தில் முன்மொழியப்பட்ட மீன்பிடி அபிவிருத்தி கருத்திட்டங்கள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க, போரினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களான யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீன்பிடித்துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டத்தை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வடமாகாணத்திற்கான நிலைபேறான மீன்பிடித்துறை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 62 மில்லியன் டொலர் (US$) நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் நோக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை மற்றும் குருநகர் மீன்பிடி துறைமுகங்களையும் மன்னார் மாவட்டத்தில் பேசாலை மீன்பிடித் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதாகும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

வடமாகாணமானது கடந்த காலங்களில் மீன்பிடி உற்பத்தியில் சிறந்ததொரு மாகாணமாகக் காணப்பட்டது.

30 வருட காலயுத்தத்தின் பலனாக மீன்பிடி உற்பத்தியானது குறைவடைந்து காணப்படுவதுடன் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் அமுல்படுத்தப்படும் உத்தேச கருத்திட்டமானது மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள், கரையேறும் இடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றின் மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டுள்ளது.

யுத்தத்திற்கு முற்பட்ட காலங்களில், வடமாகாணமானது கடல்சார் மீன்பிடியில் 40% பங்களிப்பு செய்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டளவில் இப்பங்களிப்பானது 9% ஆக குறைவடைந்தது.

எனினும் கடலோர மீன்பிடியில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் விளைவாக இப்பங்களிப்பு 12% ஆக உயர்வடைந்துள்ளது.

யுத்தத்திற்கு முன் யாழ். மாவட்டம் ஒரேயொரு மீன்பிடித்துறைமுகத்தினை கொண்டிருந்தது. அது பின்னர் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் வடமாகாணத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மீன்பிடித் துறைமுகம் காணப்படவில்லை.

இதன் விளைவாக ஆழ்கடல் மீன்பிடியில் முழுமையாக ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. மீன்பிடித் துறைமுக வசதிகள் போதியளவு காணப்படாமை, பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் (multiday boats) மற்றும் இதர வசதிகள் போதியளவு காணப்படாமை என்பன மீன்பிடித் துறை அபிவிருத்திக்கு வரையறைகளாகக் காணப்படுகின்றன என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

### பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம்

சாத்தியவள ஆய்வுகள், பருத்தித்துறை துறைமுகத்தினை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்த நிலைபேறான



இடமாக அடையாளம் கண்டுள்ளதுடன் உத்தேச திட்டமானது அத்துறைமுகத்தின் படுக்கையை 12 ஹெக்டெயர்களாகவும் 5 மீற்றர் ஆழம் கொண்டதாகவும் அமைப்பதுடன் ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடும் படகுகளின் செயற்பாடுகளை வசதிப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இது டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தினை ஒத்ததாக விருத்தி செய்யப்படுவதுடன் மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்களை கொண்டிருக்கும். இதன் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபா 6 பில்லியன்களாகும்.

இது அலைதாங்கி (break water) கப்பல்துறை சுவர் (Quay wall), ஏலம்விடப்படும் அறை (Auction hall), குளிரூட்டும் அறைகள் (cool room) மற்றும் குளிரூட்டிகள் (Ice plant), ஆழமாக்கும் வசதிகள் (dredging facilities) மற்றும் படகுகள் திருத்தும் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை இது வசதிப்படுத்தும்.

### குருநகர் மின்பிடித் துறைமுகம்

யாழ். மாவட்டத்திலுள்ள குருநகர் துறைமுகமானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான உத்தேச கருத்திட்டத்தின் கீழ் 2.5 மீற்றர்களுக்கு ஆழப்படுத்தப்படும்.

இதன் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபா 4.8 பில்லியன்களாகும். இது அலைதாங்கி (breakwater), கப்பல் துறை சுவர் (Quay wall), ஏலம்விடப்படும் அறை (Auction hall), குளிரூட்டும் அறைகள் (cool room) மற்றும் குளிரூட்டிகள் (Ice plant), ஆழமாக்கும் வசதிகள் (dredging facilities) மற்றும் படகுகள் திருத்தும் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

ஆழமற்ற நீர் தொடர்பான வரையறை காணப்பட்ட போதிலும் உத்தேச திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வசதிகள், பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை வசதிப்படுத்தும்.

### பேசாலை மீன்பிடித் துறைமுகம்

மூன்றாவது மீன்பிடித் துறைமுகம் மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் அபிவிருத்தி செய்யப்படும். தற்போது இத்துறைமுகம் ஆழமற்றதாகவும் ஒருநாள் மீன்பிடி படகுகளின் செயற்பாடுகளை வசதிப்படுத்துவதாகவும் கரையோர வசதிகள் அற்றதாகவும் காணப்படுகின்றது.

பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதை வசதிப்படுத்தும் நோக்கில், உத்தேச கருத்திட்டத்தின் கீழ் இத்துறைமுகமானது 2.5 மீற்றர்களுக்கு ஆழப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## வாவியை குளியல் தொட்டியாக பயன்படுத்துமாறு கோரிக்கை

எதிர்வரும் பொசன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் நகரில் அமைந்துள்ள மூன்று பண்டைய குளங்களை சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக திஸ்ஸ வாவியை குளியல் தொட்டியாக பயன்படுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-10)

## வருடாந்த திருவிழா 18 ஆம் திகதி

யாழ்.புலோலி வட்மேற்கு அருள்மிகு வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. (இ-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்.சங்கானை சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்க காரியாலயத்திற்கு அருகாமையில் சங்கத் தலைவர் ச.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## அருள்ஒளி வெளியீடு

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் வெளியீடான அருள்ஒளி மாதாந்த சஞ்சிகையின் வைகாசி-ஆனி மாத மலர் வெளிவந்துள்ளது. (இ-5)

## மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று

யாழ்.நீர்வேலி சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசா கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சன்.தயாளன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.ஏ.செல்வ தயாளன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## இசை இறுவெட்டு வெளியீடு

புலோலி வடமேற்கு அருள்மிகு புலோலி வில்லி பாதி முருகனின் பாடல்களை உள்ளடக்கிய வில்லிபாதி வேலன் புகழ் மாலை என்ற இசை இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் மாலை 5.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (இ-5)

## தபால் பணியாளர்களின் பிரச்சினை குறித்து அமைச்சரவையில் விவாதம்

தபால் பணியாளர்களின் பிரச்சினைகள் அமைச்சரவை கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வரும் குறித்த பணியாளர்களது பிரச்சினைகள் பற்றி அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு வருவதாகவும் தபால்மா அதிபர் தெரிவித்தார். இதேவேளை இந்தப் பணிப்புறக்கணிப்பினால் ஆயிரக்கணக்கான கடிதங்கள் தபால்நிலையத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# மாபெரும் கல்வி கண்காட்சி

யா/யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டுமாபெரும் கல்வி கண்காட்சி ஜூன் 16, 17, 18 ஆகிய தினங்களில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில்நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தபால் திணைக்கள பிரதம கணக்காளரும் பழைய மாணவியுமாகிய திருமதி நவீனா பாலேசன் கலந்து கொள்வதுடன்சிறப்புவிருந்தினராகவலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.காண்டீபன் கலந்து கொள்ள்வுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.விக்னராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இக் கல்விக் கண்காட்சியில் கற்பித்தல் சாதனங்கள் சகல பாடத்திற்கும் அலகு ரீதியாக ஆசிரியர்களால் காட்சிப்படுத்தப்படுவதோடுயாழ்.பல்கலைக்கழகத்தின் முப்பரிமாண முறையிலமைக்கப்பட்ட நூலக முறைமையும் மூலிகைத் தோட்டத்திலிருந்து மூலிகைக் கண்காட்சியும் சித்த மருத்துவ வகைகளும் விவசாயதிணைக்களமும்யாழ்கோ நிறுவனமும் தமது உற்பத்தி நடவடிக்கையின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை அனைவரும் பார்வையிட முடியும் என கல்லூரிச் சமூகம் அறிவித்துள்ளது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## 183 சிவாஜி கணேசன் திருமணம்


அதற்கு பிறகு தான் சாதாரண கணேசன், சிவாஜி கணேசனானேன், சிவாஜி என்ற பெயர் தந்தை பெரியார் எனக்கு போட்ட பிச்சை என்று சிவாஜிகணேசன் தன் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் சிவாஜி கணேசன் திருமணம் பராசக்தி படம் வருவதற்கு சில மாதங்களுக்கு முன் நடந்தது.

**கே.ஆர்.ராமசாமி குழுவினர் சிவாஜி**

நடிகர் கே.ஆர்.ராமசாமி தன் நாடகக் குழுவை தஞ்சாவூரில் தொடங்கினார். இந்த நாடகக் குழுவில் சிவாஜி கணேசனும் இடம் பெற்றார்.

மனோகரா நாடகத்தில் கே.ஆர்.ராமசாமி மனோகரனாக நடித்தார். சிவாஜி கணேச்ன் மனோகரனின் தாயார் பத்மாவதியாக நடித்தார். இந்த சமயத்தில் தான் கே.ஆர். ராமசாமிக்காக ஓர் இரவு என்ற நாடகத்தை அண்ணா எழுதினார். ஒரே இரவில் நடைபெறும் சம்பவங்களை கொண்டு கதையை புதுமையாக எழுதியிருந்தார். இந்த நாடகத்தில் சிவாஜி கணேசனும் நடிப்பதாக இருந்தது. ஆனால் நாடகக் குடுழுவைச் சேர்ந்த ஒருவருடன் ஏற்பட் கருத்து வேற்றுமையால் அவர் நாடகத்தில் நடிக்கவில்லை. காஞ்சிபுரத்திற்கு சென்று திராவிட நாடக அலுவலகத்தில் தங்கிக் கொண்டு அண்ணாவுக்கு உதவியாக இருந்தார். அண்ணா பொதுக் கூட்டங்களுக்குச் செல்லும் போது சிவாஜியையும் தன்னுடன் அழைத்துச் செல்வார் மேடையில் பேசுவதற்கு பயிற்சி அளிப்பார்.



சிவாஜி கணேசன்-கமலா திருமணத்தின் போது எடுத்த ப்டம்

**சக்தி நாடக சபா**

இந்தக் காலகட்டத்தில் சக்தி நாடக சபா என்ற நாடகக் குழுவினர் நாடகங்களை நடத்தி வந்தனர். தங்கவேலுப்பிள்ளை என்பவர் இந்த நாடகக் கம்பனியின் உரிமையாளர் எனினும் சக்தி கிருஷ்ணசாமியின் முழுப்பொறுப்பில் இந்த நாடகக் கம்பனி நடந்து வந்தது.

இந்தக் கம்பனியில் முக்கிய நடிகர்களாக இருந்த எம்.என். நம்பியார் எஸ்.வி.சுப்பையா ஆகியோர் ஜுபிடப் பிக்சர்ஸ் தயாரித்த சினிமாப் படங்களில் நடிப்பதற்காக கோவை சென்று விட்டனர்.

எனவே சக்தி நாடக சபைக்கு அனுபவம்மிக்க நடிகர்கள் தேவைப்பட்டனர் சிவாஜியின் பழைய நண்பரான கரந்தை சண்முக வடிவேலு சக்தி நாடக சபை சார்பில் கஞ்சிபுரம் வந்து அண்ணாவை சந்தித்தார்.

சக்தி நாடக சபாவிற்கு நல்ல நடிகர்கள் தேவைப்படுகிறார்கள் நீங்க சிவாஜிகணேசனை அனுப்பிவைத்தால் உதவியாக இருக்கும் என்று கூறினார்

அண்ணா சிறிது யோசித்தார் பிறகு சிவாஜி கணேசனை அழைத்து கணேசா நீ சக்தி நாடக சபாவிற்கு போ உன்னை எப்போது திரும்பக் கூப்பிட வேண்டுமோ அப்போது அழைத்துக்கொள்கிறேன் என்றார்.

இதனால் அண்ணாவிடம் பிரியாவிடை பெற்று சக்தி நாடக சபாவிற்கு சிவாஜி சென்றார்.

சக்தி நாடக சபை அப்போது திண்டுக்கல்லில் நாடகங்கள் நடாத்திக் கொண்டிருந்தது. அந்தக்குழுவினர் சிவாஜிக்கு நல்ல மரியாதை கொடுத்தனர். முக்கிய வேடங்கள் அவருக்குக் கிடைத்தன.

**வேலூர் முகாம்**

திண்டுக்கலில் இருந்து பெங்களூர் சென்று விட்டு வேலூர் சக்தி நாடக சபா முகாமிட்டது.

அப்போது நுர்ஜகான் என்ற நாடகத்தில் நுர்ஜகானாக சிவாஜி நடித்தார்.

அந்த நாட்கத்தில் சிவாஜிக்கு வேடப் பொருத்தம் பிரமாதமாக இருக்கும் அசல் நுர்ஜகான் போலவே இருப்பார் அழகாக நடனமாடுவார்

நேஸனல் பிக்ஸர்ஸ் பி.ஏ.பெருமாள் இந்த நாடகத்தைப்பார்த்தார் சிவாஜியின் நடிப்பு அவரை வெகுவாகக்கவர்ந்தது எதிர்காலத்தில் மிகப்பெரிய நடிகராக சிவாஜி வருவார் என நினைத்தார்.

(தொடரும்)

# எச்.ஐ.வி. குறித்து தற்துணிவோடு பரிசோதனை மேற்கொள்ளுங்கள்

## வைத்திய அதிகாரி அறிவுறுத்து

ஏச்.ஐ.வி. தொற்று தொடர்பான தேவையற்ற பயத்தை அகற்றி தற் துணிவோடு பரிசோதனையை மேற்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பாலியல் தொற்றுநோய் தடுப்பு பிரிவு பெறுப்பு வைத்திய அதிகாரி திருமதி தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தொவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உளள எல்லா பிரதேசங்களிலும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படும் அபாயம் காணப்பட்டுள்ளது. அதாவது சந்தேகத்துக்கிடமான முறையில் பாலியல் தொடர்புகள் இருப்பதாக தெரிவித்து பரிசோதனை செய்வதற்காக பலர் எமது சிகிச்சை நிலையத்துக்கு வருகிறார்கள்.

அவர்களில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்கள் என கண்டு பிடிக்கப்பட்டவர்களுடைய தொடர்புகளை கேட்டறியும் போது அவர்கள் காலி, கண்டி, கொழும்பு போன்ற பிரதேசத்துடன் சேர்த்து யாழ்ப்பாணத்தில் உள்ள பல பிரதேசங்களும் உள்ளடங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த நபர்கள் யார் யாருடன் தொடர்பில் உள்ளார்கள் என்று தெரிந்து கொள்வதும் இவ்வாறு தொற்று ஏற்பட்டவர்களை நேரடியாக நாம் கண்டு பிடிப்பதும் கடினம். ஆனால் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டு அவை கண்டு பிடிக்கப் படாமல் பலர் யாழ். மாவட்டத்தில் உள்ளார்கள் என்பது உண்மை.

தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெறாமல் கடைசி நேரததில் வந்து பரிசோதனை மேறகெள்வதில் பயன் எதுவும் இல்லை என்றே கூற முடியும். அவர் மரணிக்கவும் சந்தர்ப்பம் உள்ளது.

யாழ் மாவட்டத்தில் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் பாலியல் தொடர்புக்கு உட்படுத்தப்பட்டார் என தெரிவிக்கப்பட்டு பரிசோ்தனை மேற்கொள்வ்தற்காக வருடாந்தம் 30 பேர் எமது சிகிச்சை பிரிவுக்கு வருகின்றனர்.

தொற்று ஏற்பட்டதாக அறியப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 21 பேரும் மிகவும் ஆரோக்கியமாக உள்ளனர்.

எனவே எச்.ஐ.வி. தொற்று தொடர்பாக தேவையற்ற பயத்தை அகற்ற வேண்டும். சந்தேகம் இருப்பவர்கள் பரிசோதனை செய்து கொள்ளாமல் தமது வாழ்கையை மன அழுத்தத்துடன் கழிப்பதை விட பரிசோதனையை மேற் கொண்டு அதை உறுதிப்படுத்துவது சிறந்ததாகும்.

யாழ் போதனா வைத்திய சாலையில் உள்ள பாலியல் தொற்றுநோய் தடுப்பு பிரிவு 33 ஆம் அறைக்கு வந்து நேரடியாக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் அவர்கள் தொடர்பாக விபரங்களை அவரது உறவினருக்கோ தாய் தந்தைக்கோ தெரிவிக்கப்படாமல் இரகசியம் பேணப்படும் என்பதை உறுதி அளிக்கிறேன்.

எம்து சிகிச்சை பிரிவுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்வதற்கு வருபவர்களில் 99 வீதமானவர்கள் தொழில் நிமிர்த்தம் மருத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்ள வருபவர்களும் கற்பிணித் தாய்மார்களுமே வருகிறார்கள். எனவே தேவையற்ற பயத்தை அகற்றி பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.



பரிசோதனை மேற்கொள்ளாமல் தமது வாழ்வை எண்ணி மன அழுத்தத்துக்கு உள்ளாவதை விட அதை உறுதி செய்து தொற்று ஏற்பட்டிருப்பின் தொடர்சியாக சிகிச்சையை பெற்று சராசரி மனிதர்களாக வாழ முடியும்.

சிகிச்சை பெற்று வந்தால் அவரிடம் இருந்து மற்றவருக்கு நோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பமும் மிக குறைவாக இருக்கும்.

இவ்வாறு கடந்த 2014 ஆம் ஆண்டு 64 பேர் தாமாகவே பரிசோதனை மேற்கொள்வதற்காக வந்தார்கள், கடந்த 2015 ஆம் ஆண்டு 109 பேர் வந்து பரிசோதனை செய்துள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்தகொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படதிட்ட மிடப்பட்டுள்ளது.

15.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை நெடுக்குளம் தாய்மார் கழகம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை வசந்தபுரம் C.C. சனசமூக நிலையம், பி.ப 2.30மணி தொடக்கம் 3.30மணி வரை கெலன்தோட்டம்.

16.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை 3 ஆம்குறுக்குத்தெரு கொழும்புத்துறை சனசமூக நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை 1 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை சனசமூக நிலையம், பி.ப 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை 2 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை சனசமூக நிலையம்.

17.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை எழிலூர் சனசமூக நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை 4 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை, பி.ப 2.30 மணி தொடக்கம்3.30மணிவரை5ஆம்குறுக்குத்தெரு கொழும்புத்துறை.

20.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11.30 மணிவரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை மகேந்தன் புரம், பி.ப 2.30 மணிதொடக்கம் 3.30மணிவரை வளன்புரம்.

21.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை சென்மேரீஸ் கோயில் (A.V.T]), மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை A.V. வீதி புகையிரத வீதி சந்தி, பி.ப 2.30மணி தொடக்கம் 3.30 மணவரை கொழும்புத்துறை விதானையார் லேன்.

22.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப11 மணி வரை பாஷையூர் சனசமூக நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை ஈச்சமோட்டை சனசமூக நிலையம், பி.ப 2.30 மணி தொடக்கம் பி.ப 3.30மணிவரை புதுக்குடியிருப்பு.

23.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை பாண்டியன் தாழ்வு (புனித அன்னம்மாள் கோயில் அருகில்), மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1மணிவரை வில்வந்தெரு, பி.ப 2.30 மணி தொடக்கம் 3.30மணி வரை புளியடி சந்தி இலந்தைக்குளம் வீதி.

24.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை பாஷையூர் மகப்பேற்று நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை விதானையார் லேன் ஈச்சமோட்டை,பி.ப 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை கொய்யத்தோட்டம் சனசமூக நிலையம்.

27.06.2016 காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை சுண்டிக்குளி சனசமூக நிலையம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை மேலதிக பிரதேசம் என யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ

நேர்மையும் நல்லெண்ணமும் இருக்கின்ற போதெல்லாம் இறைவனின் உதவியும் உள்ளது.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மீண்டுமொரு சத்தியம் செய்ய வேண்டும்

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்காகப் பாடுபட வேண்டும் என்ற கருத்துக்கள் வலுவடைந்து வருகின்றன.

தமிழ் அரசியல்வாதிகளின் கடந்த காலப் போக்குகளால் மக்கள் மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகள் சிலரின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பதாக உணரப்படுகிறது.

இந்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் நேர்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர். தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்கள் ஆதரிப்பர்; வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிப்பர்; யாராவது புது அரசியல் கட்சியை ஆரம்பித்தால் வழமைப்படி துரோகப்பட்டம் சூட்டி அந்த அரசியல் கட்சியை ஓரங்கட்ட முடியும் என்ற நினைப்புகளை தலைமுறை இடைவெளிகள் நிச்சயம் வெட்டிச் சரிக்கும் என்ற உண்மையை அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். பொதுவில் சூழ்நிலைகள் ஒரேமாதிரியாக இருப்பதில்லை என்பதால் தமிழ் அரசியல்வாதிகள் தமக்கு வாக்களித்து பதவியைக் கொடுத்த தமிழ் மக்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்.

எனினும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அரசியல்வாதிகளில் பலர் தமிழ் மக்களை- அவர்கள் படும் துன்பங்களை, அவலங்களை மறந்தவர்களாக செயற்படுகின்றனர்.

இதற்கு மேலாக தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்க வேண்டிய இடங்களில் தங்களின் சுயநல அரசியலைப் புகுத்தி குழப்பங்களை ஏற்படுத்துவதையும், நேரத்தை வீணடிப்பதையும் அபிவிருத்தி முயற்சிகள் பற்றி சிந்திப்பதற்கே இடம் தராமலும் எங்களுக்கான சந்தர்ப்பங்கள் வீணடிக்கப்படுகின்றன.

இந்த நிலைமை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இருக்கின்ற போதிலும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இடையே இவற்றின் வெளிப்படுகை தமிழ் மக்களால் நேரடியாக உணரப்படுகிறது.

எனவே வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தமக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக பயன்படுத்த வேண்டும்.

இதற்கான சூழமைவு இன்னமும் கலைந்து போகவில்லை. கட்சித் தலைமைக்கு விசுவாசமாக இருந்தால், அடுத்த தேர்தலிலும் ஆசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வு ஏற்படாத வரையிலுமே சாத்தியமாகும்.

மாறாக தமிழ் மக்கள் தமது இத்துணை அவலத்துக்கு காரணம் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகள்தான் என்று உணரத் தலைப்பட்டால், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

ஆகவே அன்பார்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே! நீங்கள் மீண்டும் ஒரு தடவை சத்தியம் செய்ய வேண்டும். அந்த சத்தியம் தமிழ் மக்களின் உயர் வாழ்வுக்காக வடக்கு மாகாண சபையில் நாம் இயங்குவோம்.

எங்கள் மக்களின் குறைகளை தீர்க்க பாடுபடுவோம். எந்த அரசியல் தலைமைகளும் எங்களை பிழையாக வழிநடத்த விடமாட்டோம் என்பதாக இருக்க வேண்டும்.

இவ்வாறான ஒரு சத்தியமும் அதன் வழிச் செயலும் எங்கள் மக்களை உயர் நிலைக்கு கொண்டுவரும் என்பது நாம் செய்யும் சத்தியம்.

## வலி வடக்கில் உள்ள பாரம்பரிய கோவில்களை தரிசிப்பதற்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் உள்ள பாரம்பரிய கோவில்களான மயிலிட்டி கண்ணகி அம்மன் கோவில், மயிலிட்டி முருகன் கோவில், மயிலிட்டி குளத்தடி அம்மன் கோவில், முலவை செபமாலை மாதா கோவில், முலவை காளி கோவல் ஆகியவற்றை பொது மக்கள் தரிசிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சருக்கு கடந்த 4ஆம் திகதி நலன்புரி நிலையங்களின் பொது நிர்வாக சபையினர் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தனர்.

குறித்த கோவில்களுக்கு சென்று தரிசிப்பதற்காக கடந்த வருடம் அனுமதி வழங்கப்பட்டதென்றும் அதே போன்று இம்முறையும் பாரம்பரிய கோவில்களை தரிசிப்பதற்கு அனுமதி வழங்குமாறும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக பாதுகாப்பு அமைச்சரிடம் அவர்கள் கோரியிருந்தனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் அக்கோரிக்கைக்கான அனுமதியினை யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி வழங்கியுள்ளதாகவும் இன்றும் நாளையும் (15,16ஆம் திகதிகளில்) குறித்த வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சென்று சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதுடன் எதிர்வரும் 19ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை குறித்த வழிபாட்டு ஸ்தலங்களில் பூசை வழிபாடுகளில் பொதுமக்கள் ஈடுபடுவார்கள் எனவும் நலன்புரி நிலையங்களின் பொது நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (செ-9)

## வீதி விபத்தில் இருவர் காயம்

(அராலி)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மாணவி உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சுன்னாகம் பொது நூலகத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிள் உடுவில் பிரதேச ஒழுங்கைக்குள் திரும்ப முற்பட்ட வேளையில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (செ-5,91)

## சீனி என்ற போர்வையில் 85 கிலோ கொக்ரேயின் கடத்தல்- மூவர் கைது

சீனி என்ற போர்வையில் பிரேசில் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 85 கிலோ கொக்ரேயின் போதைப்பொருளினை சுங்க அதிகாரிகள் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

கொடவத்தை பிரதேசத்தில் கண்டெய்னர் ஒன்றில் இருந்தே இதனை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளதாகவும் இதன் பெறுமதி ஒரு பில்லியனுக்கும் அதிகம் என தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள போதை ஒழிப்பு பிரிவினரிடம் இவர்களை ஒப்படைத்துள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் புறக்கோட்டையிலுள்ள வியாபாரி ஒருவரே சீனி கொண்டு வரும் போர்வையில் இதனை கொண்டு வந்துள்ளதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக் குளம் பிரதேசம், கோவில் குளம் சிவன் கோவில் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில சூரியகட்டைககாடு பிரதேசம், மணலகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு



✦ முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.

✦ எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருககிறார். ஆனால், கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.


✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.

✦ கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் து?ய்மை பெறும்.

✦ நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம்.

✦ ராம நாமத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் அனுமன் இதை சாதித்தான்.

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



ஏழாம் நாள் (15.06.2016)

ஓங்கார ரூபனே! விநாயகனே நாம் கைதொழுதோம்
ஆனை முகத்தோனே திருமிகு பானை வயிற்றோனே
ஆங்காரம் போக்கியே எமக்கு ஆறுதல் தந்திடுவாய்
பாங்காக நீராவிபதி வீற்றிருந்து பக்தர்கலை காப்பவனே
பண்ணோடு இசைபாடி உன் பாதமலர் பணிந்தோமே
நாம் காண நல்லதொரு காட்சி தருவாய் சரணம் ஐயா

தவா, நீராவியடி

## கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் 2016ஆம் ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டுக்கான தொழிற்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமுத்திர பல்கலைக்கழக யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ். கிருஸ்ணலிங்கம் அறிவித்துள்ளார்.

நீச்சல் பயிற்சிநெறி, கடலக மாலுமி பயிற்சிநெறி (Fishing Vessel Skipper- NVQ 4), வெளிஇணைப்பு இயந்திர தொழில்நுட்பம் (OBM Mechanic), கணனிக் கற்கைநெறி (Basic Level) போன்றன கற்கைநெறிகளாக அமையும்.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்தவர்களும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கற்க் விரும்புவோர் யாழ்ப்பாணம், குருநகர் 2ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 021-7388188, 071-08349073 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

## பேராசிரியர் துரைராஜா நினைவு நிகழ்வு

(துன்னாலை)

பேராசிரியர் அழகையா துரைராஜாவின் நினைவு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் பேராசிரியர் அழகையா துரைராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக உடற் கல்விப் பணிப்பாளர் கணேசநாதன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வின்போது 2015 க.பொ.த.உயர்தரகணித பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி மாணவனுக்கு பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவுப் பரிசில் வழங்கப்படவுள்ளது. (செ-5,19)

## உரிமை கோரலின்றி இரு சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் பெயர், வயது, முகவரி அறியப்படாத ஆண் ஒருவரின் சடலமும் மார்க்கண்டு தம்பிராஜா (வயது 80) எனும் முகவரி தெரியாத ஆண் ஒருவரின் சடலமும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இரு சடலங்கள்ளையும் உறவினர் அல்லது உரித்துடையோர் நேரில் வந்து இனங்காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ். சிறிபவானந்தராஜா அறிவித்துள்ளார். (செ-12)

# வதிரி டயமன்ஸை வென்றது மணற்காடு அன்ரனிஸ் வி.க.



அரியாலை சனசமூக நிலைய 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் அரியாலை பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வதிரி டயமன்ஸை எதிர்த்து விளையாடியமணற்காடு அன்ரனிஸ் முதல் பாதியில் 2.2 என்ற ரீதியில் சமநிலையில் காணப்பட்டது. இரண்டாவது பாதியில் வேகம் கொண்ட ம.காடு அன்ரனிஸ் தொடர்ச்சியாக மூன்று கோல்போட்டு வெற்றியை தன்வசப்படுத்திக் கொண்டது. இதன்மூலம் 5.2 ரீதியில் வதிரி டயமன்ஸை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (கு)

# சரஸ்வதி சனசமூக நிலைய உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## யாழ். ஐக்கியம் வெற்றி



அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய97ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் அரியாலை பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். ஐக்கிய வி.கழகம் எதிர் ஒலிம்பிக் வி.கழகம் மோதியது. முதல் பாதியாட்டத்தில் இருஅணிகளும் தலா இரண்டு கோல்கள் வீதம் பெற்றிருந்தவேளைமுதல்பாதி 2:2 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியில் கடுமையானபோட்டி நிலவியது. ஆனாலும்தன் பலத்தை கொண்டு ஒரு கோலைப் போட்டுயாழ். ஐக்கிய வி.க. ஒலிம்பிக் வி.கழகத்தை 3:2 என்ற அடிப்படையில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (கு)

## எவரெஸ்ட் வி.கழக உதைபந்தாட்ட போட்டி

எவரெஸ்ட் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா எதிர் உரும்பிராய் திருக்குமரன் மோதியது.

இதில் திருக்குமரன் பனால்டி மூலம் வெற்றி பெற்றுள்ளது. அடுத்த போட்டியில்உருத்திரபுரம்எதிர் கொக்குவில் பொற்பதி மோதியது.

இதில் உருத்திரபுரம் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)



அச்சுவேலி விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து சுற்றுப்போட்டியில் கல்வியங்காடு Gps விளையாட்டுக்கழகத்தை இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று வீனஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.


# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

◆◆◆◆◆◆◆◆

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# றெயின்போ அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு நுழைந்தது ரேவடி



சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பா) ஞாபகார்த்தமாக 2 ஆவது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் நடைபெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியிலே றெயின்போ அணியுடன் ரேவடி அணி மோதியது.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இரு அணிகளும் இடைவேளை வரை கோல் எதனையும் போடவில்லை. இரண்டாவது பாதியில் சிறப்பாக ஆடிய ரேவடி அணி கீர்த்தி. ரஞ்சன் ஆகியோரின் கோல்களுடன் முன்னிலை பெற்றது. றெயின்போ அணி சார்பாக பிரணவன் ஒரு கோலை போட 2:1 என்ற கோல் கணக்கில் ரேவடி வெற்றி பெற்று அரையிறுதிக்கு நுழைந்தது.

ஆட்டநாயகன் விருதினை ரேவடி வீரன் தீபன் பெற்றார். அவருக்கான விருதினை சுற்றுப்போட்டி அனுசரணையாளரும் First Fresh Foods ltd (London) உரிமையாளருமான குணரட்ணம் செந்தூரன் வழங்கி கௌரவித்தார். (கு)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அணிக்கு 8 நபர் 6 ஓவர்கள் கொண்ட மேற்படி போட்டி மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. சர்வதேச விதிகளுக்கு அமைய போட்டி இடம் பெறும். போட்டிக்கட்டணமாக ஆயிரம் ரூபா அறிவிடப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 806 8249, 077 039 1487, 077 284 3157 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் எதிர்வரும் 25 ஆம்திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)



அண்மையில் நடைபெற்ற கொத்மலை சொக்ஸ் 2016 உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தமது இரண்டாவது ஆட்டத்தில் Kurunagala Maliyadewa Central College அணியினை அவர்களது சொந்த மைதானத்தில் எதிர்கொண்ட நடப்பு கொத்மலை சொக்ஸ் சம்பியன் ஹென்றியரசர் கல்லூரியினர் 12:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டம்

## நேதாஜி வெற்றி



சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பா) ஞாபகார்த்தமாக 2 ஆவது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியிலே உதயசூரியன் அணியுடன் நேதாஜி அணி மோதியது.

இடைவேளையின் முன் நேதாஜி வீரன் தருண் கோல் ஒன்றை போட முன்னிலை வகித்தது நேதாஜி அணி. இடைவேளையின் பின் கோல் முயற்சியில் ஈடுபட்ட இரு அணி வீரர்களின் செயற்பாடுகள் பின்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் தடுக்கப்பட்டது.

இறுதியில் நேதாஜி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு நுழைந்தது.

ஆட்டநாயகன் விருதினை நேதாஜி வீரன் தருண் பெற்றார். அவருக்கான விருதினை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் உறுப்பினரும் மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடுவரும் சைனிங்ஸ் உறுப்பினருமான சி.ஜெகப்பிரதாபன் வழங்கி கௌரவித்தார். (கு)

# சீனாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் யாழ் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பு

## சீன தூதுவருடனான சந்திப்பின் பின்னர் முதலமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் சீனாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக வட மாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சீனநாட்டின் இலங்கைக்கான தூதுவர் யிஸியாங் லியாங்க்கும் வட மாகாண முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்றுநேற்றையதினம் முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. அக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தற்போதுள்ள நிலவரம் தொடர்பாகவும் சீனநாட்டின் இலங்கைக்கான தூதுவர் என்னுடன் கலந்துரையாடினார்.

தான் இப் பதவிக்குவந்த பின்னர் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை சீர்படுத்தி தற்போது நல்லுறவை ஏற்படுத்தியுள்ளதாகவும் தற்போது சீன இலங்கை உறவு பல இடங்களில் நன்றாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

இலங்கை சீனாவிற்கும் இடையில் சரித்திர ரீதியாக பாக்கும் போது நல்லுறவு ஏற்பட்டிருந்தது. இலங்கையில் தனித்துவமான இனம் என ஒரு இனத்தைமட்டும் நினைக்காமல் இலங்கையில் இருக்கும் அனைத்துமக்களுடனும் சேர்ந்து நல்ல உறவைவளர்ப்பது தமது ஆவல் என தெரிவித்தார்.

அவர் இலங்கை அரசின் அனுசரணையுடன் இப் பயணத்தை மேற்கொண்டிருந்ததாக நான் காண்கிறேன். பலவிதத்தில் எமக்கிடையில் இருக்கும் சமூக அரசியல் ரீதியான முரண்பாடுகளை எவ்வாறு குறைக்கலாம் என்று தனது எண்ணங்களை கூறினார்.

நாம் சமூக ஒற்றுமைக்கு எதிர்ப்பானவர்கள் இல்லை என்றும் சம உரிமை உடையவர்களாக எம்மை நடத்தவேண்டும். அதற்கு ஏற்றவாறு அரசியல் ரீதியானமாற்றம் ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினேன். சீன மக்களுக்கும் எமக்கும் எந்தபிரச்சனையும் இலலை. சீனமக்கள் எமது தனித்துவத்தை அறிந்து கொண்டு சிங்கள மக்கள் தலைவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் கூறியிருந்தேன்.

வியாபார ரீதியாக வணிக ரீதியாக பலவிதமான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு தாம் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீன பல்கலைக்கழகங்களுக்கு எமது மாணவர்களை உள்வாங்க முடியுமா என கோரியிருந்தேன்.

தற்போது 50 பேர்வரை இலங்கையில் இருந்து சீனாவிற்கு சென்றுள்ளார்கள் என்றும் 10 பேர் யாழ்ப்பாணத்தில் இருந்து சீனப் பல்கலைகழகங்களுக்கு சென்று அவர்களுக்கு தேவையான பாடங்களைபடிக்க முடியும் என்றும் அதற்குதேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 10 மாணவர்கள் சீனாவிற்கு செல்ல வேண்டும் என்றால் சீனதூதரகத்துடன் தொடர்புகொண்டு சீனாவிற்குசெல்லமுடியும் எனவும் தெரிவித்தார். (செ-7,9)

# வலம்புரியின் செய்தியில் தவறில்லை

## உறுப்பினர் விந்தன் சபையில் கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் சர்ச்சையை ஏற்படுத்திய வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியினை தான் வழங்கியதாக பகிரங்கமாக தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன், இதற்காக ஒருபோதும் பத்திரிகையிடம் மறுப்புக் கோர முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து நான்காவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது. இதன் போது கடந்த மாகாண சபை அமர்வில் வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்த,

விலகினார் ஆளுநர், நடத்தினார் சுமந்திரன் என்ற தலைப்பு செய்தி உண்மைக்கு புறம்பானது என கூறிய உறுப்பினர் ஆனோல்ட் பத்திரிகையை சபையில் காட்டி மஞ்சள் பத்திரிகை என விமர்சித்திருந்தார். ஆனோல்டின் இந்த விமர்சிப்பு சக உறுப்பினர்களினதும், பத்திரிகையாளர்களதும் கடும்,

எதிர்ப்பின் மத்தியில் சபை குறிப்பேட்டில் இருந்து நீக்கப்பட்டது. இந்த விடயத்தினால் கடந்த மாகாண சபையின் அமர்வின் போது, பெரும் குழப்பங்களும் ஏற்பட்டன. இந்த நிலையில் குறித்த பத்திரிகை செய்தி தொடர்பில் மேலதிக நடவடிக்கைக்காக சபை நடவடிக்கை குழுவிற்கு பாரப்படுத்தப்பட்டது.

நேற்றைய தினம் மீண்டும் சபையின் அமர்வில் குறித்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது சபையின் ஆரம்பத்தில் அவைத்தலைவர் சிவஞானத்தினால் சபை நடவடிக்கைகள் குழுவுக்கு பாரப்படுத்தபட்ட விடயம் தொடர்பில் கூறப்பட்டு, குறித்த செய்தியில் தரவுத் தவறுகள் காணப்படுவதாகவும்,

ஆளுநர் கூட்டத்தினை விட்டு செல்லவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. இந்த தவறுகள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கைகள் குழு பரிந்துரை செய்யவில்லை. எனினும் தரவுத்தவறுகள் தொடர்பில் பத்திரிக்கயின் பிரதம ஆசிரியருக்கு அனுப்பிவைபதற்கு பரிந்துரை செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவைத் தலைவர், அதனை பத்திரிகையில் பிரசுரமாக்க கோருவதாகவும் சபையில் தெரிவித்தார்.

எனினும் இதன் போது குறுக்கிட்ட உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், நான் சொன்னதையே பத்திரிகை தலைப்பு செய்தியாக பிரசுரம் செய்திருந்தது. பத்திரிகை தவறு செய்யவில்லை எனவும் அதற்கு மறுப்பு கோருவது எனபதனை ஏற்றுக்கொள்ள முடி யாது என ஆவேசமாக கூறினார்.

இதன் போது ஒலிவாங்கியை நிறுத்திய அவைத் தலைவர், விந்தன் மேலும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் மறுத்தார், இதனால் கோபமடைந்த சிவாஜிலிங்கம் விந்தன் பேசுவதற்கு அனுமதி வழங்குமாறும்,

அவர்பேசுவதனை சபை குறிப்புஏட்டில் பதிவு செய்யுமாறும் வலியுறுத்தினார். எனினும் சிவாஜிலிங்கத்தின் கோரிக்கையையும் செவிமடுக்காத அவைத்தலைவர் வலம்புரி பத்திரிகை தொடர்பான வவாதத்தை தானாகவே முடிவுக்கு கொண்டுவந்தார். (செ-4)

# காட்டிக் கொடு...

பார்த்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட வெளிச்சத்தால் வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிடகையில் வைத்திருந்த கைத் தொலைபேசியை தவறவிட்ட திருடன் பின்னங்கால் பிடறியில்பட தப்பித்து ஓடியுள்ளான்.

கைத் தொலைபேசியை மீட்ட வீட்டு உரிமையாளர்கள், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அதனை ஒப்படைத்துள்ளனர்.

அதனையடுத்து, கைத் தொலைபேசியை சோதனை செய்த பொலிஸார், கந்தரோடை விகாரையடி பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபரை கைது செய்துள்ளனர். (செ-12)

# தற்கொலை...

தியை சேர்ந்த சிவராசா சிவகுலன் என்பவரே மேற்படி கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் வீடொன்றில் இருந்து தற்கொலை அங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தது. வீட்டில் வசித்தவர் என கூறப்பட்ட மன்னார் பகுதியை சேர்ந்த ஒருவரை 24 மணித்தியாலத்துக்குள் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

சம்பவதினம் அதி காலை வேளை கைப்பற்றப்பட்ட இந்தவெடி பொருட்கள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்காக இவ் வழக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் மாற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இதுவரை முன்னாள் போராளிகள் உட்பட்ட27 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

# ஜெயா - மோடி...

வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 6-வது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஜெயலலிதா ஏற்றார். பதவியேற்ற பிறகு முதல் முறையாக ஜெயலலிதா நேற்று பிரதமர் மோடியை சந்திக்க டெல்லி புறப்பட்டார். தனி விமானம் மூலம் டெல்லி சென்றிருந்த முதலமைசர ஜெயலலிதாவுக்கு மேளதாளம் முழங்க உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

விமான நிலையத்திலிருந்து டெல்லியில் உள்ள தமிழக இல்லத்திற்கு சென்ற ஜெயலலிதா சற்று நேரம் ஓய்வு எடுத்தார்.

பின்னர், சுமார் 4.00 மணியளவில் டெல்லி, ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள பிரதமர் நரேந்திர மோடி வீட்டிற்கு சென்று, பிரதமரை சந்தித்து பேசினார். அப்போது தமிழகத்திற்கு தேவையான 29 அம்ச கோரிக்கைகள் அடங்கிய 26 பக்க மனுவையும் பிரதமர் நரேந்திர மோடியிடம், ஜெயலலிதா வழங்கினார்.

அந்த மனுவில், தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும். உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும். ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க வேண்டும். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும். மேகதாதுவில் தடுப்பணை கட்டுவதை தடுக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நதி நீர் இணைப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை சிறையில் உள்ள 21 தமிழக மீனவர்களையும், 92 படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதை தடுக்க வேண்டும். இலங்கை வசம் உள்ள கச்சதீவை மீட்க வேண்டும். கச்சதீவில் உள்ள அந்தோனியார் கோவிலை புதுப்பிக்க வேண்டும் என பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளார். (செ-12)

# குற்றச் செயல்களுக்கு...

ல்கள் தொடர்பான இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டுமென்பதே அமெரிக்காவின் உறுதியான நிலைப்பாடு என தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும், குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியனவற்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இன்னும் பல விடயங்கள் அங்கு மேற்கொள்ளபபட வேண்டியுள்ள தாகவும் தெரிவித்தார்.

மேலும் காணாமல் போனவர்கள் தொடர்பிலான அலுவலகம் உருவாக்கப்பட உள்ளமை வரவேற்கப்பட வேண்டியதாகத் தெரிவித்த நிஷா, பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பு இதில் அதிகம் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (செ-12)

# வடக்கு என்றால்...

வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து நான்காவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது.

இவ் அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சரின் நிதியம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு இடம் பெற்றது. இதன் மீதான விவாதத்தில் சிவாஜிலிங்கம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், அண்மையில் கொஸ்கம சாலாவ படைமுகாம் விபத்து காரணமாக வெடிப்புக்கு உள்ளாகியிருந்தது.

இது தவிர தென்னிலங்கையில ஒரு சில மாதங்களிற்கு முன்னர் வெள்ள அனர்த்தமும் ஏற்பட்டிருந்தது. அங்கு நடைபெற்ற இந்த அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்ற அரசாங்கமும் அதன் பிரதிநிதிகளும் பல கோடிக்கான உதவிகளை வழங்கியதோடு, இன்று வரையும் அதை வழங்கி வருகின்றது.

ஆனால் இதனை விட பலமடங்கு அழிவுகள் வடக்கில் இடம்பெற்ற போது மத்திய அரசு திரும்பி கூட பார்க்கவில்லை. தென்னிலங்கையில் அனர்த்தத்தில் அழிவுற்ற மக்களின் வீடுகளுக்கு ஒரு மாதத்திற்கும் வீடு அமைத்தும் கொடுக்கின்றார்கள், ஆனால் வடக்கில் பல ஆயிரம் மக்களது வீடுகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இதற்கு எந்த நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை. இந்த நிலையில் தென்னிலங்கை மக்களுடைய கஷ்டங்கள் வேறு, வடகககு மக்களது கஷ்டங்கள் வேறு என மத்திய அரசாங்கம் செயறபடுகின்றதா? ஆகையால் இவையெல்லாம் வடக்கு தெற்கு பாகுபாட்டினையே காட்டுகின்றன. மத்திய அரசாங்கமும் எங்கள் மக்களை கைவிட்டுள்ள நிலையில்,

நாங்களும் முதலமைச்சர் நிதியத்தில் போரினால் பாதிக் கப்பட்ட மக்களை இணைத்து கொள்ளாவிட்டால் அவர்களை யார் பாதுகாப்பது? அவர்களுக்கு யார் உதவுவது? ஆகவே போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற பதம் பாவிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து இடைவிடாது முன்வைத்துக்கொண்டே இருந்தார் சிவாஜி இறுதியில்அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு, வறியவர்கள் என்ற சொற்பதம் நீக்கப்பட்டு,

போரினால் பாதிக்கப்பட்ட, உடல் உள ரீதியாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் வறுமைப்பட்ட மக்கள் என்ற சொல் புதிதாக சேர்க்கப்பட்டது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சரும் உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டு திருத்தத்திற்கு அனுமதி வழங்கினார்கள்.

## 46 கிலோ...

னிலைப்படுத்தப்பட்ட இவர்கள் இருவரும் மல்லாகம் நீதவான் விடுத்த உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணை முடிவுக்கு வநததையடுத்து நேற்று செவ்வாயன்று பிணை மனு விண்ணப்பத்தை நிராகரித்து நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாவது,

தனி மனித சுதந்திரம் எவ்வளவு முக்கியமான்தோ, அதனையும் விட, சமூக நலன் முக்கியமானது. சமூக நலன் சார்ந்து போதை வஸ்து கடத்தல் போன்ற குற்றங்களுக்கு விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே, மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்க முடியும் என் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம் தெரிவிக்கின்றது.

இந்த இரண்டு சந்தேக நபர்களும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். ஏன் அவர்கள் யாழ்ப்பாணம் இளவாலைக்கு வாகனத்தில் வந்தார்கள் என்பதற்குரிய எந்தவிதமான காரணமும் பிணை மனுவில் தெரிவிக்கப்படவில்லை. அவர்களை ஏன் பிணையில் விட வேண்டும் என்பதற்குரிய விதிவிலக்கான காரணங்களும்மனுவில்குறிப்பிடப்படவில்லை.

தென்னிந்தியாவில் இருந்து கேரள கஞ்சா கடத்தும் முக்கியமான இடமாக இளவாலை காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு கேரளா கஞ்சா உட்பட போதை வஸ்துக்கள் கடத்தப்படுகின்றன. கடலோரப் பகுதிகளில் அண்மைக் காலமாக போதை வஸ்து மற்றும் கேரளா கஞ்சா கடத்தியமைக்காகப் பல கைதுகள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த வழக்கில் பெரும் தொகையான 46 கிலோ நிறையுடைய கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சமூகத் துரோகக் குற்றங்களில் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, பாராளுமன்றம் போதை வஸ்து சட்டத்தை இயற்றியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் வெளிமாவட்டத்தினர் வந்து சமூக விரோத போதைவஸ்து குற்றங்கள் செய்வதை மேல் நீதிமன்றம் சகித்துக் கொள்ளமாட்டாது. அத்தகைய குற்றச் செயல்கள் இடம் பெறுவதை அனுமதிக்கவும் முடியாது. அதன் அடிப்படையில் இந்த இரண்டு சந்தேக நபர்களினதும் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது என நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (செ-12)

## 91 கிலோ கிராம்...

பொலிஸ் விசேட பிரிவும் நிதி அமைச்சின் சட்ட விரோத போதைப்பொருள் தடுப்புப் பிரிவும் இணைந்து கைப்பற்றிய 127.5 கோடி ரூபாய் பெறுதியான 91 கிலோ கிராம் கொக்கேன் போதைப்பொருள் கொள்கலனை நேற்று பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்வையிட்டார்.

ஒறுகொடவத்தையில் உள்ள சுங்க திணைக்களத்தின் களஞ்சியப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த போதைப் பொருள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதுடன், இதன் பெறுமதி ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.

சீனி இறக்குமதி செய்யும் போர்வையில் பிரேசில் நாட்டிலிருந்து இந்த போதைப் பொருள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் 50 கிலோ கிராம் எடைகொண்ட சீனி உறைகளுக்கு மத்தியில் கருப்பு நிற மூன்று உறைகளில் இந்த போதைப்பொருள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் சட்டவிரோத போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸ் விசேட பிரிவுடன் இணைந்து இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒறுகொடவத்தையில் உள்ள சுங்கப் பிரிவுக்கு திடீர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, இந்த கொள்கலனையும் பார்வையிட்டதோடு இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குழுக்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் வலுப்படுத்துவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். மிகவும் நேர்மையான முறையில் தமது பணியை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் ஜனாதிபதியுடன் இங்கு பிரசன்னமாகியிருந்தார். (செ-12)

## முஸ்லிம் நபரை...

சமர்ப்பித்த மொஹமட் அமீர் எனும் நபர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் கடுமையாக தாக்கப்பட்ட தன்னை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக கூறிய மனுதாரர், பொலிஸார் தனக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக களுத்துறை நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ததாக அறிவித்தார்.

இதன்மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி அவர் உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தார்.

நேற்று வழக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது கருத்துக்களை தெரிவித்த அரச தரப்பின் வழக்கறிஞர், இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மனுதாரரிடம் மன்னிப்புக் கோர பொலிஸார் தயார் என்று அறிவித்தார்.

அதற்கு மனுதாரர் இணக்கம் தெரிவித்தார்.

அதன் பின்னர் திறந்த நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி முன்னர் தாக்கப்பட்ட நபரிடம் அளுத்கம பொலிஸார் நிலையத்தின் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரியினால் மன்னிப்புக் கோரப்பட்டது.

இதேவேளை மனுதாரருக்கு எதிராக களுத்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதைபொருள் வழக்கை வாபஸ் பெறுவதாகவும் பொலிஸார் அறிவித்தனர். (செ-12)

## மேலதிக முகாம்...

ற்ற வேண்டும் என்ற கோரிக்கை க்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணங்கவில்லை. ஆனால் அங்கு மேலதிகமாக உள்ள படைமுகாம் களை அகற்ற வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

படையினர் தமது சொத்துக்களை சுவீகரித்து வைத்துள்ளதாக வடமாகாண மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

அத்துடன் படையினர் வடக்கில் விடுதிகளை நடத்துவது மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பிலும் அங்குள்ள மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், மக்களின் சொத்துக் களை படையினர் விடுவிக்க வேண்டும். வடமாகாண த்தில் தேசிய பாதுகாப்புக்கு அவசியமான முகாம்களை மட்டும் வைத்திருக்க வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக வடக்கில் தொடர்ந்து காணப்படும் படைத்தரப்பின் ஆக்கிரமிப்பு மீள்குடியேற்றத்துக்கும், இயல்பு வாழ்வுக்கும் தடையாக இருப்பதாக வடமாகாண் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில் வடமாகாணத்தில் இருந்து எந்தவொரு படைமுகாமும்அகற்றப்படமாட்டாது எனறும், அங்கிருந்து படையினரை வெளியேற்றப் போவதில்லை எனவும் அரசாங்கமும், படைத்தரப்பும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## முதலமைச்சர்...

முதலமைச்சரினால் முதலமைச்சர் நிதியச் சட்டம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டு அங்கீகாரமளிக்கப்பட்ட நிதியச் சட்டம் வடக்கு மாகாண ஆளுநருக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதன் பின்னரே வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியச் சட்டத்திற்கு மத்திய அரசினால் அங்கீகாரம் அளிக்கப்படுமா? என்பது குறித்து தெரியவரும்.

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதி அனைத்தும் மத்திய அரசாங்கத்தின் ஊடக அல்லது மத்திய திறைசேரியின் ஊடாகவே வழங்கப்படும். ஆனால் முதலமைச்சர் நிதியம் உருவாக்கப்படுமாயின் வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட வடக்கிற்கு நிதியுதவி செய்யும் அனைவரும் நேரடியாகவே முதலமைச்சர் நிதியத்திற்கு வழங்க முடியும்.

இந்நிலையில் மேற்படி நிதியத்திற்கு முன்னைய ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஒப்புதல் வழங்காத நிலையில், மீண்டும் இரண்டு வருடங்களின் பின்னர் புதிய ஆளுநர் ரெஜினோல்ட கூரேவிற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்கள் இந்த நியதி சட்டத்தினால் பெரிதும் நன்மையடைவார்கள் என சபையில் சுட்டிக்காட்டப்பட்டது. (செ-4)

## வலம்புரி பிரதம...

யாகியிருந்த விலகினார் ஆளுநர், நடத்தினார் சுமந்திரன் என்ற தலைப்பில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பில் விவாதம் நடைபெற்று பெரும் குழப்பங்களும் ஏற்பட்டிருந்தது. இந்த விவாதத்தின் தொடர்ச்சியாக குறித்த விடயம் சபை நடவடிக்கைகள் குழுவிற்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த சபை நடவடிக்கைகள் குழுவின் பரிந்துரைகளை வாசித்த அவைத்தலைவர் குறித்த செய்தி தொடர்பிலான விளக்கம் ஒன்றினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு அனுப்பி வைப்பது என்ற முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

குறித்த செய்தியில் தரவுத்தவறுகள் காணப்படுவதாகவும், இந்த தவறுகள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கைகள் குழு பரிந்துரை செய்யவில்லை. எனினும் தரவுத்தவறுகள் தொடர்பில் பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு கடிதம் அனுப்பி வைப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதா கவும் சுட்டிக்காட்டிய அவைத்தலைவர், அதனை பத்திரிகையில் பிரசுரமாக்க கோருவதாகவும் சபையில் தெரிவித்தார். (செ-4)

## 30 நிமிட சபை...

றைய அமர்வில், போக்குவரத்து அதிகார சபை ஒன்றினை உருவாக்குவதற்கு நியதி சட்டத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் திருத்தங்களுடன் ஒப்புதல் அளித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் கூறி.

இந்த திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு மதிய இடைவேளையின் பின்னரும் அரைமணித்தியாலம் சபையை கூட்டுமாறு கோரினார். இதன் போதே அமைச்சர் கோரிய அந்த முப்பது நிமிடம் சபையை நடத்துவதற்கு பதினைந்து நிமிடங்கள் வரை விவாதம் நடத்தி அவைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சிலர் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் தனியார்-அரச பயணிகள் பேருந்துகளிடையே பெரும் மோதல்கள் நடைபெற்று வருகின்றது. இந்த மோதலின் உச்சத்தில் எதிர்வரும் சில நாட்களில் பாரிய பணிப்புறக்கணிப்பு ஒன்றினை அவர்கள் மேற்கொள்ள உள்ளனர். ஆகையால் இவர்களை கட்டுப்படுத்துவதற்கு எமக்கு அதிகாரங்கள் தேவைப்படுகின்றது.

எங்களுடைய நியதி சட்டங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து அதிகார சபை ஒன்றினை உருவாக்குவதற்கு நியதி சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து அனுப்பி வைத்துள்ளார். ஆகையால் இன்றைய தினம் (நேற்று) மதிய உணவின் பின்னர் அரை மணித்தியாலம் சபையை நடத்துமாறு போக்குவரத்து அமைச்சர் கோரினார்.

எனினும் உடனடியாக இதெல்லாம் முடியாது, சாத்தியமில்லை என அவைத்தலைவர் கூறினார். இதன் போது மீண்டும் கருத்து தெரிவித்த அமைச்சர் டெனிஸ்வரன், வடக்கு மாகாணத்தின் நியதி சட்டத்தின் பின்னர் போக்குவரத்தில் ஏதும் பாரிய பிரச்சினை ஏற்பட்டால் ஒட்டுமொத்த பொறுப்பினையும் வடக்கு மாகாண சபையே ஏற்க வேண்டும் என் கூறினார்.

மேலும் தேவையற்ற விடயங்களில் அதிக நேரங்களை செலவிடும் இந்த சபை பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை எனவும் அவைத்தலைவரை அவர் சாடினார்.

இதன்போது இதற்கு நீங்களும் தான் பொறுப்பு என அவைத்தலைவர் கூற, இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன் போது ஆளுநர் தனக்கு இந்த ஒப்புதலை அனுப்பி வைக்கவில்லை, எனக்கு கிடைக்கப்பெறாத விடயம் தொடர்பில் நான் எவ்வாறு விவாதிப்பது என அவைத்தலைவர் கூற, மீண்டும் இது மதிய இடைவேளையின் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என விடாப்பிடியாக நின்றார் அமைச்சர் டெனிஸ்வரன்.

எடுத்துக்கொள்ள முடியாது என மீண்டும் அவைத்தலைவர் விடாப்பிடியாக நிற்க, உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொணடால் எனக்கு நேரம் தேவையில்லை என டெனிஸ்வரன் கூறினார். இது பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஆகவே அமைச்சருக்கு நேரம் வழங்கப்பட வேண்டும் என விந்தனும் வலியுறுத்தினார்.

இதன் பின்னர் அனைவரது ஒத்துழைப்புடன் மதிய இடைவேளையின் பின்னர் மூன்று மணியளவில் சபை மீண்டும் கூடி போக்குவரத்து அதிகார சபை நியதி சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. (செ-4)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி
(பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
June அனுமதிகள் முற்றுப்பெற்றன.
July அணியில் இணைய முந்துங்கள்!
கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
077 36 16 798
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



வேலையாட்கள் தேவை
யாழ். நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (புத்தகம் கட்டுனா) பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:-
077 282 4321
(சி-4887)



DEUTSCH வகுப்புக்கள்
மாலுசந்தி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிளிநொச்சி ஆகிய இடங்களில் கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு : T. நந்தன்
077 078 2022
(சி-4884)



பணியாளர்கள் தேவை
✓ விற்பனையாளர்கள்
✓ களஞ்சிய காப்பாளர்
✓ சிட்டை எழுதுனர்
தங்குமிடம் உணவு இலவசம்.
(தகுதிற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு :-
0777 144 947
077 847 3222
(4890)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-16

வலம்புரி கல்விப்பிரிவு


பகுதி-I

## தமிழ்க் கல்விக் கழகம்

நேரம்:- 45 நிமிடங்கள்


◆ 1ம் 2ம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களை ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

01)



உரு 1 உரு 2 1) 2) 3)

02)



உரு 1 உரு 2 1) 2) 3)

◆ தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற்கொண்டு 3ம் 4ம் வினாக்களுககு விடை தருக.




03)தண்ணீரில் மட்டும் வாழ்பவை எவை

1. A யும் b யும் 2.A யும் E யும் 3.D யும் E யும்

04)தரையிலும் நீரிலும் வாழ்பவை எவை?

1. B யும் D யும் 2. B யும் E யும் 3. A யும் D யும்

◆ பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

05) பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
2.அன்பான நண்பனை ஆபத்தில் அறி
3.உண்ணாச்சொத்து மண்ணாய் போகும்

06)மாலதி பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும் யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது.

1.சுயநலவாதி 2. வள்ளல் 3. உலோபி

◆ 7ம் 8 ம் வினாக்களில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

07)

| 1. | 2. | 3. |
|---|---|---|
| தொலைபேசி<br>வானொலி<br>நூல் | புத்தகம்<br>பென்சில்<br>பேனை | கதிரை<br>மேசை<br>கட்டில் |

08)

| 1. | 2. | 3. |
|---|---|---|
| மாம்பழம்<br>வாழைப்பழம்<br>அன்னாசிப்பழம் | அம்மா<br>அப்பா<br>தம்பி | ஆசிரியர்<br>மாணவர்<br>சட்டத்தரணி |

◆ 20 ஆம் 21 ஆம் வினாவிற்கான வாக்கியங்களை சரியாக அமைப்பதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க.

20) குயில் கூடு கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பறவையாகும்.

1. குஞ்சு என்பதற்கு பதிலாக குட்டி என்று மாற்றுதல்
2. குயில் என்பதற்கு பதிலாக காகம் என்று மாற்றுதல்
3. பறவை என்பதற்கு பதிலாக விலங்கு என்று மாற்றுதல்

21) சிங்கம் மானை துரத்திப் பிடித்து துப்பியது.

1. துப்பியது என்பதற்கு பதிலாக சாப்பிட்டது என்பதை மாற்றுதல்
2. சிங்கம் என்பதற்கு பதிலாக நரி என்பதை மாற்றுதல்
3. மான் என்பதற்கு பதிலாக மரை என்பதை மாற்றுதல்

22) கிழக்குத் திசையை நோக்கி செல்லும் ஒருவரின் நிழல் அவரது பின்பக்கம் விழுந்தது எனின் அவர் செல்லும் நேரம் யாது?

1. காலை  2. மதியம்  3. மாலை

◆ அடைப்புக்குள் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப 23, 24 ஆம் வினாக்களுக்குரிய விடைகளை தெரிவு செய்க.

23)

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 24 | 11 | 14 | 15 |
| | 23 | | 13 | A |
| | 22 | | 18 | |
| B | 21 | 20 | | |

எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண்

1) 13  2) 9  3) 16

24) எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்புக்குப் பொருத்தமான எண்

1) 29  2) 28  3) 30

◆ தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். 15 ஆவது போட்டி 2012 இல் நடைபெற்றது எனின்,

25) 16 ஆவது இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்த தயாராக வேண்டிய வருடம் எது?

1) 2016  2) 2018  3) 2020

26) 2028 ஆம் வருடம் எத்தனையாவது இல்ல விளையாட்டு போட்டி நடைபெறும்?

1) 19 ஆவது  2) 20 ஆவது  3) 21 ஆவது

27) 1 தொடக்கம் 6 வரை இலக்கம் இடப்பட்ட தாயக்கட்டை ஒன்று 6 தடவைகள் குலுக்கப்பட்டு கிடைத்த இலக்கங்கள் குறிக்கப்பட்டன. கிடைத்த இலக்கங்களின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்தபட்சப் பெறுமானமும் மிகக் குறைந்த பெறுமானமும் முறையே

1) 36 உம் 6 உம்  2) 6 உம் 1 உம்  3) 25 உம் 5 உம்

28) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றினுள் மூன்று நீல நிறப் பந்துகளும் 2 சிவப்பு நிற பந்துகளும் ஒரு பச்சை நிறப் பந்தும் இருந்தன. பந்துகளைப் பார்க்காமல் பெட்டியினுள் கையை விட்டு தடவைக்கு ஒரு பந்து வீதம் வெளியே எடுக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்படும் பந்துகளில் ஒன்று, நீல நிறமாக இருக்கும் என எத்தனையாவது தடவைக்குள் உறுதியாகக் கூற முடியும்.


1. இரண்டாவது  2. மூன்றாவது  3. நான்காவது

◆ பின்வரும் பிராணிகளின் உறுப்புக்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் பிழையான உறுப்பு உள்ள உருவை தெரிவு செய்க.

29)


1)


2)


3)

30)


1)


2)


3)

◆ 9ம் 10 ம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள எழுத்துக்களும் உருக்களும் ஓர் ஆடியில் விம்பமாகத் தோன்றும் விதத்தை தெரிவு செய்க.

09)




1) 2) 3)

10)




1) 2) 3)

11) மரக்கறி வியாபாரி ஒரு 1kg கத்தரியை நிறுப்பதற்கு 1kg படிக்கல்லுக்கு பதிலாக சம நிறையுடைய 4 மாங்காய்களைப் பயன்படுத்தினார். ஒரு மாங்காயின் நிறை யாது?

1) 250g 2) 550g 3) 750g


◆ சரியான விடையைத் தெரிவு செய்க.




12) மேலே உள்ள வரிப்படத்தில் A எழுத்து உள்ள இடத்தில் உள்ளடக்கப்படுவதற்கு மிகவும் பொருத்தமான விடை எது?

1.யானை 2. நரி 3. மிருகம்

13)




இவ் வரிப்படத்தில் XYZ ஆகிய வட்டங்களில் உள்ளடக்கப்படுவதற்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே

1.வாழைப்பழம், மாம்பழம், பழங்கள்
2.மாகாணம், மாவட்டம், நாடு
3.பாடசாலை, கோட்டம், வலயம்

வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.


14)

| | | | |
|---|---|---|---|
| 10 | 19 | 28 | 1) 46 |
| 19 | 28 | 37 | 2) 48 |
| 28 | 37 | .......... | 3) 50 |

15)

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | 1) 51 |
| 25 | 36 | .......... | 2) 49 |
| 5 | 6 | 7 | 3) 52 |

16)



முழு உருவத்தினதும் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?

1) 4 2) 3 3) 5

17) நிதர்சனின் வயது மாலாவின் வயதைப் போல் 7 மடங்கு ஆகும். அவ்விருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 64 வருடங்கள் எனின் நிதர்சனின் வயது எத்தனை வருடங்கள்?

1) 63 2) 57 3) 56

◆ அடைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் ஏற்ப 18 ம் 19ம் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| A= புலமைப்பரிசில் | E= மாதம் |
| B= எப்போது | F= நடைபெறும் |
| C= வெளிவரும்? | G= அடுத்த |
| D= பரீட்சை | H= முடிவுகள் |

18) அர்த்தமுள்ள வாக்கியம் ஒன்றை அமைப்பதற்கு பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் எது?

1.GEADF 2.GDAEF 3.GEAHF

19) வினாவாக்கியம் ஒன்றை அமைப்பதற்கு பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் எது?

1.BADHC 2.BGADH 3.BAFHC

◆ ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட சொற்கூட்டங்களுடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான சொல்லினைத் தெரிவு செய்க.

31) கிளை
தண்டு
இலை
வேர்

1. பழம் 2. காய் 3. மரம்

32) அப்பா
அம்மா
தம்பி
தங்கை

1. உறவு 2. குடும்பம் 3. வீடு

33) காந்தன் 2014 ஆம் ஆண்டில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தினமும் ரூ.10.00 வீதம் உண்டியலில் இட்டான். அதன்படி அவ்விரண்டு மாதங்களிலும் அவன் உண்டியலில் இட்ட முழுப் பணத்தொகை எவ்வளவு?

1. ரூ.590.00 2.ரூ.540.00 3.ரூ.600.00

34) சுசிலாவின் தாய் காந்தி, நளினியின் சகோதரி சுசிலா, நளினியின் தந்தை ராஜன். காந்தியும் சுசிலாவும் ராஜனுக்கு முறையே என்ன உறவுமுறையானவர்கள்?

1. மகளும் மனைவியும் 2.மனைவியும் சகோதரியும் 3.மனைவியும் மகளும்

◆ 35 ஆம் 36 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

35) சங்கரும் பூங்கொடியும் உடன் பிறந்தவர்கள். அவர்களின் வீட்டைச் சுற்றிலும் ........................... கொய்யா மரங்கள்.......................................

1. அளவில்லாத - காணப்பட்டது 2.எண்ணற்ற-இருந்தன 3.அதிக-உள்ளன

36)"அன்புக் குழந்தைகளே... .......... இருந்தால் மட்டும் பறக்க...........பறப்பதற்கு பறவைகளின் உடலமைப்பும் வேண்டும்..." என்ற தேவதை அடுத்த நொடியில் அவர்களைப் பறவைகளாக மாற்றியது.

1. இறக்கைகள்- முடியாது 2. சிறகுகள் -உள்ளன 3.மனம்-முடியாது

37)நான் ரூ. 90/- ஐக் கொடுத்து 1 மாம்பழத்தையும் 2 வாழைப்பழங்களையும் வாங்கினேன். மாம்பழம் ஒன்றின் விலை வாழைப்பழம் ஒன்றின் விலையிலும் பார்க்க ரூ.15/- அதிகமாகும் எனின் வாழைப்பழம் ஒன்றின் விலை யாது?

1. ரூ.25.00 2.ரூ.35.00 3. ரூ.30.00

◆ பின்வரும் தகவல்களை வாசித்து கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளை தெரிவு செய்க.


சுரேஸ், மதி, காந்தன், அஸிஸ் ஆகியோர் இந்தியாவை சேர்ந்தவர்கள். ரகு, ராஜன், ராதா, ராமு ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். காந்தன், ரகு, அஸிஸ் ஆகியோர் வைத்தியர்கள். மதி, ரகு, ராஜன் இளையவர்கள்.

38) இளைய வைத்தியர் யார்

1.காந்தன் 2. அஸிஸ் 3. ரகு

39) இந்தியாவைச் சேர்ந்த இளையவர் அல்லாதவர் யார்?

1.மதி 2. ரகு 3. காந்தன்

40) 

உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

1) 12 2)13 3) 14

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (16.06.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்
★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)
★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)
★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)
★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)
★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)
★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)